ஸ்ரீ ராமஜெயம்

அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்

அழகர்கோயில் வரலாறு

உ

ஸ்ரீ ராமஜெயம்

கள்ளழகர் தல வரலாறு

பதிப்பு

அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்

அழகர்கோயில்

மதுரை மாவட்டம்

முதல்	பதிப்பு			
இரண்டாம்	பதிப்பு		-	2000 பிரதிகள்
மூன்றாம்	பதிப்பு		-	4800 பிரதிகள்
நான்காம்	பதிப்பு -	1994	-	5000 பிரதிகள்
ஐந்தாம்	பதிப்பு -	1996	-	3000 பிரதிகள்
ஆறாம்	பதிப்பு -	2000	-	5000 பிரதிகள்

குருகுலம் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
(மகளிர் தொண்டு நிறுவனம்) வேதாரண்யம் – 614 810

விலை ரூ. 15–00

அணிந்துரை

"ஆயிரம் தோள் பரப்பி முடியாயிரம் மின்னலக
ஆயிரம் பைந்தலைய அனந்த சயனம் ஆளும் மலை
ஆயிரமாறுகளும் சுனைகள் பல வாயிரமும்
ஆயிரம் பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே"

என்று பெரியாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய அழகர்மலை இயற்கை அன்னையின் எழில்மிகு கைத்திறனால், காண்போர் கண்ணுக்கும் கருத்துக்கும் பெருவிருநதாக, காலம் காலமாக, நின்று நிலவி, பச்சை மாமலை போல் மேனி கொண்ட பவளச் செவ்வாய் கொண்ட எம்பெருமானின் புகழ்பாடி வருகின்றன. "அழகர்மலையே எம்பெருமான் திருமேனி" என்று எண்ணி, எண்ணி, காதலாகி, கசிந்து, கண்ணீர் மல்கி, மெய்மறந்து ஆடிப்பாடுவோர் இன்றுமுண்டு".

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாடப்பட்ட "பரிபாடல்" என்னும் சங்க இலக்கியத்தில் இத்திருமலையை திருமாலின் திருமேனியாகவே கருதி அம்மலை நோக்கி மக்கள் தொழுகின்றனர் என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. பரிபாடலுக்குப் பின் "சிலப்பதிகாரம்" என்ற நூலிலும் இங்கு கோயில் கொண்டுள்ள திருமாலைப் பற்றியும் தீர்த்தங்களைப் பற்றியும் பெருமையாகக் கூறப்பட்டுள்ளது. அழகுக்கும், அருளுக்கும் நடமாடும் பொருளாக விளங்கிய ஆண்டாள் நாச்சியார் சிறப்புப் பெற்று இங்கு பெருமாளைத் திருக்கரம் பற்றிய திருமண விழாவும் இங்கு நடைபெற்றுள்ளது. அமர்ந்த திருக்கோலத்தில் உள்ள ஆண்டாள் நாச்சியாரின் அழகு சொட்டும் செப்புத் திருமேனி இந்த வைணவத் தலத்தின் தனிச்சிறப்பு.

மலைவளம், சோலைவளம், நீர்வளம், நிலவளம் இவை எல்லாவற்றிற்கும் மேலாக எம்பெருமானின் அருள் வளம் நிரம்பி வழியும் அழகுத்தலம் அழகர்மலை.

"சிலம்பார்க்க வந்து தெய்வமகளிர் களாடும் சீர்
சிலம்பாறு பாயும் தென் மாலிருஞ்சோலையே"
"எல்லாவிடத்தும் எங்கும் பரந்து பல்லாண்டொலி
செல்லா நிற்கும் சீர்த்தென் திருமாலிருஞ்சோலையே"

ஆவத்தனமென்று அமரர்களும் நன் முனிவரும்
சேவித்திருக்கும் தென்மாலிருஞ்சோலையே"
"குலமலை, கோலமலை, குளிர்மாமலை கொற்றமலை
நிலமலை, நீண்டமலை, திருமாலிருஞ்சோலையதே"

என்று பெயாழ்வார் இறுமாந்து, ஆனந்தக்கூத்தாடுகிறார்.

ஆண்டாள் நாச்சியார் அழகர்மலையின் ஒவ்வொரு சிறப்பிலும் பெருமானின் திருவுருவத்தையே கண்டு உள்ளம் பறிகொடுத்து அழகுத் தமிழில் அழகனுக்குத் தமிழ்ப் பாமாலை சாற்றி மகிழ்கின்றார்.

இலக்கியம், இயற்கை, வரலாறு இவை எல்லாவற்றிலும் ஏற்றம் பெற்றவை, அழகர்மலையும் அங்குறையும் எம்பெருமானும். அழகர்மலை காலத்தால் பழையது. காவியச் சிறப்பால் உயர்ந்து - காட்டு வளத்தால் கவின் பெற்றது - நீர்வளத்தால் என்றென்றும் நின்று நிலவுவது - நிலவளத்தால் ஏழையர் தம்மையும் ஏற்றம் பெறச் செய்தது. அழகர் அருள் வளத்தினால் அவனியெங்குமிருந்து வரும் மக்கள் வெள்ளம் கண்கொள்ளாக் காட்சி - வந்தோரே, மீண்டும், மீண்டும் வரும் அற்புதத்தலம் அழகர்மலை.

ஆங்கிலேயர் ஆட்சியில், ஆங்கிலேய மாவட்ட ஆட்சியாளர்களே இக்கோயிலின் நிர்வாக அதிகாரிகளாகப் பணியாற்றினர் என்பது இத்தலத்தின் தனிச்சிறப்பு - திருவரங்கததிருக்கோயிலும், அழகாமலைக் கோயிலும் அநேக ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன. இரண்டு கோயில்களும் கோட்டை, மதிற்சுவர்கள் உடையன. இரண்டு தலங்களிலுள்ள நெல் சேர்களும் ஒரே தோற்றமுடையன. சுதர்சன வழிபாடு இரண்டு கோயில்களிலும் உள்ள பிரதான வாயில்கள் "ஆர்யன் வாசல்" "ஆர்யபடான் வாசல்" என்று அழைக்கப்படுகிறது. இரண்டு கோயில்களிலும் பிரசாதங்கள் தயாரிப்பதும், விளக்கிடுவதும் தனி நெய்யாலேயே நடைபெறுகின்றன. திருவிழாக்கள் நடைபெறுகின்ற முறைகள் ஒன்றாகவே உள்ளது. "கோயில் ஒழுகு" முறை இரண்டு கோயிலிலும் பின்பற்றப்படுகிறது.

15-3-1940 அன்றிலிருந்து "குருகுலம்" ஒன்று ஆரம்பிக்கப் பெற்று இன்று பெரும் பாடசாலையாக மலர்ந்துள்ளது. 29-12-1936

அன்று ஆரம்பிக்கப்பட்ட அருமையான நூலகம் ஒன்று மணிவிழாவை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. மதுரைத் தமிழ் சங்கத்தை தோற்றுவித்தவரே சுந்தரராசப் பெருமாள்தான் என்று ஒரு வரலாறு கூறுகிறது. கலம்பகத்தார் சுந்தரராசப்பெருமாளை, "தமிழ் தழைத்திினை" என்றும், தண்டமிழ்ச் சங்கத் தனி இறைவனே" என்றும் குறிப்பிட்டுள்ளார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, இடைக்காடர் என்பவரால் அழகர்மலையில் "மருத்துவ மன்றம்" ஏற்படுத்தப்பட்டு சித்த வைத்திய சாத்திரங்கள் வளர்க்கப்பட்டுள்ளது. ஆழ்வார்கள் பன்னிருவரில் ஆறு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்விக்கப்பட்ட அருந்தலம் அழகர்மலை.

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே" என்றபடி அழகர்மலைத் திருவிழாக்களில் சித்திரை மாதம் அழகர் வைகை ஆற்றிலே இறங்கும் திருவிழா நாடறிந்தது. தமிழ்நாடு அறநிலையத்துறை அமைச்சரே ஒரு மண்டகப்படி வேண்டுமென்று விரும்பி வேண்டி பெற்ற பெருமை சித்திரை திருவிழாவிற்குண்டு.

எழுத , எழுத விரிவடையும், எண்ண, எண்ண தொலையாத அழகர்மலை அழகனின் பெருமைக்கோர் எல்லையில்லை - அதை ஒரு சிறிய தலவரலாற்றுப் புத்தகத்தில் அடக்கிவிட முடியாது - எனினும் இத்தலம் பற்றிய அறிய விழைவோர் அவாவினைத் தணிக்கும் பொருட்டு இச்சிறுநூல் வெளியிடப்படுகின்றது. அழகர்மலை அழகனின் அழகைப் பருக அன்புடன் வருக, அவன் அருளைப் பெருக என்று திருத்தணிகை தென்குமரி ஆயிடைத்தமிழ் கூறும் நல்லுலகத்தில் உள்ள தமிழ்ப் பெருமக்கள் அனைவரையும் இருகரங்கூப்பி வரவேற்கின்றோம், வணங்குகின்றோம்.

துணை ஆணையர் / செயல் அலுவலர்

ஸ்ரீ

அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்
அழகர்கோயில் தலவரலாறு

பொருளடக்கம்	ப . எண்
1. அழகர் மலையின் பழமைச்சிறப்பு	1-6
2. அழகர் திருக்கோயில் வரலாறு	7-11
3. இலக்கியக் குறிப்புகளும் குருபரம்பரைச் செய்திகளும்	12-24
4. திருக்கோயில் பற்றிய கல்வெட்டுச் செய்திகள்	25-35
5. அழகர் மலையிலுள்ள மற்ற தெய்வங்கள்	36-42
6. சிலைகளும், சிற்பங்களும்	42-45
7. பார்க்கத் தகுந்தவை	46-48
8.திருவிழாக்கள்	48-52
9. ஆழ்வார்கள் மங்களாசாசனப் பாசுரங்கள்	52-77
10.இதர இனங்கள்	78-92

ஸ்ரீ

அருள்மிகு கல்யாண சுந்தரவல்லித் தாயார் அருள்மிகு சுந்தரராஜப் பெருமாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீமதேராமாநுஜாய நம: ஸ்ரீமதே வர வரமுனயே நம:

திருமாலிருஞ்சோலைத் தலவரலாறு

1. அழகர் மலையின் பழமைச்சிறப்பு

கிளரொளி இளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவிய கோயில்
வளரிளம் பொழில் சூழ் மாலிருஞ் சோலை
தளர்வில ராகில் சார்வது சதிரே.

–நம்மாழ்வார் திருவாய்மொழி

"அழகர் மலை" என்பது மதுரைக்கு வடக்கே **20** கி.மீ தூரத்தில் இருக்கிறது. இதில் அழகர் என்ற பெயர் கொண்ட திருமால் கோயில்கொண்டிருப்பதால் இது அழகர்மலை என்று சொல்லப்படுகிறது. இதற்குத் திருமாலிருஞ்சோலை, உத்யானசைலம், சோலைமலை, மாலிருங்குன்றம், இருங்குன்றம், வனகிரி, விருஷபாத்திரி அல்லது இடபகிரி முதலிய பல பெயர்கள் உண்டு. இது கிழக்கு மேற்காக **16** கி.மீ நீளமும் **320** மீட்டர் உயரமும் உடையது. அதிலிருந்து பல சிறிய மலைகள், நாலா பக்கமும் பிரிந்து போகின்றன. இதன் தென்புறம் அடிவாரத்தில் தான் அழகர்கோயில் இருக்கிறது. இம்மலையில் பலவகை மரங்களும், செடிகளும், கொடிகளும் மிகவும் நெருக்கமாக வளர்ந்து பச்சைப்பசேலெனக் கண்ணுக்குக் குளிர்ச்சியான காட்சியைத் தந்து நிற்கின்றன. இதில் இயற்கையாகவே பல சோலைகள் அமைந்திருப்பதால் இதைச் சோலைமலை, திருமாலிருஞ்சோலை, வனகிரி முதலிய பெயர்களால் அழைக்கிறார்கள். இச்சோலைகளில் பூக்களும், காய்களும், கனிகளும் மிகுதியாக உண்டாகிக் கண்ணுக்கும் மனத்திற்கும் இன்பம் ஊட்டுகிறது.

இங்குக் கோயில் கொண்டு உறைகின்ற இறைவன் அழகர் என்று போற்றப்படுகிறார். இவரே வடமொழியில் "சுந்தரராஜன்" என்று சொல்லப்படுவர். திருமாலுக்கும் அவருடைய அவதாரமாகிய இராமபிரான் முதலானவர்களுக்கும் அழகர் என்னும் பெயர் பழைய தமிழ் நூல்களிலேயே வழங்கப் பட்டிருக்கிறது. அழகர் என்பதற்கு அழகுடையவர், அழகானவர் என்று பொருள். மதுரை நகரத்தில் உள்ள பழைய திருமால் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள மூர்த்திக்கும் கூடலழகர் என்னும் பெயர் ஏற்பட்டிருப்பதும் இதனால் தான், இன்னும் பல திருத்தலங்களிலும் எம்பெருமானுக்கு அழகர்

என்றும் சுந்தரராஜன் என்றும் திருநாமங்கள் உண்டு. 108 திவ்யதேசங்களில் அன்பில் என்ற திருத்தலத்து எம்பெருமான் சுந்தரராஜன் என்றும் திருநாகை (நாகப்பட்டிணம்) என்ற திருத்தலத்து எம்பெருமான் சுந்தரராஜன் என்றும் மற்றும் கூடல் (மதுரை) என்ற திருத்தலத்து எம்பெருமான் சுந்தரராஜன் என்றும் அழைக்கப்படுகின்றனர்

கள்ளழகர் திருத்தலம் மிகவும் பழமையானது. இது எப்பொழுது தோன்றியது என்ற சொல்ல முடியாத பழமை உடையது. மிகவும் பழைய தமிழ் நூல்களிலும் வடமொழிப் புராணங்களிலும் கூட இதன் பெருமை பேசப்பட்டிருக்கிறது. இங்கே உள்ள மூர்த்தி, தலம் தீர்த்தம் ஆகியவை பற்றி வராக புராணம், பிரம்மாண்ட புராணம் வாமன புராணம், ஆக்நேய புராணம் முதலியவற்றில் மிகவும் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றைத் தொகுத்து ஒன்று சேர்த்து "விருஷபாத்ரி மகாத்மியம்" என்ற ஸ்தல புராணம் வடமொழியில் இயற்றப்பட்டு இன்றும் வழங்கி வருகிறது. இந்த ஸ்தல புராணத்தின் தமிழாக்கம் தனிநூலாக வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலில் இத்தலத்தின் புராணப் பெருமைகளை அறிந்து கொள்ளலாம்.

அழகர் மலையும் தீர்த்தங்களும்

அழகர் எழுந்தருளியிருக்கும் மலை வால்மீகீ ராமாயணம், வியாசர் எழுதிய மகாபாரதம், சுகரின் மகாபாகவதம் முதலிய வடமொழி இதிகாச புராணங்களில் மிகவும் போற்றப்படுகிறது.

வால்மீகி முனிவர் ஸ்ரீ ராமாயணத்தில் பெருமாளும் இளையபெருமாளும் மிதிலைச் செல்வியான சீதையும் சித்திரகூடமலையில் தங்கியிருந்த சந்தர்ப்பத்தை வர்ணிக்கும்போது, அம்மலையின் பெருமைக்கு அழகர் திருமலையை உவமையிட்டுக் குறிப்பிடுகிறார்.

ஸுபக : சித்ர கூட : அஸௌ
கிரிராஜ உபமோ கிரி : /
அஸ்மிந் வஸதி காகுத்ஸ்த :
யதத்யாஸ்தே மஹா தேஜா : //

சித்திர பர்வதத்துக்கு ஒப்புச் சொல்லத்தக்கது 'கிரிராஜன்' என்கிறார். இங்கு 'கிரிராஜன்' என்பது கைலாசத்தைக்குறிக்காது. ஏன், எனில் அங்க உமாபதியல்லவா உறைகிறான்? ரமாபதியான திருமால் உறைவிடமான மலையே கொள்ளத்தகும். ஆயின் திருவேங்கட மலையைக்கொள்ளல் தகுமோ எனில், அங்கு பிராட்டியாரும் இளையானோடும் கூடிக்காட்சி தரவில்லையாதலால் அவ்வாறு கொள்ளவியலாது. அப்படியாயின் 'தென்னன் உயர் பொருப்பு' என்று கொண்டாடப்பெற்ற அழகர் மலையே

கிரிராஜன் (மலை கட்கு அரசன்) என்று கொள்ளவேண்டும். இம்மலையில் அழகர் பிராட்டியாகிய சுந்தரவல்லியோடும் பலதேவனோடும் எழுந்தருளியுள்ளான். இராமாவதாரத்தில் இலக்குவனாக அவதரித்த ஆதிசேடனே கிருஷ்ணாவதாரத்தில் பலராமனாக வந்து தோன்றினான் என்பது உணரத்தக்கது. ஸ்ரீ ராமாயண உரை காரரான கோவிந்தராஜரும் விருஷபாத்ரியையே கிரிராஜனாகக் காட்டியுள்ளார்.

மகாபாரதத்தில் வனபர்வத்தில் தருமபுத்திரர் அழகர்மலைக்கு யாத்ரையாக வந்தது வியாச முனிவரால் குறிப்பிடப்பட்டுள்ளது. புலஸ்தியர் பீஷ்மருக்குச் சொன்ன தீர்த்த வருணனையை நாரதர் பீஷ்மருக்கு விரித்துரைத்தபோது,

ருஷபம் பர்வதம் கத்வா
பாண்ட்யேஷு நருப பூஜிதம் /
வாஜபேயம் அவாப்நோதி
நாக ப்ருஷ்டே சமோததே //

(வனபர் 83–21)

அழகர் மலையை விருஷப பர்வதம் என்றும் பாண்டிய தேசத்தில் உள்ளதென்றும் கூறுகிறார். இதன் பொருள் :- பாண்டிய நாட்டில்அரசர்களால் பூசிக்கப் பெற்ற ரிஷப மலையை அடைந்தால் வாஜபேய யாக பலனை அடைகிறான். தேவலோகத்திலும் மகிழ்கிறான்.

பாகவதத்தில் பலராமர் தீர்த்தயாத்திரை செய்தபோது விருஷபாத்ரி (அழகர் மலை) அடைந்து பிறகு சேதுவில் கடலாடச் சென்றதாக ஸ்ரீ சுகர் குறிப்பிடுகிறார்.

• விருஷபாத்ரிம் ஹரே : க்ஷேத்ரம் தக்ஷிணாம் மதுராம் ததா/
ஸாமுத்ரம் ஸேதும் அகமத் மஹா பாதக நாசணம் (பாகவதம் ஒ, 79-15)

பரிபாடலில் இளம்பெருவழுதியார் இம்மலையை ‘மாலிருங்குன்றம்’ என்றும் இதனை மக்கள் தொழுகின்றனர் என்றும் கூறுகிறார். (இந்த வழக்கம் இப்போதும் இருந்து வருகிறது) அன்றியும் இதில் கடலும் கானலும் போலவும். சொல்லும் பொருளும் போலவும் பிரியாது விளங்கும் கண்ணபிரானும் அவன் தமையனான பலராமனும் கோயில் கொண்டிருந்தனர் என்று அப்பாடல் கூறும். சங்க காலத்தில் இவ்விரு தெய்வங்களும் ஒரே இடத்தில் வைத்து வணங்கப்பட்டனர் என்பதற்கு இது ஒரு சான்று. சங்க நூல்களில் இவ்வழக்கம் இருந்ததற்கு இன்னும் பல சான்றுகள் உள்ளன. பிற்காலத்தில் இவ்வழக்கம் மறையவே, அழகர் மலையிலும் பலராமனுக்குக் கட்டப்பட்ட கோயில் மறைந்து கண்ணனாகிய திருமால் கோயில் ஒன்று மட்டும் அழியாது நிற்கிறது.

இனி, சங்ககாலத்திற்குச் சிறிது பிற்பட்ட சிலப்பதிகாரம் என்னும் நூலில் இம்மலையில் உள்ள திருமாலைப் பற்றியும் தீர்த்தங்களைப் பற்றியும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

தீர்த்தங்கள்

இம்மலை சோழர் தலைநகரான உறையூரிலிருந்து பாண்டியர் தலைநகரான மதுரைக்குச் செல்லும் ஒரு வழியில் அமைந்திருப்பதாகச் சிலப்பதிகாரம் கூறும். இங்குள்ள திருமாலைத் தரிசித்துக் கொண்டு திருவரங்கத்திற்குச் செல்லும் அந்தணன் ஒருவன் மதுரைக்கு வந்து கொண்டிருந்த கோவலன், கண்ணகி, கவுந்தியடிகளை வழியில் சந்தித்து இம்மலையின் பெருமைகளையும் பற்றிக் கூறுகிறான். இடப்பக்கமாகவுள்ள காட்டு வழியே போனால் நீங்கள் திருமால் குன்றத்தையடைவீர்கள். அங்கே ஒரு சுரங்கவழி இருக்கிறது. அவ்வழியில் மூன்று தீர்த்தங்கள் இருக்கின்றன. அவை புண்ணிய சிரவணம், பவஹாரிணி இஷ்டசித்தி என்பன. புண்ணிய சிரவணத்தில் நீராடினால் இந்திரனால் எழுதப்பட்ட ஐந்திர வியாகரணம் என்னும் இலக்கண நூலறிவை நீங்கள் பெறுவீர்கள், பவஹாரிணியில் மூழ்கினால் பழம் பிறப்பைப் பற்றிய அறிவுண்டாகும். இட்டசித்தியில் நீராடினால் நினைத்தவை யெல்லாம் கைகூடும். இச்சுரங்க வழியில் நீங்கள் செல்ல விரும்பி, இப்பயன்களை அடையக் கருதினால், அம்மலையில் உள்ள திருமாலின் திருவடிகளை மனம், மெய், மொழி ஆகிய மூன்றாலும் தொழுது அம்மலையை மும்முறை வலமாக வரவேண்டும். பிறகு அம்மலையில் உள்ள சிலம்பாற்றின் கரையில் வரோத்தனம் என்ற ஒரு பெண் தெய்வம் உங்கள் முன் தோன்றி, இம்மைக்கும், மறுமைக்கும், இம்மை மறுமை இரண்டுமன்றி எக்காலத்துக்கும் பேரின்பம் தருவது யாது? என வினவுவாள். அவ்வினாவிற்கு நீங்கள் விடையளித்தால் அத்தெய்வம் உங்களுக்குச் சுரங்கவாயிலைத் திறந்துவிடும் பிறகு அதன் வழியே சென்றால் மற்றொரு இரட்டைக் கதவுடைய வாயில் காணப்படும். அதனைக் கடந்து சென்றதும், மற்றொரு தெய்வம் வந்து, அழியாத இன்பம் எது? என்று கேட்கும். அதற்குரிய விடையை அளித்தால் அவள் தானே உங்களை மேற்கூறிய மூன்று பொய்கைகளுக்கும் அழைத்துச் செல்வாள் பிறகு வேத மந்திரங்களாகிய பஞ்சாக்ஷரம், அஷ்டாக்ஷரம் என்னும் இரண்டில் ஒன்றை ஓதி, அப்பொய்கைகளில் மூழ்கினால், தவம் செய்தவர்களுக்கும் கிடைக்காத பலன்கள் உங்களுக்கும் கிட்டும். அவற்றை நீங்கள் விரும்பவில்லையானால் அத்திருமலை மீது நின்ற திருக்கோலத்தோடு எழுந்தருளியுள்ள திருமாலின் திருவடிகளைத் தியானியுங்கள். அப்பொழுது அவரது கருடக்கொடி கட்டிய கொடிமரம் உங்கள் கண்முன் தோன்றும். அவ்வளவில் உங்கள் பிறவித் துன்பம் ஒடும். பிறகு நீங்கள் பரமபதம் அடைதல் உறுதி என்ற துணிவுடன் மதுரைக்குச் செல்லலாம்.

இவ்வாறு சிலப்பதிகாரம் கூறுவதால் அக்காலத்தில் இம்மலைக்கும் இதிலிருக்கும் திருமாலுக்கும் உள்ள பெருமை நன்கு விளங்கும். அந்நூலில் சொல்லப்பட்ட மூன்று தீர்த்தங்களும் எவை என்று இப்போது தெரியவில்லை. தல புராணத்தில் அம்மூன்றும் நூபுரகங்கை என்ற சிலம்பாற்றின் பெயராகவே குறிக்கப்பட்டுள்ளது.

இம் மலை மிக இயற்கை அழகோடும், கடத்தற்கரிய வழிகள், நுழைதற்கரிய குகைகள், தீர்த்தங்கள், முதலியவற்றோடும் விளங்குவதால் பழைய காலத்தில் யோகிகள், முனிவர்கள் முதலானவர்கள் இதில் இருந்து தவங்களைச் செய்து வந்தார்கள். பிறகு சரித்திரகாலத்திலும், அதாவது 2000 வருஷங்களுக்கு முன்னும், பௌத்த மதமும், ஜைனமதமும் இங்குப் பரவியபோது, அம்மதங்களைச் சேர்ந்த துறவிகள் இம்மலையில் வந்து தங்கித் தவம் செய்தார்கள். அப்படி பௌத்த பிக்ஷுக்களும் ஜைனமுனிவர்களும் இம்மலையில் வந்து தங்கித் தவம் செய்தற்கு அடையாளமாக அவர்களால் உபயோகிப்பட்ட குகைகளும், அக்குகைகளுக்குள்ளும் வெளியிலும் அவர்கள் எழுதி வைத்த பிராமி எழுத்தில் அமைந்த கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

ஆழ்வார்கள் காலம்

ஆழ்வார்கள் பன்னிருவரும் இன்றைக்கு 1,200 வருஷங்களுக்கு முன்பிருந்தவர்கள் அவர்களுள் சிலர் 1,500 வருஷங்களுக்கு முந்தினவர்கள் என்றும் எண்ண இடமுண்டு. இவ்வாழ்வார்கள் காலத்திலும் இம்மலை மிகவும் பிரபலமாக இருந்தது, அதனை அக்காலத்தில் தென் திருப்பதி என்றும் அழைத்து வந்தனர். இது பரந்தாமன் பற்றி கொண்டுள்ள திருப்பாற்கடல் போல அவ்வளவு புனிதமானது என்று ஆழ்வார்கள் பாசுரங்களில் புகழ்ந்து பாடப்பட்டிருக்கிறது. அல்லாமலும் எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்பது போல எல்லாத் திருப்பதிகளுக்கும் இ ப பிரதான க்ஷேத்திரம் என்று அவ்வாழ்வார்கள் வாழ்த்தி வணங்கியிருக்கிறார்கள். ஆழ்வார்கள் இத்தலத்திற்கு வந்து மங்களா சாசனம் செய்திருக்கிறார்கள். அவர்களுள் அறுவர் சோலைமலையைப் பற்றியும் அழகரைப் பற்றியும் 128 பாசுரங்களில் பாடியிருக்கிறார்கள். அவையெல்லாம் நாலாயிர திவ்யப் பிரபந்தம் என்று சொல்லப்படுகிற வைஷ்ணவர்களின் தமிழ் வேதத்தில் இருக்கின்றன. அவை படிக்கப்படிக்க பக்தியும் இன்பமும் ஊட்டுவனவாய் இருக்கும். இவ்வாழ்வார்களுள் சிலரின் காலத்தை, கலியுகத்திற்கு முந்திய யுகங்கள் என்றும் சிலர் எண்ணுவதால் இந்த க்ஷேத்திரத்தின் பழமை மிகவும் அதிகமாகிறது.

பெரியாழ்வாரும் ஆண்டாளும்

இந்த மலையில் ஆண்டாளுக்கு விசேஷமான ஆராதனைகளும் திருவிழாவும் நடக்கின்றன. இதற்குக் காரணம் ஆண்டாள் தன் தந்தையாகிய பெரியாழ்வாருடன் இவ்விடத்திற்கு வந்து பெருமாளைத் தரிசித்துப்

பாசுரங்கள் பாடியதும் கடைசியாக அவர் அழகரைக் கல்யாணம் செய்து கொண்டார் என்பதும் தான். ஸ்ரீ மகாவிஷ்ணுவின் ருபமாகிய ஸ்ரீ ரங்கநாதரும் அழகராகவே வந்து ஆண்டாளை மணந்ததாக ஐதீகம். அம்மலையின் அழகையும் பெருமையையும் சுந்தரராஜரின் மகத்துவத்தையும் பெரியாழ்வாரே ஆண்டாளுக்கு இங்கு நேரில் சொன்னதாகத் தெரிகிறது. இத்தலத்தின் பெருமையை அவர்

(1) சிலம்பார்க்கவந்து தெய்வமகளிர் களாடும் சீர்
சிலம்பாறுபாயும் தென்திருமாலிருஞ்சோலையே
(2) எல்லாவிடத்தும் எங்கும் பரந்து
பல்லாண்டொலி
செல்லாநிற்கும் சீர்த்தென் திருமாலிருக்சோலையே
(3) ஆவந்தமென்று அமரர்களும் நன்முனிவரும்
சேவித்திருக்கும் தென் திருமாலிருஞ்சோலையே
(4) குலமலை கோலமலை குளிர்மாமலை
கொற்றமலை
நிலமலை நீண்டமலை திருமாலிருஞ்சோலையதே

என்று பலவாறாகப் புகழ்ந்து பாடியிருக்கிறார்.

பெரியாழ்வார் திருமகளான ஆண்டாள் நாச்சியாரும் இயற்கைக் காட்சிகளில் எல்லாம் அழகரைக் கண்டு தம் மனத்தைப் பறிகொடுத்தார்.

(1) "கருவிளை யொண்மலர்கள் ! காயா மலர்காள்!
திருமால்
உருவொளி காட்டுகின்றீர் எனக்கு உய்வழக்
கொன்று உரையீர்"

(2) "திருவிளையாடுதிண்தோள்
திருமாலிருஞ்சோலை நம்பி
வரிவளையில் புகுந்து வந்திபற்றும் வழக்குளதே"

(3) "துங்கமலர்ப் பொழில் சூழ்
திருமாலிருஞ்சோலை நின்ற
செங்கண் கருமுகிலின் திருவுருப்போல் மலர்மேல்"

தொங்கிய வண்டினங்கள் ! தொகுபூஞ்
சுனைகாள்! சுனையில்
தங்கு செந்தாமரைகாள்! எனக்கு ஓர் சரண்
சாற்றுமினே

என்று பலவாறு அவர் அழகர்மேல் உள்ள காதலால் வருந்திப் புலம்புவது மனத்தை உருக்குவதாக அமைகின்றது.

2. அழகர் திருக்கோயில் வரலாறு

வரலாற்றுக் காலம் :

புராண காலத்தைவிட்டுச் சரித்திர காலத்திற்கு வருவோமாயின், பாண்டிய நாட்டில் அரசாட்சி தோன்றியது முதல் அழகர் கோயிலும் அதனையடுத்து இருந்த அழகாபுரி என்னும் ஊரும் புகழ்பெற்று இருந்தன என்று தெரிகிறது. அப்பொழுதே அழகாபுரியைச் சுற்றியிருந்த கோட்டை மதிலுக்குள், அழகர்கோயிலும் அடங்கியிருந்ததாக அறிகிறோம். அவ்வூரும் கோயிலும் சமுக வாழ்க்கையிலும் சமய வாழ்க்கையிலும் ஒன்றாகி வேறுபாடு இல்லாமல் விளங்கின. முதல் முதலில் இவ்விரண்டும் தருமதேவதையாலும் விஸ்வகர்மாவாலும் நிருமாணிக்கப்பட்டன. பிறகு இவை மலையத்துவஜ பாண்டியனால் புதுப்பிக்கப்பட்டன . இம்மலையத்துவஜ பாண்டியன் தான், பாண்டிய அரசையும் வம்சத்தையும் ஸ்தாபித்த குலசேகரபாண்டியனுக்கு மகன். இவனுடைய மகளே ஸ்ரீ மீனாட்சி என்னும் அங்கயற்கண்ணியாம் தெய்வம். மலையத்துவஜனுக்குப் பின் அரசு செலுத்திய பலரும் இவ்வூரையும் கோயிலையும் காப்பாற்றி வந்தனர். பெரியாழ்வார் பாசுரம் ஒன்றில் கோயிலைச் சுற்றி மதில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. எனவே இம்மதிலின் பழமையும் நன்கு புலப்படும். இன்றும் இம் மதிலின் சிதைந்த பகுதிகள் அதன் பெருமையைக் காட்டி நிற்கின்றன. மலையடிவாரத்தின் தென்பகுதியில் தொடங்கி, அழிபாடுடையதாகக் காணப்படும் அப்பழைய ஊரைச் சுற்றி ஒரு பெரிய மதில் இன்றும் உள்ளது. அதன் சுற்றளவு ஏறக்குறைய ஒன்றரை மைல் இருக்கும். அது முற்றிலும் கருங்கற்களாலும் செங்கற்களாலும் கட்டப்பெற்றது. இதற்குள்ளேதான் பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்துகள் நுழைந்து கோயிலை அடைகின்றன.

பாண்டியர் திருப்பணி :

பல பாண்டிய மன்னர்கள் இக்கோயிலுக்குப் பலவகைத் திருப்பணிகளைச் செய்திருக்கிறார்கள். இராமாயண மகாபாரதங்களிலும், பழைய இலக்கியங்களிலும் கோயிலிலும், பிற இடங்களிலும் உள்ள பழைய கல்வெட்டுகளிலும், பாண்டிய மன்னர்கள் செய்த திருப்பணிகள் குறிக்கப்பெற்று உள்ளன. இக்கோட்டைக்குள் பல பாண்டிய மன்னர்கள் பெரும் படைகளுடன் வசித்து வந்தார்கள் என்றும் தெரிகிறது. அங்குள்ள மிகப் பெரிய உறுதியான மதிலும் அதில் உள்ள உறுப்புகளும், பெரிய வாசல்களும் இதனை நன்றாகக் காட்டும். ஆகவே அவ்வரசர்கள் இக்கோயிலுக்கு வேண்டிய எல்லாவித உதவிகளையும் அளித்து வந்தார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. பாண்டியரே அன்றிப் பிற மன்னர் பலரும் இக்கோயிலுக்கு இப்படியே திருப்பணிகள் பல செய்திருக்கிறார்கள். அவர்களுள் முக்கியமானவர்கள் சோழர் ஈழ அரசர், வாணர், ஹொய்சாலர்,

விஜயநகர மன்னர் நாயக்க மன்னர் முதலியோராவார். அதன் பிறகு மகாராஷ்டிர மன்னர்களும் முகம்மதிய அரசர்களும் கூட இக்கோயிலைப் பராமரித்து வந்தார்கள். கடைசியில் அது 1785 ஆம் வருஷம் கிழக்கிந்தியக் கம்பெனியின் கைக்கு மாறியது.

திருமாலின் முதல் அவதாரமாகிய மச்சாவதாரத்தின் ஞாபகமாகப் பாண்டியர்கள் மீன் கொடியை வைத்திருந்தார்கள் என்று புராணங்கள் கூறும். ஆகவே பாண்டியர்கள் திருமால் பக்தியுடையவர்கள் என்று புலப்படும். ஆகவேதான் இவர்கள் பரம்பரையாக அழகர்கோயிலுக்குத் தொண்டு செய்து வந்தார்கள்.

விஜயநகர அரசர் தொண்டு :

பாண்டியர்களுக்குப் பிறகு பத்தாம் நூற்றாண்டு முதல் சோழ அரசர்கள் தென்னாட்டில் பலம் பெற்றிருந்த காலத்தில், அவர்களும் கோயில் திருப்பணிகள் பல செய்தனர். மறுபடியும் 12ம் நூற்றாண்டிலிருந்து 14 ஆம் நூற்றாண்டு வரை பாண்டியர் கை ஓங்கிற்று. அப்பொழுதும் அவர்கள் தொடர்ந்து திருப்பணிகள் செய்து வந்தார்கள். அக்காலத்தில் இருந்த ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (1251-1270) அழகர்கோயில் விமானத்திற்குப் பொன்வேய்ந்தான். என்று சாசனங்கள் மூலம் அறிகிறோம். பாண்டியர்கள் மறுபடியும் வீழ்ச்சி அடைய சுமார் ஐம்பது வருடகாலம் (1324-1372) முகமதியர் படையெடுப்புகளால் தமிழ்நாடு குழப்பமான நிலையில் இருந்தது. பிறகு முகம்மதியரது பலத்தை ஒடுக்கிய விஜய நகர ராஜ்யம் தமிழ்நாட்டில் மீதும் ஆதிக்கம் செலுத்தாலாயிற்று. விஜயநகர ராஜ்யத்தின் பிரதிநிதிகளாக நாயக்க மன்னர்கள் தமிழ்நாட்டை ஆண்டு வந்தார்கள். அப்போது பாண்டிய வம்சத்தினரை பெயருக்கு மட்டும் அரசராக வைத்து விஜயநகர அரசர் மேலதிகாரம் செலுத்தி வந்தார். இப்பாண்டிய குலத்தினருள் வாணர் அல்லது வாணாதிராயர் என்ற பெயருடையோர் சுமார் 50 ஆண்டுகள் ஆட்சி பீடத்தில் இருந்தனர். அவர்களுள் மிக முக்கியமானவன், திருமாலிருஞ்சோலை நின்றான். 'மகாபலிவாணாதிராயன்' 'உறங்காவில்லிதாசன்' என்று ஒரு சாசனத்தால் அறிகிறோம். இவன் பெயரிலிருந்தே இவன் அழகரிடம் மிகவும் பக்தி கொண்டவன் என்பது தெரிகிறது. இவன் அழகருக்குப் பல சொத்துகளையும் நிபந்தனைகளையும் (கட்டளை) திருப்பணி (சீர்திருத்தம்) களையும் செய்து வைத்தான். இவன் திருமாலிருஞ்சோலையையே தனது தலைநகராகவும் கோட்டையாகவும் கொண்டிருந்தான் என்று 'திருமாலிருஞ்சோலை' நின்றான் என்ற இவனது பட்டப்பெயரால் அறியலாம். இவனது வமிசத்தவரே ஸ்ரீ மீனாட்சி கோயிலில் இப்போதுள்ள பெரிய கோபுரங்களைக் கட்டியவர்கள் என்று சொல்லப்படுகிறது.

இவ்வமிசத்தவர் பலம் குறைந்ததும் சுமார். கி.பி.1500 இல் விஜயநகர அரசர்களே மதுரை ஆட்சியை நேரில் ஏற்று நடத்தி வந்தார்கள். விஜயநகரப் பேரரசரது இராஜப்பிரதிநிதியாக முதல் முதலில் பாண்டிய நாட்டை

ஆண்டவர் நரச நாயக்கர் என்பவர். இவரும் இவருக்குபின் வந்த சில இராஜப்பிரதிநிதிகளும் பேரரசருக்கு உண்மையாக உழைத்து வந்தனர். கி.பி.1565 இல் தலைக்கோட்டை சண்டையில் விஜயநகர சாம்ராஜ்யத்தின் கடைசி மன்னர் முகமதியரால் தோற்கடிக்கப்பட்ட பின் பாண்டிய நாட்டில் இருந்த இராஜப்பிரதிநிதிகள் சுதந்திரமாக ஆட்சி செய்யத் தொடங்கி விட்டார்கள் விஜயநகரராஜ்யம் தோன்றியது முதல் ஒவ்வொரு மன்னரும் அல்லது அவரது பிரதிநிதியும் திருமாலிருஞ்சோலை மலைக்கோயில், கோட்டை நகரம் ஆகியவற்றைத் தம் மேற்பார்வையில் வைத்துப் பரிபாலனம் செய்து வந்தனர். இதற்குக் கோயிலிலுள்ள பல சாசனங்களே சாட்சி. இவர்களுள் மிக முக்கியமானவர்களாகச் சொல்லத்தகுந்தவர்., கிருஷ்ணதேவராயர்தான் முதன் முதலில் இக்கோயிலுக்கு சமயநல்லூர், சாத்தமங்கலம் என்னும் இரண்டு பெரிய கிராமங்களைத் தானமாகக் கொடுத்தார், என்று அழகர் கோயிலிலுள்ள பதினெட்டாம்படி கோபுரத்தின் அருகிலுள்ள சாசனம் ஒன்று தெரிவிக்கிறது. இக்கிராமங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு, ஆடி மாதத்தில் அழகருக்கு நடக்கும் தேர் திருவிழாவில் சில தருமங்கள் செய்யப்பட்டன. இம் மன்னர் அழகர்கோயிலுக்குப் பரிவாரங்களுடன் வந்து மூன்று நாள் தங்கியிருந்தார். மேற்கூறிய மற்ற மன்னர்கள் கொடுத்த மான்யங்கள், செய்த திருப்பணிகள் முதலியவையும் கோயிலிலுள்ள கல்வெட்டுகளில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. விஜயநகர மன்னர்களது ராஜப்பிரதிநிதியாக கடைசியில் இருந்த விசுவநாதநாயக்கர் (1535-1544) செய்த திருப்பணியை விவரிக்கும் கல்வெட்டு ஒன்றும் பதினெட்டாம்படி கோபுரத்தின் மேற்குப் பகுதியில் உள்ளது.

இவனுக்குப் பிறகு தான் மதுரையில் நாயக்க மன்னரது தனி ஆட்சி தொடங்கியது.

நாயக்க மனனர் தொண்டு :

கி.பி.1558 முதல் இராஜப்பிரதிநிதி முறை அழிந்தது கடைசி பாண்டியவம்சத்து அரசனும் இறந்துவிட்டான். நாயக்க வம்சத்தை மதுரையில் முதன் முதலில் நிறுவி ஆண்ட அரசன் பெயர் விசுவநாதன் (1558-63). இவன் ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாளிடம் (அழகர்) அதிக பக்தி கொண்டவன். நாயக்க வம்சத்தில் இவனே மிகப் பெரிய அரசன். இவனுக்கு தளபதியாக இருந்த அரியநாத முதலியார் அழகர்கோயிலுக்கு வேப்பங்குளம், குருந்தங்குளம் என்றும் இரண்டு ஊர்களைத் தானமாகக் கொடுத்தார். கோயிலில் அரியநாத முதலியார் கட்டளை என்ற நிபந்தத்தை நிறுவியவரும் இவரே. விசுவநாதருக்குப் பின் ஆண்ட கிருஷ்ணப்ப நாயக்கர், முத்துகிருஷ்ணப்ப நாயக்கர், முத்துவீரப்ப நாயக்கர் முதலியவர்களும் ஸ்ரீ அழகருக்குத்தான தருமங்கள் செய்தனர். 1623 முதல் 1659 வரை ஆண்ட திருமலை நாயக்கர் விஜய நகரத்தின் மேலதிகாரத்தை உதறிவிட்டுச் சுதந்திர

அரசனாக ஆட்சி செலுத்தினார். இவர் திருமாலிருஞ்சோலையில் ஓர் அரண்மனை கட்டினார். மற்றும் கோயிலில் யாகசாலைகளையும், பள்ளி அறை, தந்த விமானம், தந்தப் பல்லக்கு, அபிஷேக மண்டபம் முதலிய பலவற்றை இவர் புதுப்பித்துக் கட்டினார். இவர் செய்த திருப்பணிகளும் வழங்கிய நிபந்தங்களும் மிகப் பலவாகும்.

முகம்மதியர் வருகை:

நாயக்க வம்சத்து இறுதி ராணியாகிய மீனாட்சி அம்மாளுக்குப் பின் 1736 இல் மதுரை மாநகரம் ஆர்க்காட்டு நவாப் ஆகிய சந்தா சாகிப்பின் கைக்கு மாறியது. அப்போது அவன் மதுரையில் உள்ள எல்லா கோயில்களையும் கைப்பற்றிக்கொண்டான். அழகர்கோயிலும் அவன் வசமாயிற்று. அது முதல் அழகர்கோயில் மிகவும் கஷ்ட திசைக்குள்ளாயிற்று. 1757 இல் ஹைதர் அலி மதுரையைச் சுற்றியுள்ள ஊர்களை கொள்ளையடித்து, அழகர் கோயில் கல்யாண மஹாலில் உள்ள விக்கிரகங்களை உடைத்துக் கோயிலில் இருந்த ஏராளமான பணத்தையும் சொத்தையும் கைப்பற்றிக் கொண்டான். பிறகு அவன் அழகாபுரி நகரையும் மதில்களையும் நாசமாக்கினான். அவனால் சிதைக்கப்பட்ட மதில்கள்தான் இன்றும் காட்சியளித்து வருகின்றன. மதிலுக்குள் இருந்த நாயக்கர் அரண்மனையையும் அவன் இடித்துத் தள்ளினான். யூசுப்கான் என்னும் பெரிய முகம்மதிய வீரன் ஹைதர் அலியைத் தோற்கடித்து திண்டுக்கல்லுக்கு விரட்டிய பிறகு, 1758 இல் அவன் ஸ்ரீ கள்ளழகர் கோயில் சொத்துக்ளைத் திருப்பிக் கொடுத்துப் பரிகாரங்கள் செய்தான். பிறகு யூசுப்கானைச் சில துரோகிகள் அடித்துக் கொன்றுவிடவே சில ஆண்டுகள் குழப்பமான நிலை ஏற்பட்டது. மீண்டும் 1780 இல் ஹைதர் மதுரை மீது படையெடுத்தான் . இறுதியாக 1785 இல் மதுரை, கிழக்கிந்தியக் கம்பெனி வசமாகிப் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சி :

1801 இல் மதுரையில் முதல் கலெக்டர் ஹர்டிஸ் என்பவர் அழகர் தேவஸ்தானப் பாதுகாப்பு (தர்மகர்த்தா) பொறுப்பை ஏற்றார். அவர் குழப்பமாக இருந்த இக்கோயில் நிர்வாகத்தை ஒருவாறு ஒழுங்குபடுத்தினார். அவர் செய்த சீர்திருத்தங்களே இக்கோயிலின்பெரிய உரிமைச் சாசனம் என்று சொல்லத்தகும். பிறகு 1817 இல் இக்கோயில் நிர்வாகப் பொறுப்பு போர்டு ஆப் ரெவின்யூ (நிலவரி வசூல் போர்டு) கைக்கு மாறியது. இறுதியாக 1863 இல் மதஸ்தாபனங்களை நடத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட கோயில் நிர்வாகக் கமிட்டி இதன் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டது. இக்கமிட்டி அழகர் கோயிலின் தஸ்தாவேஜுக்களைச் சரிவர ஆராய்ந்து பார்க்காமலும் அக்கோயிலுக்குரிய நிலங்களையும் கிராமங்களையும் ஸ்ரீ அழகர் பெயருக்கு எழுதி வைக்காமலும், கோயில் காரியம் செய்பவர்கள் பெயருக்கு எழுதி வைத்துவிட்டது. இது ஒரு பெரிய தவறு. இதுபோல இன்னும் சில

தவறுகளையும் இக்கமிட்டி செய்து விட்டது. அவற்றால் கோயில் நிர்வாகத்தில் மீண்டும் குழப்பம் ஏற்பட்டது. கோயில் சொத்துகளைப் பிறர் அனுபவிக்கலாயினர் ; சிப்பந்திகள் சரியாகக்கோயில் காரியங்களை கவனிக்கவில்லை; அவர்களை ஒழுங்குபடுத்தவும், கட்டுப்படுத்தவும் தஸ்தாவேஜு பூர்வமான அதிகாரம் இக்கோயில் கமிட்டிக்கு இல்லை. இதனால் கோயில் சொத்துக்கள் பல போய்விட்டன கோயிலின் நித்திய நைமித்திக கட்டளைகள் நடப்பதும் கடினமாகிவிட்டன. இக்கோயிலுக்குரிய நிலங்கள், முதலானவைகள் மூலம் வருமானம் வருஷத்திற்கு ஒன்றிரண்டு ஆயிரம் ருபாய்களுக்கு மேல் இல்லை. சாசனங்கள் தஸ்தாவேஜுக்கள் மூலமாக இக்கோயிலுக்கு உரியவை என்று கருதப்படும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும் மற்ற ஸ்தாவ ஜங்கம சொத்துகளும், இப்பொழுது , இல்லாமல் போய்விட்டன. அழகருக்குச் சொந்தமாயிருந்த அழகர்மலைகூட அவருக்கு சொந்தம் என்று சொல்லக்கூடியது பாழடைந்த அழகாபுரிக்கோட்டைக்குள் இருக்கும் இடம் மட்டும்தான். கோயிலை அரசாங்கம் நிர்வாகம் செய்த காலத்தில் கோயிலின் வருமானம் எல்லாம் அரசாங்கக்கருவூலத்தில் சேர்க்கப்பட்டது. இந்தியாவிற்கு அரசியல் துறையில் ஓரளவு சீர்திருத்தங்களும் சுதந்திரமும் அளிக்கப்பட்ட பிறகு, 1929, இல் ஏற்படுத்தப்பட்ட இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை இக்கோயிலின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று, இதுவரையில் சிறப்பாக நடத்தி வருகிறது.

3. புராணம் பிற்கால இலக்கியங்கள் மற்றும் குருபரம்பரைச் செய்திகள்

புராணக்குறிப்புகள்:

இக்கோயிலும் அதன் கோட்டையும் அழகாபுரியும் பாண்டியர்கள் ஆண்டு வந்த மிகப் பழங்காலந்தொட்டே பிரசித்தி பெற்றிருந்தன என்று முன்பே கண்டோம். யுதிஷ்டிரர் (தர்மபுத்திரர்) தமது தீர்த்தயாத்திரையின் போது இங்கு வந்திருந்தார் என்று மகாபாரதம் வனபர்வதத்தில் கூறப்படுகிறது. அந்தக் காலத்தில் இம்மலைக்கு விருஷபாத்ரி என்று பெயர் இருந்தது. வாமன புராணத்தில் ஸ்ரீ அழகர் அல்லது சுந்தரராஜரின் பெருமை, நூபுரகங்கையின் சிறப்பு முதலியன சொல்லப்படுகின்றன. பிரம்மாண்ட புராணம் குப்ஜ பாண்டியனுடைய செய்திகளையும் விரிஷபாத்ரியின் மகாத்மியத்தையும் நூபுரகங்கையின் விசேஷத்தையும் கூறுகிறது. மற்றும் வராக புராணத்திலும் இம்மலையின் பெருமையும் இதிலுள்ள தீர்த்தங்களின் பெருமையும் விளக்கப்படுகின்றன. அர்ச்சுனன் இங்கு தீர்த்தயாத்திரை வந்ததாக ஆக்நேய புராணம் கூறும். ஹாலாஸ்ய (மதுரை) க்ஷேத்திரத்திற்கு வடக்கே சுந்தரராஜர் எழுந்தருளியுள்ள விருஷபாத்ரி, மிகப் பெருமை வாய்ந்ததென்று கூறுகிறது. இன்னும் ஸ்ரீ வில்லிபுத்தூர் ஸ்தல புராணத்திலும், ஜகன்னாத க்ஷேத்திர மகாத்மியத்திலும், சனத்குமார சம்ஹிதை பிரம்மசம்ஹிதை முதலிய புராணங்களிலும் இந்த க்ஷேத்திரத்தின் பெருமை சிறப்பாகச் சொல்லப்படுகிறது. இப்புராணங்களில் கூறப்படும் நிகழ்ச்சிகள் எக்காலத்தவை என்று யாராலும் அறுதியிட்டுக் கூற முடியாதவை. அக்காலத்திலேயே அழகர் மலை அவ்வளவு புகழ் பெற்றிருந்ததால் அதன் பெருமையைப் பற்றி யாரால் பேச முடியும் ?

பிற்கால நூற்குறிப்புகள்:

இனி பிற்காலத்தில் எழுதப்பட்ட நூல்களில் இதைப் பற்றியுள்ள குறிப்புகள் பலவாகும். சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட கோதாபரிணயம் என்னும் நூலில் பெரியாழ்வார் தம் மகளாகிய கோதை என்கிற ஆண்டாளுடன் இத் திருமாலிருஞ்சோலை மலைக்கு வந்ததாகவும், தன் மகளுக்கு இங்கெழுந்தருளியிருக்கும் பெருமாளின் பெருமையைச் சொன்னதாகவும் உள்ளது. இராமநுஜருடைய அந்தரங்க சிஷ்யரான கூரத்தாழ்வான் சோழமன்னனுடைய கொடுமையால் திருக்கண்களையிழந்து புகலிடம் தேடித் தமது தேவிகளான ஆண்டாளோடும் ஆறுமாத சிசுக்களாயிருந்த பராசரபட்டர் சீராம்பிள்ளைகளோடும் திருமாலிருஞ்சோலையில் தங்கியிருந்தார். அப்போது அழகர் மீது ஸுந்தரபாஹுஸ்தவம் என்ற துதிநூலை இயற்றி அனுசந்தித்தார். அதில் ஸ்ரீராமநுஜருடைய திருமுன்பைத் தாம் அடையும் நாளைத் தந்தருமாறு வேண்டினார். அவ்வாறே கூரத்தாழ்வான் விரைவில்

திருவரங்கம் சென்று இராமாநுசரைச் சென்றுகண்டு கண்ணொளியும் பெற்று மகிழ்ந்தார்.

தமிழில் எழுதப் பெற்ற கந்தபுராணம், "முத்திதரு பேரழகர் திருமலை" என்று இதனைச் சிறப்பிக்கிறது. இதனையே பழமுதிர்ச்சோலை யென்றும் அது கூறுகிறது. வைணவப் பெரு நூலாகிய நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய அறுவர் இம்மலையையும் ஸ்ரீ அழகரையும் பற்றிப் பாடிய பாடல்கள் 128 இருக்கின்றன.

சமீப காலக் குறிப்புகள் :

இனி 1500 ஆண்டுகளுக்குப் பிற் பட்ட நூல்களில் அழகர் மலையைப் பற்றிக் கூறியிருக்கும் செய்திகளை நோக்குவோம். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் தம் திருப்புகழில் பல இடங்களில் இத்தலத்தைப் பழமுதிர் சோலைமலை என்னும் பெயர்களால் அழைக்கிறார். இதை அவர் முருகப்பெருமான் கோயில் கொண்ட இடமாக வருணிக்கிறார். அவரது காலம் சுமார் 500 ஆண்டுகளுக்கு உட்பட்டது. அழகர் அந்தாதி பாடிய அழகிய மணவாளதாசர் அல்லது பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்பவர் திருமாலிருஞ்சோலையில் எழுந்தருளியுள்ள அழகரைப் பற்றி அந்நூலில் விவரித்துக் கூறியுள்ளார். இவர் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் மதுரையில் ஆண்ட திருமலைநாயக்கர் காலத்தவர் என்று சிலர் சொல்வார்கள். இவர் எழுதிய அஷ்டப் பிரபந்தம் என்னும் நூலில் மேற்கூறிய அழகரந்தாதி அடங்கியுள்ளது. 200 ஆண்டுகளுக்கு முன் இருந்த வேம்பத்தூர் சுவாமி கவிகாளருத்திரர் என்பவர் இவ்வழகரைப் பற்றி ஒரு பிள்ளைத் தமிழ் பாடியிருக்கிறார். வேம்பத்தூரைச் சேர்ந்த கவிகுஞ்சரமய்யர் என்பவர் அழகர் கலம்பகம் என்ற நூலை எழுதியிருக்கிறார். இதை எழுதியவர் அரிபக்த நாவலர் என்றும் கூறுவர். இம்மலையில் நான்மறை முழக்கமும் ஆழ்வார்களது பிரபந்தப்பாடல் ஓசையும் எப்பொழுதும் கேட்டுக்கொண்டே இருக்கும் என்று அந்நூல் கூறும். அன்றியும் இங்கு மலர்களும், பழங்களும் பூத்துக் கனிந்து குலுங்கிக் கொண்டிருக்குமாம். அவை மரகதப் பாறைகள் மீது உதிர்ந்து அவற்றை மறைத்துக் கொண்டிருக்குமாம். பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் என்னும் 17 ஆம் நூற்றாண்டுப்புலவர் அழகர் கிள்ளை விடுதூது என்ற நூலைச் சிறந்த இலக்கிய நயத்துடன் பாடியிருக்கிறார். இதை எழுதுவதற்காக அவர் காலத்தில் இருந்த நாயக்க மன்னன் அவருக்குச் சிலமானியங்களைக் கொடுத்தாராம். மற்றும் கவிக்குஞ்சரபாரதி எழுதிய சோலைமலைக்குறவஞ்சி என்னும் நூலும் இம்மலையின் சிறப்பை வருணித்துக் கூறுகிறது. அன்றியும் கருடவாஹன பண்டிதர் இயற்றிய திவ்யசூரிசரிதம், வேதாந்த தேசிகன் அருளிச்செய்த ஹம்ஸஸந்தேசம், ஸ்ரீ சுந்தரராஜ ஸ்தோத்திரம் நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி முதலிய பல நூல்களும் இதன் பெருமையைப் பற்றிப் பேசுகின்றன.

அருணகிரிநாதரின் பழமுதிர்சோலை பற்றிய கருத்து பிற சங்கப்பாடல்களில் காணப்படவில்லை. இக்கருத்தை நடுநிலை ஆய்வாளர்களும் ஏற்கவில்லை என்பது நோக்கத்தக்கது.

இவ்வாறு மிகமிகப் பழங்காலந் தொட்டு இவ்வழகர்மலையும் அழகரும் புராணங்களிலும் தமிழ் நூல்களிலும் இடம் பெற்று வந்திருக்கின்றனர். ஆகவே யாராலும் இந்தத் தலத்தின் பழமையையும் பெருமையையும் எளிதில் அறிந்து அளவிட முடியாது.

பெரியாழ்வாரும் திருமாலிருஞ்சோலையும்:

பெரியாழ்வார் ஆண்டாளை அரங்கனுக்கு ஆட்படுத்திய பிறகு அவர் வில்லிபுத்தூருக்குத் திரும்பிச் செல்லவில்லை. ஆண்டாள் உகந்தருளிய திவ்விய தேசமான திருமாலிருஞ்சோலையில் தங்கி அழகருக்குப் பாமாலையோடு பூமாலையும் புனைந்து மகிழ்ந்தார். பெரியாழ்வார் தம்முடைய திருமொழியைப் பூர்த்திசெய்து அழகர்மலை அடிவாரத்திலேயே திருநாட்டை எய்தினார். திருவரசு இன்றைக்கும் காணத்தக்கதாய் விளங்குகிறது. அவருடைய நினைவிடத்தில் திருமண்டபம் எழுப்பி நந்தவனமும் அதைச் சுற்றிலும் அமைக்கப் பட்டிருப்பதை அடியார்கள் காணலாம்.

அழகர்மலையின் அழகுகளைப் பெரியாழ்வார் பலபடப் புனைந்து வருணிக்கிறார். இம்மலையும் வடவேங்கடம்போல் ஏழு மலைகளாக அமைந்திருப்பதைக் காட்டுகிறார். அவையாவன:-

1. அலங்காரன் மலை
2. குல மலை
3. கோல மலை
4. குளிர் மாமலை
5. கொற்ற மலை
6. நில மலை
7. நீண்ட மலை

இந்த ஏழு மலைகளிலும் அமைந்த ஆறுகளையும் சுனைகளையும் பொழில்களையும் பெரியாழ்வார் ஆயிரம் ஆயிரமாகக் காட்டுகிறார்.

"ஆயிரமாறுகளும் சுனைகள் பல ஆயிரமும்
ஆயிரம் பூம்பொழிலுமுடை மாலிருஞ்
சோலையதே" (4,3.10)

என்பது பட்டர்பிரான் திருவாக்கு. அழகர் மலைக்கு அணியாகத் திகழும் நூபுரகங்கை என்ற சிலம்பாற்றினைச் சிறப்பாக வருணிக்கிறார். தேவ மாதர்கள் பாதங்களில் அணிந்த சிலம்புகள் ஒலிக்கும் படி நூபுரகங்கையில் இறங்கிக் குடைந்து நீராடி மகிழ்கிறார்களாம்.

"சிலம்பார்க்க வந்து தெய்வ மகளிர்களாடும் சீர்
சிலம்பாறு பாயும் தென் திருமாலிருஞ் சோலையே"

(4-2-1)

எம்பெருமானுக்குத் திருப் பல்லாண்டு பாடிய பட்டர்பிரான் அழகர்மலையில் வாழ்கின்ற குறிஞ்சி நில மக்களான குறவர்களும் அழகருக்குப் பல்லாண்டு பாடுவதைக்கேட்டு மகிழ்கிறார். குறிஞ்சிக் குறவர்கள் திணை நிலக் கடவுளான முருகனைப் போற்றாது அம்மலைக் குரிய தெய்வமான கள்ளழகரையே போற்றினர். நிலத்தை அகழ்ந்து கிழங்கைத் தோண்டியெடுத்து அதை அவித்து அழகருக்கு புதியதாக் காட்டி 'உன் பொன்னடி வாழ்க' என்று வாழ்த்திய பிறகு அதை யாவரும் கூடிப் பிரசாதமாக மதித்து உண்டனர்.

"புனைத்தினைக் கிள்ளிப் புது அவிகாட்டி உன்
பொன்னடி வாழ்க என்று
இனக்குறவர் புதியதுண்ணும் எழில் மாலிருஞ் சோலை எந்தாய்"

என்று காட்டுகிறார். இவ்வாறு குறவர் எழுப்பும் பல்லாண்டொலி அழகர்மலை எங்கும் எல்லாவிடத்திலும் கேட்கின்றதாம்.

"எல்லாவிடத்திலும் எங்கும் பரந்து பல்லாண்டொலி
செல்லா நிற்கும் சீர் தென் திருமாலிருஞ் சோலையே"

என்பது பெரியாழ்வார் திருவாக்கு.

மலைவாழ் குறவர்களே யன்றிப் பறவைகளும் வண்டுகளும் கூடத் திருமால் திருநாமங்களே சொல்லிக் கூவுகின்றன.

"காலை எழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள்
மாலின் வரவு சொல்லி மருள் பாடுதல் மெய்ம்மை கொலோ?
சோலை மலைப் பெருமான் துவராபதி எம் பெருமான்
ஆலினிலைப் பெருமான் அவன் வார்த்தை உரைக்கின்றதே"

(9–8)

இனி வண்டுகள் பாடுவதை

"அறுகால வரிவண்டுகள் ஆயிரநாமம் சொல்லி
சிறுகாலைப் பாடும் தென் திருமாலிருஞ் சோலையே" (4.2.8)

என்று ஆழ்வார் குறிப்படுகிறார்.

அழகர் மலையில் காவல் பூதங்கள் வாழ்கின்றன; அவை அழகருடைய பகைவர்கள் நுழைந்தால் அவர்களைப் புடைத்துக் கொன்று குருதியைப் பருகிவிடும் என்னும் அரிய செய்தியொன்றைப் பெரியாழ்வார் காட்டுகிறார் காண்மின்:-

"சிந்தப் புடைத்துச் செங்குருதி கொண்டு பூதங்கள்
அந்திப்பலி கொடுத்து ஆவத்தனம் செய் அப்பன் மலை"(4.2.8)

நம்மாழ்வாரும் அழகரும்:

திருவாய் மொழியில் திவ்விய தேச விஷயமான முதல் பதிகம் பெற்றவர் நம் அழகரேயாவார். கிளரொளியிளமை-என்று தொடங்கும் பதிகம் அழகர் திருமலைக்குரியது அல்லவா?

நம்மாழ்வாரைக்கொண்டு திருவாய்மொழியைப் பாடியவர் நம் அழகரே.

' பண்ணார் பாடலின் கவிகள் யானாய்த் தன்னைத்தான் பாடித் தென்னா என்னும் என்னம்மான் திருமாலிருஞ்சோலையானே' இவ்வாறு நம்மாழ்வார் உலகிற்கு உணர்த்துகிறார். திராவிட வேதத்தை உலகிற்கு ஈந்த பெருந்தகை திருமாலிருஞ்சோலை எம்பெருமான் அழகர் ஆவார்.

பாமரமக்கள் அழகரைக் கள்ளழகர் என்று அழைத்து வருவதற்கும் நம்மாழ்வாரே அடிகோலினார். அழகரை ஆழ்வார் 'வஞ்சக்கள்வன் என்று கொஞ்சிப் பேசுகிறார்' அடியார் நெஞ்சைக்கவரும் கள்வன் அழகரே! நம்மாழ்வார் உத்ஸவமூர்த்தியான அழகரின் பேரழகை 'முடிச்சோதியாய்' என்ற திருவாய்மொழியில் உணர்ச்சி பொங்கக் கவிதையாக்கித் தருகிறார். 'முடிசோதியாய்' என்ற பதிகத்திலும் 'முந்நீர்ஞாலம்' என்ற பதிகத்திலும் அழகர் மலைபற்றிய குறிப்பு இல்லாதுபோயினும் அவை இரண்டும் அழகர் விஷயமான திருவாய்மொழிப் பதிகங்களே என்பது மணவாளமாமுனிகளின் கருத்தாகும்.

எம்பெருமானாரும் அழகரும்

இராமானுசர் ஒரு சமயம் நாச்சியார் திருமொழி விரிவுரை அருளியபோது 'நாறுநறும்பொழில்' பாசுரம் நேர்பட்டவுடன் அடியார்களைப் பார்த்து, 'ஒரு பெண் பிள்ளை பிரார்த்தித்து வைத்தாள். அவளுடைய சம்பந்தம் பெற்ற நாம் உடனே அவளுடைய ஆசையைத் தலைக்கட்டுவோம்' என்று கூறிச் சடக்கெனப் புறப்பட்டுத் திருமாலிருஞ்சோலை அடைந்து அழகருக்கு நூறு தடா நிறைய அக்கார அடிசிலும் நூறுதடா நிறைய வெண்ணெயும் சமர்ப்பித்து மகிழ்ந்தார். எம்பெருமானார் வில்லிபுத்தூர் சென்று ஆண்டாளைத் திருவடிதொழுது நின்றார். ஆண்டாள் அர்ச்சாவதார நிலையை மீறி நாலடி நடந்து எம்பெருமானரை 'அண்ணாரே' என்று அருள் பாடிட்டு வரிசைகள் நல்கினாள். அன்று தொட்டு இராமானுசருக்குச் கோயில் அண்ணன் என்ற திருநாமம் ஏற்பட்டது.

இராமானுசரை மனம் கவர்ந்த பாசுரம்:-

"நாறு நறும் பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு நான்
நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன்
நூறு தடா நிறைந்த அக்கார அடிசில் சொன்னேன்
ஏறு திருவுடையான் இன்று வந்து இவை கொள்ளுங்கொலோ"

நான்கு பிராட்டியர்களுடன்
கள்ளழகரின் திருக்கல்யாண கோலம்

கள்ளர் திருக்கோலம்

எம்பெருமானார் பெருமையை அழகர் வெளியிட்டது:-

ஒரு நாள் திருவோலக்கத்தில் நம் இராமானுசன் அடியார்க்கு அருளிப்பாடு என்று அழகருக்குத் திருவுள்ளமாய் அருளிச்செய, 'நாயன்தே' என்று ஆசாரியர்கள் எல்லோரும் எழுந்தருளித் திருவடிகளிலே சேவித்துநிற்க, பெரியநம்பி வழியில் சிலர் வராமல் இருக்க, அழகரும் 'அது ஏன்? நீங்கள் நாம் அழைக்க வாராது இருப்பது ஏன்?' என்று கேட்டருள, அவர்களும் "இராமானுசன் அடியார்களுக்கல்லவா? அருள்பாடிட்டது ! நாங்களும் அவர் எங்களுக்கு சிஷ்யர் என்று வாராதிருந்தோம் " என்று விண்ணப்பம் செய்ய, அழகரும் அவ்வார்த்தைக் கேட்டு மிகவும் திருவுள்ளம் புண்பட்டு, "தசரதனும் வாசுதேவனும் நம்மைப் புத்திரனாக நினைத்தது போல், நீங்கள் இராமானுசனை சிஷ்யராகக் கருதினீர்கள்! நாம் சாந்தீபனியிடத்தில் கல்வி கற்றது போல் இராமானுசனும் பெரிய நம்பிகளிடத்துக் கல்விகற்றதாயிருக்கும் கண்டீர்" என்று பெரியநம்பி திருவமிசத்தோருக்கு அறிவுறுத்தினார்.

மற்றொருசமயம் கிடாம்பியாச்சான் என்ற இராமானுசன் சிஷ்யர் அழகரை சேவித்து நின்றபோது, அழகர் அருள்பாடிட்டு, 'ஒரு சுலோகம் சொல்லும்' என்றும் நியமித்தார். அவரும்

'அபராத ஸஹஸ்ர பாஜநம்
பதிகம் பீம பவார்ணவோதரே !
அகதிம் சரணாகதம் ஹரே'
க்ருபயா கேவலமாத்ம ஸாத்குரு!! (ஸ்தோ. 48)

என்ற சுலோகத்தைச் சொல்ல, 'அகதிம்' என்ற பதத்தைஉச்சரித்தவுடன் அழகர், "நம் இராமானுசனை கதியாகப் பெற்றுவைத்தும் 'அகதி' என்று சொல்லிக் கொள்ளாதீர்" என்று திருவுள்ளமாய் அருளினார். இவற்றால் இராமாநுஜ சம்பந்தமே திருமாலடியார்களுக்குச் சிறப்பானது என்றும் அதை உணர்ந்தால் ஒருவரும் கதியற்றவர்கள் என்று ஆகார்கள் என்றும் அழகர் உணர்த்தியருளியது குறிக்கொள்ளத்தக்கது.

திருமாலையாண்டாளும் அழகரும்:-

இராமானுசருடைய ஆசாரியார் ஐவருள் திருமலையாண்டான் ஒருவர். இவர் திருமாலிருஞ்சோலையில் அவதரித்தார். இவருடைய இயற்பெயர் ஞானபூர்ணர். இவருடைய முதாதைகளில் ஒருவர் கண்ணுக்கினியான் என்பவர் ஒருமுறை சில மலையாள மாந்திரிகர்கள் வந்து அஞ்ஜன மையைக் கண்ணில் இட்டுக் கொண்டு அதன் மகிமையால்மறைந்து நின்று அழகருடைய பேரொளிக்கலையை ஆகர்ஷித்துக் கொண்டு போக வந்திருந்தனர். அதையறிந்த இவர் மாந்திரிகர்கள் பலி பிரசாதத்தைஉண்டே உயிர் வாழ்கின்றனர் என்றறிந்து அந்த பிரசாதத்தில் மிளகு அதிகமாகச்

சேர்க்கும்படி செய்தார். அதை உண்டபின் மாந்திரிகர்களுக்குக் கண்ணீர் நிறைந்து அஞ்ஜனமை கரைந்து அவர்கள் வெளிப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள் என்றும் அதனால் அவர்க்கு திருமாலை ஆண்டான் என்கிற பட்டப்பெயர் ஏற்பட்டு, அழகருக்குப் புரோஹிதராகவும் நியமிக்கப் பெற்றுப் பரம்பரையாக இன்றளவும் அப்பெருமைகள் அவருடைய குலத்தினரால் அனுபவிக்கப்பட்டு வருகிறது.

இவருடைய திருக்குமாரர் சுந்தரத் தோளுடையான் என்பவராவார் திருமாலையாண்டாள் கைங்கரியம் முடித்து இரவில் திருமாளிகை திரும்பும் போது ஒரு சமயம் அழகரே அவருடைய பணியாள் சுந்தரராஜனாக உருவெடுத்துத் திருவிளக்குப்பிடித்துச் சென்றார் என்பது ஐதிகம்.

திருமாலையே இவ்வாறு பணியாளாக ஆண்டமையால் இவர்க்குத் 'திருமாலையாண்டான்' என்ற பெயர் ஏற்பட்டதாகவும் கூறுவர். இக்கதையினை அழகர் கிள்ளை விடு தூது என்ற நூல்

ஞான தீபம் காட்டி நன்னெறி காட்டென்றொருப
மான தீபம் காட்டி வந்துநின்று - மேனாளில்
முத்தமிழ்க்குப் பின் போவார் முன்போகப் பின்போன
அத்தன் திருமாலையாண்டான்

என்று குறிப்பிடுகிறது. திருமாலையாண்டானுக்கு வடமொழியில் 'மாலாதரர்' என்ற பெயர் வழங்குகிறது. ஆராய்ச்சியாளர் இவர் எம்பெருமானுக்குத் திருமாலைகட்டித் தரும் 'பணியினையும் செய்திருக்கக்கூடும் என்று கருதுகின்றனர். 'ஆண்டார்' என்னும் சொல் கல்வெட்டுக்களில் பூ இடுவாரைக் குறித்துப் பிரயோகிக்கப்பட்டிருப்பது இக்கருத்துக்கு அரண் செய்கிறது. இவர்காலம் 988 முதல் 1078 வரை யாகும். கி.பி. 1976 ஆம் ஆண்டு வரை திருமாலையாண்டான் வமிசத்தினர் 24 பரம்பரையாகத் தொடர்ந்து அழகருக்கு புரோகிதராகப் பணியாற்றினர். திருமாலையாண்டானுடைய குமாரர் சுந்தரத் தோளுடையார் எழுபத்துநான்கு சிம்மா சனாதிபதிகளில் ஒருவராக அழகர் கோயிலில் இராமானுசரால் நியமிக்கப் பட்டார்.

சித்திரைத் திருவிழா ஊர்வலத்தில் அழகர் பல்லக்கிற்கு முன் ஆண்டார் பல்லக்கு முன் செல்லும். குருவின் பின்னால் சீடன் செல்வது போல் அழகர் பின் செல்கிறார். 'ஆண்டார் வரும் முன்னே அழகர் வரும் பின்னே', என்று இன்னும் பழமொழி வழங்குகிறது.

திருமலையாண்டான் குமாரர் ஒரு சமயம் தம்முடைய திருத்தகப்பனார் சிராத்த காலத்தில் புஜிப்பதற்கு நிமந்திரண ஸ்வாமி கிடைக்காது வருந்திய போது அழகரே பிராம்மண உருக்கொண்டு வர அவரை திருமாலையாண்டான் குமாரர் வரித்து நீராடுவதற்காக எண்ணெய்க் காப்பு

வழங்கினார்; அழகரும் அதை தரித்துக் கொண்டு நூபுர கங்கையில் நீராடி எழுந்தருளி சிராத்தத்தை நிரைவேற்றிச் சடக்கென மறைந்தார். பிறகுதான் அவர் அழகரே என்பதைத் திருமாலையாண்டான் குமாரர் உணர்ந்து உள்ளம் உருகிநின்றார். அந்தசிராத்ததினம் ஐப்பசி மாதம் சுக்லபக்ஷ துவாதசி திதியாகவும் அமைந்தது. இன்றும் அந்த சம்பவத்தின் நினைவாக அழகர் தலையருவி உற்வசம் கொண்டாடும் வியாஜத்தால் நூபுரகங்கைக்கு எழுந்தருளித் தைலக்காப்புக் கொண்டருளி நீராட்டமும் செய்தருளுகிறார். ஸ்தல புராணத்தில் அந்த தினம் நூபுர கங்கையில்நீராடுவதற்கு விசேஷ தினமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

தோழப்பரும் அழகரும்

மணவாளமாமுனிகள் தம்முடைய அந்திம தசையில் திருமலை தோழப்பரை மாவலி வாணாதிராயனுடன் அழகர் கைங்கரியம் செய்ய நியமித்து அனுப்பியருளினார்.

திருமாலை தந்தான் தோழப்பன் என்ற நிருவாகம் அழகர் திருக்கோயிலில் இருநூறு ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்டுள்ளது. இந்நிருவாகத்தாரின் முன்னோர் ஒருவர் ஒரு படையெடுப்புக் காலத்தில் இறைவன் திருமேனியைப் பகைவரிடத்திலிருந்து காப்பாற்றிய முயற்சியில் அத்திருமேனி ஒரு குழிக்குள் மறைத்து வைத்தபோது மண்சரிந்துவிழுந்து அவர் உயிர் நீங்க தியாகத்தால் ‘ஆண்டார்’ பணியில் அவர் வழியினர்க்குப் பங்கு தரப்பட்டது. அவ்வாறு தியாகம் செய்தவர் ‘தோழப்பர்’ என்று அழைக்கப்பட்டார். அழகருக்குத் தோழனாக இருந்து திருமேனியைக் காத்தருளியதால் அவ்வாறு அழைக்கப்பட்டார். அழகர் கிள்ளைவிடு தூது

வையங்கார் வண்ணனையே வந்து தொழும் தோழப் பையங்கார் என்னும் ஆசாரியரும் என்று குறிப்பிடுகிறார். அழகர் பிள்ளைத் தமிழ் நூலாசிரியரும் “தோழப்பர் நற்றமிழ்ச் சீர்பதிப்போன்” என்று தம் ஆசிரியரைக் குறிப்பிடுகிறார்.

அமுதாரும் அழகரும்

அமுதார் என்ற பணிப்பிரிவினர் நாச்சியார் பரிகரமாகப் பணி செய்தனர். இவர்கள் பிராம்மணரில் ‘சாமானியர்’ என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அழகர்கோயிலில் மட்டும் கைங்கரியம் செய்து வருகின்றனர். இவர்கள் திருமடப்பள்ளியில் பரிசாரகம் செய்து வந்தனர். இவர்களுக்கு சன்னிதி பரிசாரகப் பணியும் பிற்காலத்தில் வழங்கப்பட்டது.

திருமலை நாயக்கர் காலத்திற்கு முன்னர் சித்திரைத் திருவிழாவிற்கு அழகர் ஊர்வலம் சோழவந்தானை அடுத்த தேனூர் ஆற்றங்கரையில் அழகர் எழுந்தருளியிருந்த பந்தல் தீப்பற்றி எரிந்தது. தீப்பற்றியதும் பணியாளர் உள்ளிட்ட திருவிழாக் கூட்டம் சிதறி ஓடிவிட்டது. நாச்சியார் பரிகரத்தைச் சேர்ந்த (மடப்பள்ளி) பரிசாரகர் ஒருவர் தீக்குள் பாய்ந்து அழகர் திருமேனியை வெளியில் எடுத்து வந்து ஓரிடத்தில் வைத்துவிட்டார். பின்னர் தீப்புண்களுடன் குற்றுயிராய்க் கிடந்தார். உத்ஸவர் திருமேனி காவலான திருமலை நம்பிகள் அழகரைக் காணாது தவித்தார். குற்றுயிராகக் கிடந்த பரிசாரகரை அணுகிக் கேட்டபோது அவர் அழகரை ஒளித்து வைத்திருக்கும் இடத்தைக் காட்டி அதற்குப் பிரதியாக திருமலை நம்பிகள் கோயிற் பணிகளில் ஒரு பங்கைக் கேட்டார். திருமலைநம்பிகள் அவ்வாறே வாக்களித்ததும் அழகரை அவரிடம் சேர்ப்பித்துவிட்டு மடப்பள்ளி பரிசாரகர் உயிர்துறந்தார் . அவருடைய வழியினர்க்குத் திருமலைநம்பிகளின் பணிப்பிரிவு பகிர்ந்து வழங்கப்பட்டது.

பண்டாரியும் அழகரும்

அழகர் கோயிலில் திருமாலை கட்டும் பணியினர் 'பண்டாரி' எனப்படுவார்கள். இவர்கள் சாத்தாத ஸ்ரீவைஷ்ணவ குலத்தினர். முன்னொரு காலத்தில் அழகர்கோயில் வெளிக்கோட்டைப் பகுதிக்குள் கோயிற் பணியாளர்கள் குடியிருந்தனர். கிழக்கு ரதவீதியும் தெற்கு தர வீதியும் சந்திக்குமிடத்தில் பண்டாரியின் வீடு இருந்தது. அங்கு வாழ்ந்த வயதான ஓர் அம்மையார் அழகரிடத்தில் பற்றுமிக்கவர். தேரோட்டத் திருநாளில் அழகருக்கு படைக்க அவளிடத்தில் வறுமைகாரணமாக உயர்ந்த உணவுப்பொருள் ஏதுமில்லை. அன்று காத்தொட்டிக்காய் வற்றலும் காணப்பருப்புமே அவளிடமிருந்தது. அவற்றை வீட்டுற்குள்ளேயே அழகருக்குப் படைத்தாள். தேர் அவள் வீட்டின்முன் நகராது நின்றுவிட்டது. அழகர் அர்ச்சகர் மீது ஆவேசித்து 'என் அடியாள் உண்ணும் காணப்பருப்பும் காத்தொட்டிக்காய் வற்றலுமே எனக்கு வேண்டும்' என்று ஆணையிட, அவ்வாறே பரிகரத்தார் அக்கிழவியின் மூலம் அவற்றைப் பெற்று அழகருக்குப் படைத்தனர். பின்னரே தேர் நகர்ந்தது. காணப்பருப்பும் காத்தொட்டிக்காய் வற்றலும் நெடுங்காலம் அழகருக்குத் தேர்த்திருவிழாவில் அம்மூதாட்டியின் நினைவாகப் படைக்கப்பட்டுவந்து சமீபகாலத்தில் அவ்வழக்கம் நின்றுவிட்டது. மேற்குறித்த வரலாற்றுச் செய்திகள் செவிவழியாகச் சொல்லப்பட்டு வருகின்றன.

மணவாள மாமுனிகளும் அழகரும்

இராமாநுசரின் மறுபிறவியான மணவாளமாமுனிகள் திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளில் ஆசிரயித்தார். அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு ஆழ்வாரி திரு நகரியிலிருந்து திருவரங்கம் நோக்கிப் புறப்பட்டு எழுந்தருளினார். வில்லிப்புத்தூரிலே வடபெருங்கோயிலுடையானையும் பெரியாழ்வாரையும்

திருவடி தொழுது அன்னவயல் புதுவை ஆண்டாளின் அருளையும் பெற்று அங்கிருந்து மாலிருஞ்சோலை தொழக்கருதி 'நெறிபடவதுவே நினைவதுநலமே' என்கிறபடியே வழிப்போக்கிலே ஈடுபட்டு அழகர்தம் கோயிலிலே புகுந்து திருமாலிருஞ்சோலை நின்றான் கனைகழல்களைக் கண்டு வணங்கித் தொழுது, 'முடிச்சோதியின்' படியே முற்றும் அனுபவித்துத் தீர்த்தப் பிரசாதங்கள் பெற்று,

> விஜ்ஞாபனாம் வநகிரீச்வர ஸத்யரூபாமங்கீகுருஷ்வ
> கருணார்ணவமாமகீநாம் !
> ஸ்ரீ ரங்கதாமநி யதா புரமேகதோஹம்
> ராமாநுஜார்யவசக: பரிவர்த்திஷீய !!

(129)

(கருணைக் கடலான திருமாலிருஞ்சோலை அழகரே, யதார்த்தமான அடியேனது விண்ணப்பத்தைத் திருவுள்ளம் பற்றியருளவேணும், அது ஏதெனில் அடியேன் முன்பு போலத் திருவரங்கம் பெரிய கோயிலிலே எம்பெருமானாருடைய திருவடிகளிலே சேர்ந்து வாழ அருள்புரியவேண்டும்) என்று முன்பு கூரத்தாழ்வான் வேண்டிய வார்த்தைகளை அனுஸந்தித்து அப்படியே பிரார்த்தித்தருள அழகர் கிருபையால் அரங்க மாநகர் அடைந்தார். மணவாளமாமுனிகள் கி.பி.1414 ஆம் ஆண்டு தம்முடைய 44 வது பிராயத்தில் அழகர்மலைக்கு முதன்முதலில் எழுந்தருளினார் என்று கோயிலண்ணன் திருமாளிகை ஒழுகு கூறுகிறது. அப்போது மணவாளமாமுனிகள் இல்லற வாழ்வில் எழுந்தருளியிருந்தார்.

மாமுனிகள் முற்றும் துறந்த முனிவரராய்த் திருவாய்மொழிப் பொருளையே பொழுதுபோக்காய்க் கொண்டு வாழ்ந்தருளும் காலத்தில் நம்பெருமாள் ஆணையை மேற்கொண்டு திருவரங்கம் பெரிய கோயில் பெரிய திருமண்டபத்தில் ஈடுமுப்பத்தாறாயிரமான திருவாய்மொழிப் பேருரையை விரிவாக எடுத்துரைக்க, சாற்றுமுறையன்று நம்பெருமாள் அர்ச்சக குமாரனாகத் தோன்றி

> ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் !
> யதீந்த்ர ப்ரவணம் வந்தேரம்யஜாமதரம்முனிம் !!

என்ற தனியனை விண்ணப்பித்து மறைந்தருளினார். இத்தனியனை அழகர் வெளியிட்ட பிரபாவத்தை 'யதீந்த்ர ப்ரவண ப்ரபாவம்' என்ற நூல் சிறப்பாகக் குறித்து வைத்திருக்கிறது.

அழகர்திருமலையில் அழகருடைய கைங்கரியத்தில் முற்றும் ஈடுபட்டவராய், மணவாள மாமுனிகளுடைய திருவடிகளில் ஆசிரயித்தவராயிருந்த திருமாலிருஞ்சோலை ஜீயர் தம்முடைய ஆசாரியரான மாமுனிகளின் நற்பண்புகளையும் திருமேனி நலத்தையும் சிந்தனை செய்து

கொண்டு அழகர் திருக்கோயிலை வலமாக எழுந்தருளித் தமக்கு நித்தியமாக அனுசந்திப்பதற்கு மாமுனிகள் விஷயமான தனியன் பெரியோர்கள் மூலமாக அவதரிக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டே சோமச்சந்த விமானத்தை வணங்கி சேனைமுதலியார் ஸந்நிதியில் தண்டன் சமர்ப்பித்து நின்றார். அந்த சந்தர்ப்பத்தில் சாயரட்சை சுற்றுக்கோயில் திருவாராதன அவஸரமாயிருந்து, அழகருடைய அர்ச்சகர் சேனைமுதலியாருக்குத் திருவாராதனம் கண்டருளப்பண்ணி திருவந்திக்காப்பும் கண்டருளப் பண்ணியதும் சேனைமுதலியாரின் திருமுகத்தை நோக்கி,

"ஸ்ரீ சைலே ஸுந்தரேசஸ்ய கைங்கர்ய நிரதோ யதி :/
அமந்யத குரோஸ் ஸ்வஸ்ய பத்ய ஸம்பவமார்யத ://"

(தெற்குத் திருமலை அழகருடைய கைங்கர்யத்திலே ஊற்றமுடைய ஜீயர் தமது ஆசாரியராகிய மணவாள மாமுனிகளுக்கு ஒரு தனியன் பெரியோர் திருவாக்கிலிருந்து அவதரிக்க வேண்டும் என்று எண்ணினார்) என்று விண்ணப்பம் செய்துவிட்டுப் பெருமாள் ஸந்நிதிக்கு அமுது செய்தருளப் பண்ணச் சென்றுவிட்டார்.

அவ்வளவில், மணவாள மாமுனிகளுடைய மற்றொரு சிஷ்யராய் 'சேனைமுதலியார்' என்ற திருநாமத்தையுடையவர் தெற்குத்திருப்பதிகளெல்லாம் மங்களாசாசனம் செய்து அழகரைத் திருவடி தொழுவதற்காக ஆங்கே எழுந்தருளினார். அவரைக் கண்ட திருமாலிருஞ்சோலை ஜீயர் மிகவும் ஆதரித்து அவரை அழைத்துக் கொண்டு அழகர் திருமுன்பே எழுந்தருளினார். அழகர் அவரை மிகவும் கிருபை பண்ணியருளி தீர்த்தம் முதலான வரிசைகள் நல்கி ஸ்ரீசடகோபன் என்ற திருவடி நிலைகளை அவருடைய (சேனைமுதலியாருடைய) திருமுடியிலே தரிக்க வைத்து அர்ச்சகர் முகமாக அழகர் ஆவேசித்து, "உமது நாவின் நுனியில் நான் இருந்து கொண்டு சொல்லப்போகிறேன். என்னுடைய நியமனமாக உம்முடைய ஆசாரியரான மணவாளமாமுனிகளுடையதாய்ப் பரம பவித்திரமான இந்த சுலோகத்தைத் திருமாலிருஞ்சோலை ஜீயருக்குச் சொல்லும்" என்று அழகர் நியமித்த மறுகணமே அவர் "ஸ்ரீசைலேசதயாபாத்ரம்" என்று தொடங்கும் தனியனைச் சொன்னார்.

உடனே அர்ச்சகரும் அதைக் கேட்டு அவ்வாறே ஜீயருக்கு அருளிச் செய்தார். ஜீயரும் கேட்டருளித்தம் மடத்திற்கு எழுந்தருளினார். பின்பு சேனைமுதலியாருக்கும் அர்ச்சகருக்கும் அந்த சுலோகம் நினைவிலிருந்து மறைந்து போயிற்று. அவ்விருவரும் மடத்திற்குச் சென்று திருமாலிருஞ்சோலை ஜீயரிடம் அந்த சுலோகத்தை அருளிச்செய்யவேண்டும் என்று கேட்டனர். ஜீயரும் சேனைமுதலியாரை நோக்கி, 'அருளிச் செய்த தேவரீரே கேட்க வேண்டுமோ?' என்று வினவினார். அவரும், "எனக்கு ஒன்றும் நினைவில் இல்லை. ஆனால் அது

சுந்தரராஜர் சுந்தரஜாமாத்ரு முனி (மாமுனிகள்) விஷயமாக அருளிச்செய்தது" என்று அடக்கத்தோடு அருளிச்செய்தார். திருமாலிருஞ்சோலை ஜீயர் மிகவும் அதிசயப்பட்டுத் தம் நினைவில் நன்கு தங்கிய அத்தனியனை அவ்விருவர்க்கும் தெரிவித்தார்.

உடனே திருமாலிருஞ்சோலை ஜீயரும் சேனைமுதலியாரும் அர்ச்சகநம்பியும் அழகரின் அருளை நினைத்தும் சுலோகத்தின் பொருளை நினைத்தும் கொண்டாடி மகிழ்ந்தனர். சேனைமுதலியாரும் இந்தச் செய்திகளைத் திருவிரங்கத்திலுள்ள பெரியோர்களிடம் தெரிவிக்க விரும்பி விரைவாகத் திருவரங்கம் சேர்ந்தார். அதற்குச் சற்று முன்னர் தான் திருவரங்கர் அர்ச்சக குமாரனாகத் தோன்றி மாமுனிகள் விஷயமாக "ஸ்ரீசைலேச" தனியனை வெளியிட்டருளிமறைந்தார். சேனைமுதலியாரின் செய்தியைக் கேட்ட பெரியோர்கள் அரங்கனுக்கும் முற்பட்டு அழகர் அத்தனியனை வெளியிட்டதை உணர்ந்து மிகவும் பரவசப்பட்டனர். திருவரங்கத்தில் 'ஸ்ரீசைலேச' தனியன் நம்பெருமானால் கி.பி.1432 ஆம் வருடத்தில் மணவாள மாமுனிகளுக்கு சிஷ்யகைங்கரியமாக ஸமர்ப்பிக்கப்பட்டது.

பின்பு மணவாளமாமுனிகள் ஆழ்வார் திருநகருக்கு எழுந்தருள விருப்பம் கொண்டு பிரயாணப்பட்டு வரும்போது கூடல் என்ற மதுரை மாநகர்க்கு எழுந்தருளி கூடல் அழகரை மங்களாசாசனம் செய்து திருப்பல்லாண்டு அவதரித்த திவ்வியதேசம் என்று மிகவும் ஆதரித்து அங்கே தங்கியிருந்தபோது, அழகர் கோயில் அழகாபுரியை அப்போது அரசாண்டு வந்த மகாபலிவாணாதிராயன் வந்து ஜீயரை ஆசிரயித்தான். ஜீயர் அவனுக்கு பஞ்சஸம்ஸ்காரம் செய்து 'பிள்ளையுறங்காவில்லிதாஸன்' என்று தாஸ்ய நாமமும் பிரசாதித்தருளினார். அவனும் ஜீயரின் வேண்டுகோளுக்கு ஏற்றவாறு அழகருக்குப் பலதிருப்பணிகள் செய்தான். ஜீர்ணமாயிருந்த சோமச்சந்த விமானத்தைப் புதுப்பித்துப் பொன்வேய்ந்தான். மாமுனிகள் திருப்புல்லாணி சென்று அங்கிருந்து ஆழ்வார் திருநகரி எழுந்தருளினார். ஆழ்வாரை சேவித்து மீண்டெழுந்தருளும்போது அழகன் அலங்காரன் மலையான திருமாலிருஞ்சோலை நின்ற சுந்தரத் தோளுடையானான பரமஸ்வாமியை சேவித்தார். அப்போது தேசங்களில் சில கலகங்கள் உண்டாகவே, அழகர் (உற்சவர்) திருக்குறுங்குடிக்குப் பாதுகாப்பிற்காக எழுந்தருளச் செய்யப்பெற்றார் என்ற செய்தியைக் கேட்டு மாமுனிகள் மிகவும் துக்கமடைந்தார். ஆயினும் சிறிதுமனம் தேறி உடையவரைப் போல் வேண்டும் பொருள்களையெல்லாம் வரவழைத்துப் பாங்காகத் தளிகை பண்ணி நூறுதடாவில் அக்காரவடிசிலும் வெண்ணெயும் சேர்த்து 'ஏறுதிருவுடையானுக்கு சமர்ப்பித்து மங்களாசாஸனம் செய்து, மூலவரான பரமஸ்வாமியின் திருமுகமண்டலத்தை சேவித்து '' நங்கள் குன்றம் கைவிடான்' (திருவாய்.10.8.4) என்று ஆழ்வார் அருளிச்செய்த பொய்யில் பாடலைப் பொருளுடையதாய் ஆக்கியருள வேணும் என்று பிரார்த்தித் தருளினார்.

மாமுனிகள் திருவரங்கம் சேர்ந்ததும் அழகருக்கு அவர் செய்தருளிய மங்களாசாஸனம் பலித்து, தேசங்களில் கலகம் அடங்கி அழகரும் பத்திரமாகத் திருமாலிருஞ்சோலை திரும்பி எழுந்தருளினார். எழுந்தருளியதும் மாமுனிகளுக்குத் திருமுகம் எழுதி "நாம் உம்முடைய நினைவின்படியே வந்து நங்கள் குன்றம் கைக்கொண்டு குடிபுகுந்தோம். நம் வீட்டில் காரியம் நன்றாக நடத்தியருளும்படி ஒருவரை வரவிடவேணும்" என்று அனுப்ப மாமுனிகளும் மிகவும் உகந்தருளி 'எதிராஜ ஜீயர்' என்றும் திருநாமம் உடையவராய் மகாவிரத்தராய் மங்களாசாஸன பாராயிருக்க ஒரு யதிபுருஷரை அழகர் ஸ்ரீ கார்யார்த்தமாக அனுப்பியருளினார். அவரும் அங்கே சென்று அழகரை சேவித்துதிருமாலிருஞ்சோலை ஜீயர் பட்டத்தில் வீற்றிழுந்து அழகருக்கு எல்லாவிதமான கைங்கரியங்களும் செய்தார்.

அழகர் திருக்குறுங்குடியில் தங்கியிருந்தபோது அங்கு ஆடி பிரம்மோற்சவம் கண்டருளினார். இன்றும் ஆடி உத்திராடத்தில் காணாப்பருப்பும் காத்தொட்டிக்காய் கறியமுதும் தளிகை பண்ணி குறுங்குடி நம்பிக்கு கண்டருளப்பண்ணி அழகர் விஷயமான பாசுரங்களை ஸ்ரீவைஷ்ணவர்கள் கோஷ்டியாக சேவித்து சாத்துமுறை பண்ணி கோஷ்டி விநியோகம் ஆகிவிடுகிறது என்று திருக்குறுங்குடித் தலவரலாறு (1985 பதிப்பு) குறிப்பிடுகிறது.

அரங்கனும் அழகரும்

திருவரங்கத்தை முகமதியர் முற்றுகையிட்டபோது, நம் பெருமாளைத் திருப்பல்லக்கிலே எழுந்தருளச் செய்து பிள்ளை லோகாசாரியர் தெற்கு நோக்கிப் பாதுகாப்புமிக்க பிரதேசத்தை நாடிப் பிரயாணப்பட்டார். வழி நடுவில் ஜோதிஷ்குடி என்ற இடத்தில் பிள்ளைலோகாசாரியர் முதிர்ந்த பிராயத்தில் மிகவும் தளர்ச்சியடைந்து பரமபதித்துவிட்டார். உடனே அவருடைய அந்தரங்கமான சிஷ்யர்கள் நம்பெருமாளைத் திருமாலிருஞ்சோலைக்கு எழுந்தருளச் செய்து, அங்கே பெரிய கிணறு ஒன்றை வெட்டி அதற்கு அழகியமணவாளன் திருக்கிணறு என்று பெயரிட்டு அந்தக் கிணற்றுக்குள் அரங்கன் திருமேனியை பத்திரமாக ஒளித்து வைத்து சொந்தமாகத் திருவாராதனங்கள் நடத்திவந்தனர். இவ்வாறு ஒரு வருஷம் திருவரங்கர் அழகர் மலையில் தங்கியிருந்தார். பிறகு அங்கிருந்து மலையாள தேசம் சென்று பல இடங்களில் தங்கி மீண்டும் கி.பி.1370ல் அறுபது ஆண்டுகளுக்கு பிறகு திருவரங்கம் சேர்ந்தார். திருமங்கைமன்னன் "பனைவளர் பூம்பொழில் பொன்னிசூழ் அரங்கநகரான்... தேவர்கள் நாயகனைத் திருமாலிருஞ்சோலை நின்ற கோவலர் கோவிந்தனை" என்று பாடியது பிற்காலத்தே நிகழ்கிறது.

இச்செய்திகள் யாவும் பிள்ளைலோகம்சியர் இயற்றியருளிய 'எதீந்திரப்பிரவணப்பிரபாவம்' என்றும் அரிய நூலிருந்து தொகுக்கப்பட்டவை.

4. திருக்கோயில் பற்றிய கல்வெட்டுச் செய்திகள் மற்றும் கோயில் அமைப்பு

இக்கோயிலில் உள்ள சாசனங்கள், தமிழ், தெலுங்கு/ கிரந்தம், பிராமி, வட்டெழுத்து முதலிய பல எழுத்துகளில் எழுதப்பட்டவை. ஆனால் அவற்றுள் தமிழில் எழுதப்பட்டவையே அதிகம். அரசாங்கத்தின் சாசன ஆராய்ச்சி இலாகா இவற்றுள் 120 சாசனங்களின் பிரதிகளை எடுத்து வைத்து இருக்கிறது. இவை பல வம்சத்து அரசர்கள் காலத்தவை, பாண்டியர், சோழர், ஹொய்சாலர், விஜயநகர அரசர், வாணர், நாயக்கர் முதலிய பலரது காலத்துச் சாசனங்கள் இங்கு காணப்படுகின்றன. இவற்றுள் பிராமி எழுத்துகளில் எழுதப்பட்டவை கிருஸ்துவ சகாப்தத்திற்கு முந்தியவை. கி.மு.3 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அசோகர் காலத்தில் பிராமி எழுத்து உபயோகத்தில் இருந்தது. ஆகவே இங்குள்ள பிராமிசாசனம் ஏறக்குறைய அக்காலத்தைச் சேர்ந்ததாக இருக்கவேண்டும். பஞ்சபாண்டவர் படுக்கை என்று சொல்லப்படும் ஒரு குகையில் பாறையின் மீது எழுதப்பட்ட இச்சாசனத்தில் தமிழ்ச் சொற்கள் பிராமி எழுத்துகளால் எழுதப்பட்டுள்ளன. இது வரையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழைய சாசனங்களில் இது ஒன்று. இதில், இக்குகையை அமைப்பித்த ஜைன முனிவர்களின் பெயரும் அதில் வாழ்ந்தவர்களின் பெயரும் எழுதப்பட்டிருக்கின்றன.

அழகர்மலையின் அருகிலுள்ள ஆனைமலை, கழுகுமலை அரிட்டாபட்டி முதலிய இடங்களிலும் கி.மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமி, பாலி, வட்டெழுத்து முதலிய லிபிகளில் எழுதப்பட்ட கல்வெட்டுகள் பல இருக்கின்றன. இவற்றில் அக்காலத்தில் வாழ்ந்த ஜைனர்களைப் பற்றிய செய்திகள் உள்ளன.

அழகர் மலையைப் பற்றிய குறிப்புகள், தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், உடுமலைப்பேட்டை, தாடிக்கொம்பு, காட்டழகர் கோயில் முதலிய இடங்களில் உள்ள கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன.

இந்தச் சாசனங்களினால் இக்கோயிலுக்கு அளவில்லாத சொத்தும், பொருள்களும் இருந்தன என்று தெரிகிறது. வைகை நதிக்கு வடக்கிலும் இதற்குச் சொந்தமான பல சதுர மைல் பரப்பளவுள்ள நிலம் இருந்தது. 45 சதுர மைல் பரப்புள்ள அழகர்மலை முழுவதும் இதற்குச் சொந்தமாக இருந்தது கணக்கற்ற கிராமங்களும் நிலங்களும் இருந்தன. பல மடங்களும் இக்கோயிலை அடுத்து உண்டாயின. அவை ராமாயணம் மகாபாதரம், புராணங்கள், பிரபந்தங்கள் முதலியவற்றைப் படிப்பதற்கும் சொல்லித்தருவதற்கும் கட்டப்பட்டு பல மானியங்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தன.

இப்படி இங்கு உண்டான மடங்களில் மிகவும் முக்கியமானது ராமானுஜ மடம். இதை ஸ்தாபித்தது ஸ்ரீராமாநுஜரே. இது ஸ்ரீ ராமானுஜ பீடமாக இருந்தது. ஒரு ஜீயர் இம் மடத்திற்கு எப்பொழுதும் தலைவராக இருக்கிறார். ஸ்ரீ ராமாநுஜருக்குப் பின் இப்பீடத்தை அலங்கரித்த பிரசித்திப் பெற்ற ஜீயர் மணவாள மாமுனிகள், ராமாநுஜ கூடம் என்றும் ஒன்று தனியாக இருந்தது. அதில் அழகர் ஆராதனைக்காகவும் ஜனங்களுக்குப் போஜன வசதிக்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இவையன்றி, குலசேகரன் மடம் திருநாடுடையான் மடம், வாணாதரையன் மடம் முதலிய வேறு சில மடங்களும் இருந்ததாகச் சாசனங்கள் மூலம் தெரிகிறது. இன்னும் பல உற்சவங்களுக்காகவும் அபிஷேகம், ஆராதனை முதலியவைகளுக்காகவும் நிபந்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்ததும் சாசனங்களால் தெரிகிறது. முற்காலத்தில் இப்படி சித்திரைத்திருநாள், வைகாசித் திருநாள், ஆடிப்பிரமோற்சவம் ஐப்பசி தலை அருவி உற்சவம், கார்த்திகை, கைசிக ஏகாதசி , மார்கழித்திரு அத்யயன உற்சவம், தெப்ப உற்சவம் முதலிய உற்சவங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிற்காலத்திலும் அப்படி பல கைங்கரியங்களுக்காக நிபந்தங்களை ஏற்படுத்திச் சாசனங்களில் எழுதியிருப்பதை இன்னும் நாம் ஸ்ரீ அழகர் கோயிலில் பார்க்கலாம். இங்குள்ள அரிய கல்வெட்டுக்களிலிருந்து அறியப்படும் இத்திருக்கோயிலின் அமைப்பு பற்றிய செய்திகளை இனிக்காண்போம்.

(1) ஊர்ப்பெயர்கள்

இராஜராஜ பாண்டிய நாட்டு இராஜேந்திர சோழ வளநாட்டு கீழ் இரணியமுட்டத்துத் திருமாலிருஞ்சோலை என்று கல்வெட்டுகளில் அழகர் திருக்கோயில் இடம் பெறும் ஊர் குறிப்பிடப்படுகிறது. இராஜராஜன், இராஜேந்திர சோழன் முதலிய பெயர் வழக்குகள், பாண்டிய நாடு சோழர்களால் வெற்றி கொள்ளப்பட்ட காலத்தில் எழுந்த கல்வெட்டு இதுவாகும். இரணியமுட்டம் எனும் பெயர் அழகர் மலை நிலைப்பகுதிக்குப் பழங்காலந்தொட்டு வழங்கி வந்தது. பத்துப்பாட்டில் ஒன்றான மலைபடுகடாத்தினைப் பாடிய புலவர் இரணியமுட்டத்து பெருங்குன்றூர் கௌசிகனார் என்று கூறிப்பிடப்படுவதால் இரணியமுட்டம் எனும் பெயர்ப் பழமை தெரிகிறது. இரணியம் என்ற பெயரோடு சிற்றூர் ஒன்றும் அழகர் கோவிலுக்கு அருகில் இன்றும் காணப்படுகிறது.

(2) இறைவன் பெயர்.

இங்கு கோயில் கொண்ட இறைவன் பெயரை ஒரு கல்வெட்டு திருமாலிருஞ்சோலை ஆழ்வார் என்று குறிப்பிடுகிறது. திருமாலிருஞ்சோலை பரமஸ்வாமி என்ற பெயரைப் பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கி.பி.1342 ல் எழுந்த விஜயநகர மன்னர் காலத்திய ஒரு கல்வெட்டில் கோயில் இறைவன் அழகர் என்ற பெயரால் குறிப்பிடப்படுகிறார். பிற்கால பாண்டியர் கல்வெட்டுகள் அழகர் என்ற பெயரையே குறிப்பிடுகின்றன.

(3) அக்கிரஹாரம்

சாமந்த நாராயணச் சதுர்வேதி மங்களம் என்ற பெயருடன் திருமாலிருஞ்சோலையில் ஓர் அக்கிரஹாரம் இருந்த செய்தியைக் கல்வெட்டால் அறிகிறோம். இதனை அமைத்துக் கொடுத்தவன் பிள்ளை பல்லவராயன் என்று கல்வெட்டால் அறிகின்றோம்.

(4) கட்டிடத் திருப்பணிகள்

மிழலைக் கூற்றத்து நடுவிற்கூறு புள்ளூர்க்குடி முனையதரையனான பொன் பற்றியுடையான் மொன்னப்பிரான் விரதம் முடித்த பெருமாள் என்பவன் முனையதரையன் திருமண்டபத்தைக் கட்டிய செய்தியை ஒரு கல்வெட்டால் அறிகிறோம். இக்கோயில் மகா மண்டபமான இதற்கு அலங்காரன் மண்டபம் என்றொரு பெயருமுண்டு.

இம்மண்டபத்தை அடுத்த வெளிப்புறமாக உள்ள மண்டபம் ஆரியன் மண்டபம் என வழங்கப்படுகிறது. இம்மண்டபத் தூணிலுள்ள ஒரு கல்வெட்டால் இந்தப் படியேற்ற மண்டபத்தைத் தோமராசய்யன் மகனான இராகவராஜா என்பவன் கட்டிய செய்தி தெரிய வருகிறது. இரண்டாம் திருச்சுற்றிலிருந்து பத்துப்படிகள் ஏறி இம்மண்டபத்தை அடைய வேண்டும். எனவே இதற்குப் படியேற்ற மண்டபம் என்ற பெயர் வழங்கிற்றுப் போலும்.

கொடிக்கம்பத்திற்கு வடகிழக்கிலுள்ள மேட்டுக் கிருஷ்ணண் கோயிற் சுவரிலுள்ள ஒரு கல்வெட்டால், இதற்குப் 'பொன் மேய்ந்த பெருமாள் மண்டபம்' என்பது பெயரென்றும் சுந்தரபாண்டியன் இதனைக் கட்டினானென்றும் தெரிகிறது.

தொண்டைமான் கோபுரத்துக் கீழ் ஒரு தூணில் காணப்படும் கல்வெட்டால் இக்கோபுரத்தைச் செழுவத்தூர் காலிங்கராயர் மகனான தொண்டைமானார் செய்தமைத்தார் என்பதை அறிய முடிகிறது.

தொண்டைமான் கோபுரத்தின் கீழுள்ள சுவரில் காணப்படும் ஒரு கல்வெட்டு இக்கோயில் 'ஏகா(ங்)கி ஸ்ரீவைஷ்ணவரான அழகர் திருச்சிறுக்கர், இக்கோயிலில் அரசன் பெயர் சூட்டப்பட்ட' கோதண்டராமன் திருமதில் கட்டியமைக்காக, சுந்தரபாண்டிய வளநாட்டுப் பெருங்கருணைச் சதுர்வேதிமங்கலத்தைத் திருப்பணிப்புறமாகப் பெற்ற செய்தியைக் கூறுகிறது. இவ்வூர் தற்போது முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள பெருங்கருணை என்ற ஊராக இருக்கலாம்.

சக்கரத்தாழ்வார் சன்னிதிக்கு முன்னுள்ள மண்டபச் சுவரிலுள்ள ஒரு கல்வெட்டு, மலை மீதிருந்த திருவாழி ஆழ்வார் (சக்கரத்தாழ்வார்)

கோயிலுக்குத் திருவிளக்கெரிப்பதற்குத் தரப்பட்ட நிவந்தங்களைக் குறிப்பிடுகிறது. இப்போது மலைமீது திருவாழி ஆழ்வாருக்குக் கோயில் ஏதும் காணப்படவில்லை. எனவே, மலைமீதிருந்த கோயில் பிற்காலத்தில் எக்காரணத்தாலோ கோயிலுக்குள் இக்கல்வெட்டு இருக்கு மிடத்திற்கருகில் கொண்டு வரப்பட்டு திருநிலைப்படுத்தப் பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

சகம் 1386 (கி. பி 1464) இல் எழுந்த ஒரு கல்வெட்டு, திருமாலிருஞ்சோலை நின்றாள் மாவலி வாணாதிராயன் உறங்காவில்லிதாசன் ஆணையின்படி இக்கோயிலில் உபானம் (அடித்தளம்) முதல் ஸ்தூபி வரை திருப்பணி செய்த திருவாளன் சோமயாகிக்கு, குலமங்கலம் என்னும் சிற்றூர் தானம் செய்யப்பட்டதைக் கூறுகிறது. சடாவர்மன் முதலாம் குலசேகரன் காலத்துக் கல்வெட்டொன்று இக்கோயிலில் இளையவில்லிதாசர் என்பவர் செய்த திருப்பணிக்காக அரிநாட்டுப் பராந்தகச் சதுர்வேதிமங் கலத்துச் சபையார் தேவதானமாகத் தந்த புனற்குளம் என்ற ஊரை இறையிலியாக்கிய அரச ஆணையினைக் கூறுகிறது.

சுந்தரபாண்டியன் மண்டபத்தில் ஒரு தூணிலுள்ள கல்வெட்டு, அத்தூணைத் திருமாலிருஞ்சோலையில் வசித்த வெள்ளாளன் சுந்தரபாண்டிய விழுப்பரையனான குட்டன் அத்தியூர் நிறுவியதாகக் குறிப்பிடுகிறது. இம்மண்டபத்தில் இன்னொரு தூணிலும் இதைப் போன்றதொரு கல்வெட்டு உள்ளது. இம்மண்டபத்திலுள்ள மற்றுமொரு தூணில் அத்தூணை வண்குருகூர் நாகரன்பட்டன் என்பவன் நிறுவிய செய்தி கூறப்படுகிறது. பதினெட்டாம்படிக் கோபுரத்தின் கீழ் உள்ள ஒரு கற்றூணில் அத்தூணைத் திருமலை தேவ மகாராஜாவின் கொடையாக இளையனாயன் திருப்பணிப்பிள்ளை என்பான் அளித்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

5. தேர் :

ஆடிமாதம் ஒன்பதாம் திருநாளில் அழகர் ஏறிவரும் திருத்தேரின் பெயர் 'அமைந்த நாராயணன்' என்பது ஒரு கல்வெட்டால் அறியப்படுகிறது.

6. திருவிழாக்கள் :

முதலாம் குலசேகரபாண்டியன் காலத்தில் கப்பலூருடையான் முனையதரையனான சீராமன் உய்ய வந்தான் என்பவன் ஆடி, ஐப்பசி, மார்கழி மாதங்களில் நடைபெறும் திருவிழாக்களில் பிராமணர்களுக்கு உணவளிக்க நிவந்தமளித்த செய்தி ஒரு கல்வெட்டில் காணக்கிடைக்கிறது.

சகம் 1578 (கி. பி. 1656) இல் எழுந்த ஒரு கல்வெட்டினால் இக்கோயிலில் ஆடித்திருவிழா 10 நாட்கள் நடந்த செய்தியையும், பத்து நாட்களும் 'இயல்'

(நாலாயிரத்திவ்ய பிரபந்தத்தின் முதலாயிரப்பகுதி) ஓதப்பெற்றதையும் அறிய முடிகிறது.

7. மடங்கள் :

சடாவர்மன் முதலாம் குலசேகரபாண்டியனின் காலத்துக் கல்வெட்டொன்று குலசேகரன் மடம் என்ற ஒரு மடத்தினைக் குறிப்பிடுகிறது. முத்தூற்றக் கூற்றத்துக் கப்பலூரான உலகளந்த சோழ நல்லூர் முனையதரையனான சீராமன் உய்யவந்தான், "சுந்தரத் தோள்விளாகம்" என்ற சிற்றூரை, குலசேகரன் மடத்தில் ஆடி, ஐப்பசி, மார்கழித் திருநாட்களில் பிராமணர்களை உண்பிப்பதற்காகக் கொடுத்துள்ளான்.

இரண்டாம் திருச்சுற்றில் தூண்களால் மறைக்கப் பட்டுள்ள பிற்காலப் பாண்டியர் கல்வெட்டொன்று இங்கிருந்த திருநாடுடையான் மடத்தில் ஏகா(ங்)கி ஸ்ரீ வைஷ்ணவர்களையும், திரிதண்டி முக்கோல் சன்யாசிகளையும் உண்டாக்க சில நிலங்களை மன்னன் இறையிலியாக மாற்றியதைக் குறிப்பிடுகிறது.

இரண்டாம் திருச்சுற்றின் மேற்குச் சுவரில் வெளிப்புறமாக உள்ள ஒரு கல்வெட்டு, அமைந்த நாராயணன் மடத்திலும் வாணாதிராயன் மடத்திலும் திரிதண்டி சன்னியாசிகளையும் துறவிகளையும் உண்பிப்பதற்குத் தரப்பட்ட இறையிலி நிலக்கொடையினைக் குறிப்பிடுகின்றது.

சகம் 1511 (கி. பி. 1589) இல் எழுந்த வெங்கடேஸ்வர மகாராஜாவின் கல்வெட்டொன்று, அவர் சுந்தரத்தோளுடையான் மாவலிவாணாதிராயர் வேண்டுகோளின் படி, பன்னிரண்டு வைஷ்ணவர்களை உண்பிப்பதற்குக் கவுண்டன்பட்டியான ராமானுஜநல்லூரில் சில நிலங்களைத் தந்ததைக் குறிப்பிடுகிறது.

சகம் 1578 (கி. பி. 1656) இல் எழுந்த ஒரு கல்வெட்டு திருமாலிருஞ்சோலை வெள்ளாளன் நல்ல நபினாப்பிள்ளை மகன் அண்ணாவிப் பெருமாபிள்ளை, ஆடித்திருவிழாவில் சில மண்டபங்களின் செலவுக்கும், இத்திருவிழாவில் பத்து நாட்களும் 'இயற்பா' ஓதும் ஸ்ரீவைஷ்ணவர்களை உண்பிப்பதற்கும் இரண்டு சிற்றூர்களை விட்ட செய்தியினைத் தருகிறது.

8. திருநந்தவனப்புறம் - திருவோடைப்புறம் :

வீரபாண்டியன் சில நிலங்களை இக்கோயிலுக்கு அடுக்களைப் புறமாக விட்ட செய்தியினை ஒரு கல்வெட்டு கூறுகின்றது. கன்னடதேவன் என்ற மன்னன் தன் தம்பி வைசால (ஹொய்சள) தேவன் பெயரில் சில நிலங்களைத் திருமாலைப்புறமாக தரணிமுழுதுடையாள் வேண்ட சடாவர்மன் குலசேகர

பாண்டியன் திருநந்தவனப் புறமாகச் சில நிலங்களை அளித்துள்ளான். மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்துச் சாசனமொன்று அரசன் பெயரில் ஒரு நந்தவனம் அமைக்க நிலமளித்த செய்தியைக் குறிக்கிறது.

திருநந்தவனப்புறமாகவும் திருஓடைப்புறமாகவும் துவராபதிவேளான் அழகப் பெருமாள் நிலமளித்த செய்தியை ஒரு கல்வெட்டு கூறுகின்றது. வடதலைச் செம்பிநாட்டு மதுரோதய நல்லூரான கீழைக் கொடுமலூர் நீலகங்கரையனான அரையன் திருநாடுடையான் திருஓடை, திருநந்தவனப்புறமாக நிலமளித்த செய்தியை மற்றொரு கல்வெட்டால் அறிகிறோம்.

9. வாணாதிராயர்கள் :

விசயநகர மன்னர்கள் காலத்தில் தமிழ்நாட்டின் சில பகுதிகளை ஆண்ட வாணாதிராயர்கள் இக்கோயிலின் மீது கொண்டிருந்த பற்று குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியதாகும். இம்மன்னர்கள் இக்கோயில் இறைவனுக்குப் பாசுரங்களில் வழங்கும் பெயரையே தங்கட்குச் சூடிக்கொண்டனர்.

1. திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலிவாணாதிராயன் உறங்காவில்லிதாசனான சமரகோலாகலன் (கி. பி. 1428 - 1477)

2. சுந்தரத் தோளுடையான் மஹாபலி வாணாதிராயன் மகாபலி வாணாதிராயன் (கி. பி. 1468 - 1488)

3. இறந்தகாலம் எடுத்த சுந்தரத் தோளுடையான் மகாபலி வாணாதிராயன் (கி. பி. 1515 - 1533)

ஆகிய பெயர்களைக் கல்வெட்டுகளிலிருந்து வேதாசலம் எடுத்துக் காட்டுகிறார். சகம் 1391(கி.பி.1369) இல் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள, மாவலி வாணாதிராயன் கல்வெட்டு, "அழகர் திருவுள்ளம்" என்ற தொடருடன் முடிகிறது.

அழகர் கோயிலில் சகம் 1386 (கி.பி.1464) இல் எழுந்த ஒரு கல்வெட்டு திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதரர்யன் உறங்காவில்லிதாசன் ஆணைப்படி திருவாளர் சோமயாஜி இக்கோயிலில் உபானம் முதல் ஸ்தூபி வரை திருப்பணி செய்ததைக் குறிப்பிடுகிறது. இக்கோயிலில் பெரிய அளவில் நடந்த திருப்பணியாகக் கல்வெட்டுச் சான்றுடன் இது ஒன்றையே குறிப்பிடமுடிகிறது.

இக்கோயிலிலுள்ள, ஒரு கல்திரிகையில், திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதராயர் உறங்காவில்லிதாசன் சமரகோலாகலன் என்ற கல்வெட்டு காணப்படுகிறது. இப்பெயர், இக்கோயிலிலுள்ள வெள்ளியாலான ஒரு கலசப்பானையிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

தாயார் சன்னதி மேலைச்சுவரின் அடிப்பகுதியில் கல்லில் ஒரு கோடு வெட்டப்பட்டுள்ளது. அதனருகில் இக்கோடு, திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதராயன் மாத்தராய்குலம் என்ற கல்வெட்டு உள்ளது. இக்கோட்டின் நீளமுடைய கோலையே அளவுகோலாகக் கொண்டு இத்தாயார் சன்னதி இவ்வாணாதிராயனால் கட்டப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

10. திருக்கோயில் பணியாளர்கள்

அழகர்கோயில் ஆட்சி மரபு பதினான்கு பணிப்பிரிவுகளாக அமைந்தது என்று கல்வெட்டுக்கள் திருக்கோயில் தொழில் சுதந்திர அட்டவணை மூலம் அறியப்படுகிறது.

அவையாவன :-

பணிப்பிரிவுகள்	நிருவாகம்
1. அர்ச்சகர்	
1. ஸ்ரீரெங்கராஜபட்டர் 2. ஏறு திருவுடையான் பட்டர் 3. நலந்திகழ் நாரணப்பட்டர் 4. அலங்காரபட்டர்	4
2. ஜீயர் ஸ்ரீ காரியம்	1
3. ஆண்டார்	
1. திருமாலை ஆண்டார் 2. தோழப்பையங்கார்	2

4. சன்னிதி பரிசாரகம்

1. அமுதார்
2. அலங்கார நம்பி
3. திருமாலிருஞ்சோலைமலை நம்பி
4. சடகோபநம்பி
5. சேனைநாராயண அமுதார்
6. திருமலைநம்பி — 10
7. சோலைநம்பி
8. வடமாமலை அமுதார்
9. தெய்வசிகாமணி நம்பி
10. தியாகம் செய்த நம்பி

5. சன்னிதி பட்டைகள் (வேதவிண்ணப்பம் செய்வோர்)

திருமலைநம்பிகள் — 1

6. திருப்பணி செய்வார்.

திருமலை நம்பிகள் — 1

7. நாச்சியார் பரிகலம் (மடப்பள்ளிப்பணி)

1. திருமலை நம்பிகள்
2. அமுதார் — 2

8. சன்னிதி பண்டாரி (திருமாலையை கட்டுவோர்)

சுந்தரராஜ பண்டாரி — 1½

9. கணக்கர்

1. திருமாலிருஞ்சோலைப் பிரியன்
2. சேதுராஜப்பிரியன் — 3
3. சௌந்திரராஜப்பிரியன்

10. சன்னிதி ஸ்தானாபதி — 1

11. திருவிளையாட்டான் — 1

12. கொத்தன்

1. அலங்காரக்கொத்தன்
2. அண்ணாவிக் கொத்தன் — 2



கருட வாகனம்



ஏகாந்த சேவையில்
அருள்மிகு சுந்தர்ராஜப் பெருமாள்
காட்சி தருதல்

13. சின்னமேளம், பெரியமேளம் 1

14. ஸ்ரீ பாதம் தாங்கிகள் (4கரையார்) 1

மொத்தம் **32**

கோயில் அமைப்பு

1. கோட்டைப்பகுதிகள்

அழகர் திருக்கோயில் இரண்டு கோட்டைகளால் சூழப்பட்டுள்ளது. கோயில் அமைந்துள்ள உட்கோட்டை இரணியங்கோட்டை எனவும் வெளிக்கோட்டை அழகாபுரிக்கோட்டை எனவும் வழங்கப்பட்டன. நாட்டுப்புறப்பாடல்கள் உட்கோட்டையை நலமகாராசன் கோட்டை என்று குறிப்பிடுகின்றன. "மதில்சூழ்" சோலைமலை என்று இத்தலத்தினைப் பெரியாழ்வார் பாடிவதால் அவர்காலத்திலேயே இக்கோயிலைச் சுற்றி ஒரு மதில் இருந்திருக்க வேண்டுமென தோன்றுகிறது. இங்குள்ள வெளிக்கோட்டை கி.பி.14 ம் நூற்றாண்டில் இப்பகுதியை அரசாண்ட வானாதியாரர்களால் கட்டப்பட்டது. பெரியாழ்வார் குறிப்பிடும் மதில் இரணியம் கோட்டை எனப்படும் உட்கோட்டை மதிலாகும்.

2. வெளிக்கோட்டைப் பகுதி

இதற்குள் பண்டைக்காலத்தில் பிள்ளைப் பல்லவராயன் என்பவரால் ஏற்படுத்தப்பட்ட அக்கிரஹாரம் ஒன்று இருந்ததது. அது "சாமந்தநாராயண சதுர்வேதமங்கலம்" என்ற பெயருடன் விளங்கியது.

வெளிக்கோட்டைப் பகுதியில் சாலையின் கீழ்ப்புறத்தில் தேர் மண்டபம் உள்ளது. அத்தேரின் பெயர் அமைந்தநாராயணன் என்பதும் தேரோடும் வீதிகளில் ஒன்றின் பெயர் தியாகம் சிறியான் திரிவீதி என்றும் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

3. இரணியன் கோட்டைப் பகுதி

தேர் மண்டபத்தைத் தாண்டிச் சென்றால் உட்கோட்டையின் தெற்குவாசலான இரணியம் வாசலை அடையலாம். இவ்வாசலை தாண்டி உள்நுழைந்தால் இடப்புறம் இருப்பது யானைவாகன மண்டபம் இதன் வடக்கே இராஜகோபுரம் அமைந்திருக்கிறது. இக்கோபுரவாசலில் உள்ள கல்வெட்டுகளில் கி.பி.1513 ல் எழுந்த விசயநகர மன்னர் கிருஷ்ணதேவ மகாராசாவின் கல்வெட்டே காலத்தில் முந்தியதாகும். எனவே இக்கோபுரம் 16ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டுயிருக்கலாம் எனத் தோன்றுகிறது. இக்கோபுரவாசலை மக்கள் பயன்படுத்தமுடியாது.

எப்போதும் அடைத்துக்கிடக்கும் இதற்கு முன்னர் பக்கச் சுவர்களோடு கூடிய இரட்டைக் கதவுகள் உள்ளன. இவையே பதினெட்டாம்படிக் கருப்பண்ணசாமியாக வழிபடப்படுகிறது. இதன் எதிரில் உள்ள பதினாறு கால்மண்டபம் ஆண்டார் மண்டபம் அல்லது சமய மண்டபம் எனப்படும். ஆடி, சித்திரை, திருவிழாக்களில் இக்கோயில் ஆச்சாரியர்களான ஆண்டார் இம்மண்டபத்தில் வீற்றிருப்பார். இதற்கு வடப்புறத்தில் உள்ளது. கொண்டப்ப நாயக்கர் மண்டபமாகும். இதற்கு வடப்புறம் சென்று மேற்கே திரும்பினால் வண்டிவாசல் என்ற வாசல் காணப்படுகிறது. இதன் வழியாக நுழைந்து மேற்கு நோக்கிச் சென்றால் எதிராசன் திருமுற்றம் என்று வழங்கப்படும் பரந்த வெளியை அடையலாம்.

(4) எதிராசன் திருமுற்றம்

இம்முற்றம் ஸ்ரீ ராமானுஜப் பெயரிட்டு வழங்கப்படுகிறது. இம்முற்றத்தின் நடுவில் திருக்கல்யாண மண்டபம் உள்ளது. பங்குனி உத்திரத்தில் இங்குதான் திருக்கல்யாணம் உச்சவம் நடைப்பெறுகிறது. இம்மண்டபத்தில் விசயநகர மன்னர் காலச்சிற்பங்கள் அணிசெய்கின்றன. இத்திருமுற்றத்தில் மடங்கள் பல சமயப்பணியாற்றின. அவற்றுள் குறிப்பிடத்தக்கது இராமாநுஜர் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட திருமாலிருஞ்சோலை ஜீயர் மடம் அமைந்திருந்தது. இந்த நூற்றாண்டில் முற்பகுதிவரை தொடர்ந்து பல ஜீயர்கள் பட்டங்களை அலங்கரித்து பணிசெய்து வந்தனர்.

(5) தொண்டைமான் கோபுரமும் சுந்தரபாண்டியம் மண்டபமும்

திருக்கல்யாண மண்டபத்தை அடுத்துள்ள தொண்டைமான் கோபுரம் செல்வத்தூர் காதியந்தர் மகனான தொண்டைமான் என்பவரால் கட்டப்பட்டுள்ளன என்று கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. இந்தக் கோபுரவாசலை அடுத்து உள்ளே காணப்படும் மண்டபத்தை சுந்தரபாண்டியன் கட்டினான் என்றும் இவனுக்கு பொன்மேய்ந்த பெருமாள் என்றும் பெயர் வருகின்றது.

(6) படியேற்ற மண்டபம்

கொடிக்கம்பத்தை அடுத்த கருட மண்டபம் ஆரியம் மண்டபம் என்றழைக்கப்படுகிறது. இதற்கு படியேற்ற மண்டபம் என்று பெயர் வழங்கப்படுகிறது. இந்த மண்டபத்தை தோமராச அய்யன் மகனான ராகவராஜா என்பவர் கட்டி முடித்தார்.

(7) மகா மண்டபம்

படியேற்ற மண்டபத்தை அடுத்துள்ளது முனையதரையன் திருமண மண்டபமாகும். இதற்கு அலங்கார திருமண மண்டபம் என்றும் ஒரு பெயர் வழங்கப்படுகிறது. இம்மண்டபத்தைக் கட்டியவன் மிளலைக்கூற்றத்து நடுவிற்கூறு புள்ளூர்க்குடி முனையதரையனான பொன்பற்றியுடையான் மொன்னைப் பிரான் விரதம்முடித்தப்பெருமாள் என்று கல்வெட்டுகளால் அறியப்படுகிறது.

(8) இராய கோபுரம்

வசந்த மண்டபத்திற்குக் கிழக்கே சற்று தொலைவில் கட்டி முடிக்கப்படாமல் அரைகுறையாக ஒரு கோபுரம் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. இதிலுள்ள ஒரு கல்வெட்டு விசயநகர மன்னர்களின் ஆற வீடு வமிசத்து அரசர்களைக் குறிப்பிடுகிறது. இதன் காலம் கி.பி.1646 ஆகும். எனவே கி.பி.16ம் நூற்றாண்டு தொடங்கப்பெற்று பாதியிலேயே நின்றுவிட்டது என்று அறியலாம். இதனை இராய கோபுரம் என்று மக்கள் வழங்குவர்.

5. அழகர்மலையிலுள்ள மற்ற தெய்வங்கள்

அழகர்மலையில், கள்ளழகர் என்ற சுந்தரராசப் பெருமாளுக்குத்தான் அதிக முக்கியத்துவம் இருக்கிறது. ஆனாலும் இம்மலையில் வேறு சில தெய்வங்களும் இருக்கின்றன. பல தெய்வங்களும் இதில் தனித் தனிக் கோயில்களும் உண்டு. கணேசர், பைரவர், சிவபெருமானுடைய பல அம்சங்களான மூர்த்திகள் இங்கு கோயில் கொண்டிருக்கின்றனர். ஆகையால் இது சகல வைதீக மதத்தவர்களுக்கும் பொதுவான இடம் என்று சொல்லலாம். வைதீக மதத்தைச் சேராத பௌத்தர்களும் ஜைனர்களும்கூட இங்கு அழகரே முக்கியமான தெய்வம் என்று ஒத்துக் கொண்டதாகத் திருமங்கையாழ்வார் தம் பாசுரத்தில் பாடியிருக்கிறார். 2000 வருஷங்களுக்கு முன் நக்கீரர் என்னும் புலவரால் எழுதப்பட்ட திருமுருகாற்றுப்படை என்னும் பாட்டு ஒன்றில் பழமுதிர்சோலை மலைகிழவோனே என்று வருவதைக்கொண்டு அருணகிரிநாதர் முதலியவர்கள் முருகனுடைய ஆறுபடை வீடுகளில் இதை ஒன்றாகப் பாடியிருக்கிறார்கள். இதனை அறிஞர் பலர் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஒவ்வொரு கோயிலும் கர்ப்பக்கிரஹத்திலுள்ள முக்கியமான தெய்வத்தைச் சுற்றியுள்ள பிராகாரங்களில் பரிவாரத் தேவதைகளும் இருக்க வேண்டும் என்பது ஆகமவிதி. அதன் படியே இங்கும் அழகரைச் சுற்றிப் பிராகாரங்களில் பல பரிவார தெய்வங்கள் இருந்தன. இன்றும் அப்படி சில தெய்வங்கள் அங்கு இருக்கின்றன. மேற்கூறிய தெய்வங்கள் அப்படி ஏற்பட்டவராய் இருக்கவேண்டும். கோயிலுக்கு ஏழு பிராகாரங்கள் இருப்பதுதான் பெருமை. அப்படிப்பட்ட கோயிலையே உத்தமோத்தமான கோயில் என்று சொல்வார்கள். ஏழுக்குக் குறைந்த பிராகாரங்கள் இருந்தால் அந்த கோயில்களை உத்தம மத்தியமம் என்றும், உத்தம அதமம் என்றும் சொல்வார்கள். இந்த அழகர் கோயிலில் ஏழாவது பிராகாரத்திற்கு உரிய ஆதித்யர், க்ஷேத்ரபாலகர் (சிவன் அம்சம்) ஆகியவர்கள் இருப்பதினால் இதில் முன்பு ஏழு பிராகாரங்கள் இருந்தன என்று அறியலாம். அப்படியே மற்ற ஆறு பிராகாரங்களுக்கும் உரிய பல பரிவார தெய்வங்களும் இப்பொழுது இக்கோயிலில் இருக்கின்றன. ஆனால் அவற்றில் சில தெய்வங்கள் சேதம் அடைந்தும் மற்றும் சில இடம் மாறியும் இருக்கின்றன. இவை பிற்காலத்தில் ஏற்பட்ட சண்டைகள், குழப்பங்கள் காரணமாக உண்டானவை என்பதில் சந்தேகமில்லை. இன்னும் அழகர் கோயிலில் உள்ள முக்கியமான பரிவார தெய்வங்கள் வலம்புரி விநாயகர், சோலை மலை நாச்சியார், ஸ்ரீநிவாசன், சேனைமுதலியார், க்ஷேத்திரபாலகர், ஆழ்வார்கள் கல்யாண சுந்தரவல்லித்தாயார், சுதர்சனர் , யோக நரசிம்மர், ஆண்டாள், சரஸ்வதி, தசாவதார எம்பெருமான்கள், ஸ்ரீ ராமன் கிருஷ்ணன், மணவாளமாமுனி உடையவர், பதினெட்டாம்படி கருப்பணசாமி, முதலியனர். இவை தவிர பார்த்தசாரதி, பூவராகன், லட்சுமி நரசிம்மன், லட்சுமி நாராயணன் மற்றும் பலரும் பரிவாரமூர்த்திகளாக உள்ளனர்.

இங்கு முற்காலத்தில் இருந்து பிறகு அழிந்து போன கோயில்களில் முக்கியமானவை பலராமன், கிருஷ்ணன், ஸ்ரீநிவாசர், சுதர்சனர், மற்றும் பலருடைய தனிக் கோயில்கள், இவற்றில் இருந்த மூலவிக்கிரகங்கள் என்ன ஆயின என்று தெரியவில்லை. ஆனால் இக்கோயில்களில் இருந்த உலோக விக்கிரகங்கள் மட்டும் பிரதான கோயிலுக்குள் எடுத்துச் சென்று பத்திரப்படுத்தி வைக்கப்பட்டன. சுதர்சனருடைய மூலவிக்கிரகச் சிலை மட்டும் பழைய இடத்திலிருந்து எடுத்து இப்போதுள்ள இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மற்றவை மறைந்துவிட்டன.

முக்கியமான சந்நிதிகள்

இம்மலையிலுள்ள மூலவர் பெயர் ஸ்ரீ பரமஸ்வாமி என்பது. இவரது சேவை கம்பீரமாகவும் கவர்ச்சியாகவும் இருக்கிறது. ஸ்ரீ பரமஸ்வாமி பஞ்சாயுதங்களோடு இங்கு காட்சியளிக்கிறார். ஸ்ரீ தேவியும் பூதேவியும் இருபுறமும் நிற்க இவர் நின்ற திருக்கோலத்துடன் திவ்யாலங்கார சேவை சாதித்த வண்ணம் இருக்கிறார். மற்ற விஷ்ணு ஸ்தலங்களில் இருப்பது போல அல்லாமல் இங்குமூர்த்தியின் கையிலுள்ள சக்ரமானது பிரயோக தோரணையில் இருக்கிறது. இவரது உற்சவ மூர்த்திக்குத்தான் அழகர் என்றும் சுந்தரராஜர் என்றும் திருநாமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்பெயருக்கு ஏற்ப இவரது திவ்யசௌந்தர்யம் ஈடும் எடுப்பும் இல்லாததாக விளங்குகிறது. இந்தியா முழுவதிலும் இதைப்போன்ற அழகான உற்சவ மூர்த்தி இல்லை என்று சொல்லப்படுகிறது. இந்த மூர்த்திக்கு நூபுரகங்கை நீராலேயே திருமஞ்சனம் செய்யவேண்டும். வேறு நீரால் அபிஷேகம் செய்தால் கருப்பாக மாறிவிடும். அபரஞ்சி என்னும் உயர்ந்த தங்கத்தினால் செய்யப்பட்ட வேறு விக்கிரகம் ஒன்றுமுள்ளது. இதைத் தவிர இந்தியாவில் இரண்டாவதாகத் திருவனந்தபுரத்தில் உள்ள உற்சவ மூர்த்தியும் இப்படியே அபரஞ்சியினால் செய்யப்பட்டது. இந்த இரண்டு இடங்களைத் தவிர வேறெங்கும் அபரஞ்சியினால் செய்யப்பட்ட மூர்த்திகள் இல்லை. அழகர்கோயிலில் உள்ள இந்த மூர்த்திக்குத்தான் சோலை மலைக்கரசர் என்ற பெயர் திவ்ய பிரபந்தத்தில் சொல்லப்படுகிறது. சம்ஸ்கிருத புராணங்களில் இம்மூர்த்தி விருஷபாத்ரீசர் என்றும் விருஷபாத்ரிநாதர் என்றும் அழைக்கப்படுகிறார். இந்த உற்சவரைத் தவிர, இக்கோயிலில் ஸ்ரீ சுந்தரபாஹு, ஸ்ரீ நிவாசர், நித்தியோத்ஸவர் என்று வேறு மூர்த்திகளும் உண்டு. அவை வெள்ளியினால் செய்யப்பட்டவை. இவற்றின் கையில் உள்ள சக்கரங்களும் பிரயோக பாவனையில் இருக்கின்றன. நித்தியோத்ஸவர் 'நலம்திகழ்நாரணன்' என்றும் யாகபேரர் சுந்தரத்திருத்தோளுடையான் என்றும் கௌதுகர் ஏறுதிருவுடையான் என்றும் அழைக்கப்படுவர்.

கர்ப்பக்கிரகத்திற்கு அடுத்துள்ள பிராகாரத்தில் வலம்புரி விநாயகர் சந்நிதி இருக்கிறது. இங்கு இவருக்கு விசேஷ பூஜைகள் நடக்கின்றன. விநாயகர் சதுர்த்தியன்று இவருக்கு நூபுரகங்கையிலிருந்து நீர் கொண்டு

வந்து அபிஷேகம் செய்து விசேஷ ஆராதனை நடக்கும். இங்கு வடக்குப் பிராகாரத்தில் உள்ள சேனை முதலியார் ஸூத்ரவதி என்னும் தேவியோடு இரண்டு கைகளுடன் காட்சியளிக்கிறார். இவ்விருவரும் ஒரே பீடத்தில் எழுந்தருளியுள்ளனர்.

பைரவர் அல்லது க்ஷேத்ரபாலகர்

விஷ்வக் சேனைரைச் சேவித்தவுடன் சேவார்த்திகள் அவர் அருகில் அடுத்துள்ள பைரவர் என்ற க்ஷேத்ர பாலகர் சந்நிதியைத் தரிசிக்க வேண்டும். இங்கு பைரவர் நீளமான தந்தங்களுடனும் கோரைப் பற்களுடனும் திரிசூலத்துடனும், நாய் வாகனத்துடனும் சேவை சாதிக்கிறார். பைரவர், சிவனுடைய ரத்தத்திலிருந்து தோன்றியவர் என்று சொல்லப்படுகிறது. சிவன் கோயிலில் இவருக்கு அதிக முக்கியத்துவம் உண்டு. இவர்தான் சிவகணங்களுக்கு பிரதமசேனாபதி, கணபதியும் முருகனும் சிறு சேனைத் தலைவர்கள். சிவன்கோயிலை மேற்பார்வை செய்யும் சண்டிகேச்வரரைவிட இவருக்குத்தான் அதிக அதிகாரமுண்டு. இவரைச் சிவனுடைய கோர (ரௌத்திர) ஸ்வருபம் என்று சொல்வார்கள்.

இக்கோயிலுள்ள க்ஷேத்திரபாலகரைப் பற்றி ஒரு கதை வழங்குகிறது. கோயிலில் அர்த்தஜாம பூஜை முடிந்ததும் இக்கோயில் ஸந்நிதிக் கதவை பூட்டிச் சாவியை க்ஷேத்திர பாலகர்சந்நிதியில் வைத்துவிட்டுப் போவது வழக்கம். மறுபடியும் அதை மறுநாள் காலையில்தான் எடுத்து ஸந்நிதிக் கதவைத் திறப்பார்கள் கோயில் பட்டர் தன் சிறு குழந்தை ஒன்று கோயிலில் இருப்பதை கவனியாது, அதை பூட்டிச் சாவியை க்ஷேத்திர பாலகர் முன்னால் வைத்துப் போய்விட்டார். பிறகு அவருக்குத் தன் குழந்தையின் ஞாபகம் வரவே ஓடோடியும் வந்து அந்தச் சாவியை எடுத்தார். உடனே க்ஷேத்திர பாலகர் அவரைத் தடுத்துச் சாவியை எடுக்க வேண்டாம் என்றும், குழந்தை மறுநாள் காலைவரை பத்திரமாக இருக்கும் என்றும், கவலைப்படவேண்டாம் என்றும் சொன்னார். அதைக் கேட்காமல், அந்தப் பட்டர் கோயிலைத் திறக்க வேண்டுமென்று பிடிவாதம் செய்யவே க்ஷேத்திரபாலகர் குழந்தையை எடுத்து வெளியே எறிந்தார். இதனால் கோபங்கொண்ட பட்டர் க்ஷேத்திர பாலகரின் சக்தியில் ஒரு பாகத்தை இழுத்து, அதை வெளியே இருந்த ஒரு பாறையில் பதிய வைத்தார். அந்தப் பாறையை இப்பொழுதும் பக்தர்களுக்குக் காட்டி, இதுதான் க்ஷேத்திரபாலகர் கல் என்று அங்குள்ளோர் சொல்லுவார்கள். இந்த க்ஷேத்திர பாலகர் சந்நிதிக்கு முனையதரையன் திருமண்டபம் என்றும் பெயர் உண்டு. சிவபெருமான் விஷ்ணுவைக் குறித்துத் தவம் செய்து, க்ஷேத்திர பாலகராக இக்கோயிலில் இடம் பெற்றார் என்று விருஷபாத்ரி மகாத்மியம் கூறுகிறது.

ஸ்ரீ கல்யாண சுந்தரவல்லி

இது மூலவர் சந்நிதிக்கு அடுத்தபடியாக முக்கியமான சந்நிதி. இது கோயிலின் தென்பிராகாரத்தில் இருக்கிறது. இதைத் தனிக் கோயில் தாயார் சந்நிதி என்றும் சொல்வார்கள். இவர்தான் மூலவர் பரமஸ்வாமியின் தேவி, இத்தாயாருக்கு ஆறுகால பூஜையும் உண்டு. இங்கு பக்தர்களுக்குக் கொடுக்கப்படும் பிரசாதம் மஞ்சள். இந்த மூலதேவதையும் மிகவும் அழகான சேவை சாதிக்கிறார். கல்யாண சுந்தரவல்லி என்னும் பெயருக்கேற்ப இவர் அதிக சௌந்தர்யத்துடன் விளங்குகிறார். வெள்ளிதோறும் திருமஞ்சனம் நடந்து புறப்பாடாகிப் பிறகு ஊஞ்சல் நடைபெறுகிறது.

ஸ்ரீ ஆண்டாள் சந்நிதி

வடக்குப் பிராகாரத்தில் ஆண்டாள் சந்நிதி இருக்கிறது. ஆண்டாள் உற்சவ மூர்த்தி உட்கார்ந்திருக்கும் பாவனையில் எழுந்தருளியுள்ளார். இது எங்கும் இல்லாத ஒரு அபூர்வ சேவை. தனது திருக்கல்யாண தினத்தன்று சுந்தரராஜர், ஸ்ரீ தேவி, பூதேவி கல்யாண சுந்தரவல்லி, ஆண்டாள் ஆகிய நான்கு தேவிமாருடன் இங்கு தரிசனம் அருளுகிறார். இந்த திவ்ய தரிசனம் இந்தச் க்ஷேத்திரத்தில், மட்டும்தான் கிடைக்கும். இச்சந்நியிலும் ஆறுகால பூஜை உண்டு. இங்கும் மஞ்சள்பொடி பிரசாதம் கொடுக்கப்படுகிறது.

ஸ்ரீ சுதர்சனர்

இந்தியா முழுவதிலும் இந்த சுதர்சனர் சந்நிதியைப் போல வேறெங்கும் இல்லை. இங்கே எழுதியிருக்கும் மந்திரங்கள், யந்திரங்கள் முதலியவை மிகவும் சக்தியுள்ளவை. இந்த மூர்த்திக்குப் பதினாறு கைகள் இருக்கின்றன. ஒவ்வொரு கையிலும் ஓர் ஆயுதம் இருக்கிறது. இவருடைய ரௌத்ர ரூபமும், மூன்று கண்களும், நீண்ட பற்களும் பார்க்கப் பயங்கரமானவை. இவர் ஷட்கோண யந்திரத்தின் மேல் இருக்கிறார். ஸ்ரீ சுதர்சன (மூலவர்) மூர்த்தியின் மேலே ஹிரண்யகசிபுவை சம்ஹாரம் செய்யும் கோலத்துடன் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தி காட்சியளிக்கிறார்.

யோக நரசிம்மர்

மேற்குப் பிராகாரத்தில் உள்ள இந்த மூர்த்தியை சேவார்த்திகள் அதிகம் சேவிக்கிறார்கள். நரசிம்மர் அதிக கோபமாகவும், கடுகடுப்பாகவும், கம்பீரமாகவும் சேவை சாதிக்கிறார். இவரை இந்த பாவனையில் ஜ்வாலா நரசிம்மர் என்றும் சொல்வார்கள். இவருடைய தலையிலிருந்த கோபாக்நி மேலே கிளம்பிச் செல்வதற்காக, தலைக்கு நேராக மேலே ஒரு பெரிய துவாரம் இருக்கிறது. இந்தக் கேபாக்நியைத் தணிப்பதற்கு தினமும் எண்ணெய், பால், தயிர் முதலியவற்றாலும், நூபுரகங்கை நீராலும் இவருக்கு அபிஷேகங்கள் நடக்கும். இதற்காக 100 வருஷங்களுக்கு முன்பு பச்சையப்ப முதலியார் ஏற்படுத்திய கட்டளை இன்றும் தவறாமல் நடந்து வருகிறது.

இக்கட்டளையின் விவரங்கள் பதினெட்டாம்படி கோபுரவாசலில் உள்ள ஒரு கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கின்றன. வடக்குப் பிராகாரத்தில் மற்றும் ஒரு யோக நரசிம்ம மூர்த்தியும் இருக்கிறார். இன்னம் சில இடங்களிலும் நரசிம்மருடைய உருவங்கள் இக்கோயிலில் இருக்கின்றன.

இந்தக் கோயிலில் மற்றும் பார்த்தசாரதி, மண்டுகமகரிஷி, அஷ்டபுஜ கிருஷ்ணர், நர்தன கிருஷ்ணர், சரஸ்வதி, தசாவதாரம் திருப்பள்ளியறை நாச்சியார், ஆழ்வார்கள், இராமானுஜர் முதலியோருடைய சந்நிதிகள் சேவிக்கத் தகுந்தவை. இங்குள்ள சாளக்கிராமத்தின் தரிசனத்தையும் பக்தர்கள் தவறாமல் செய்ய வேண்டும். இம்மூர்த்திகளுக்குத் திருமஞ்சனம் செய்யப்பட்ட தீர்த்தம் தினந்தோறும் சேவார்த்திகளுக்கு கொடுக்கப்படுகிறது. அழகர்மலையின் தெற்குக் கோடியில் உள்ள சதிரிளமடவார் சந்நிதி விசேஷமானது. பிராம்மீ மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராஹி, மஹேந்திரி, சாமுண்டி என்னும் சப்த மாதர்களின் சந்நிதியே இது. இந்த சப்த மாதர்கள் முறையே பிரம்மா, மகேஸ்வரன், குமரன், விஷ்ணு, வராஹர், மஹேந்திரன், இந்திரன் என்னும் தமது புருஷர்களுடைய சக்திகளையும் வாகனங்கள், ஆயுதங்கள் முதலியவற்றையும் வைத்திருப்பதாக ஐதீகம் இவர்களுக்கு நித்திய பூஜை உண்டு. விசேஷமான சில பூஜைகளும் உண்டு.

இந்த மலையில் உள்ள தீர்த்தங்களுக்கும் ஸ்தலங்களுக்கும் காவல்தேவதையாக இருப்பவள் ஸ்ரீ ராக்காயி அம்மன். இவள் ஆங்கிரஸ முனிவரின் மகள், அமாவாசை அவளுக்கு விசேஷ நாள். அன்று அவளுக்குப் பூஜை நடக்கும். இவள் மூலஸ்தானத்திற்கு வடமேற்குத் திசையில் வடபுறமாக விஷ்ணு கோயிலில் மூன்றாவது பிராகாரத்திலிருக்கும் பரிவார தேவதை. சுந்தரராஜருக்கும் பதினெட்டாம்படி கருப்பண்ண சுவாமிக்கும் அடுத்தபடி ராக்காயி அம்மனுடைய வைபவம்தான், இக்கோயிலில் பெரிதாக இருக்கிறது. கருப்பணசாமி என்னும் தெய்வம் கள்ளர்களுக்கு மிகவும் முக்கியமானது. இத்தெய்வம் வடக்கிலிருந்து கொண்டுவரப் பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் இதற்கு வடக்கு நோக்கி நின்றே பூஜைகள் செய்வார்கள். கருப்பணசாமியின் பல பேதங்கள், பெரிய கருப்பன், சிறியகருப்பன், மண்டைக்கருப்பன், தோட்டிகருப்பன், கும்மட்டிக்கருப்பன், பழையகருப்பன் முதலியவை. இக்கருப்பண தெய்வங்களுக்குப் பிரதான தெய்வம் அழகர் மலையில் உள்ள பதினெட்டாம்படிக் கருப்பணசாமியே. இவருக்கு இங்கு கிருஷ்ணபுத்ரன் என்றும் ஒரு பெயர் உண்டு. ஆனால் இவருக்கு இங்கே உருவம் இல்லை. இங்கு பதினெட்டாம்படி கோபுரக்கதவுகளையே இத்தெய்வமாக எண்ணிப் பூஜைகள் நடக்கும். மற்ற இடங்களில் இவர் கைகளில் ஒரு கொக்கியும், கத்தியும், கதாயுதமும், ஈட்டி முதலியவையும் இருக்கும். காலில் செருப்பு அணிந்திருப்பார். இவரது தரிசனம் பயங்கரமாகவும், யுத்தபாவனையிலும் இருக்கும். இவரது பக்தர்கள் இவருக்கு மேலே சொன்ன பலவிதமான ஆயுதங்களையும் தொட்டி, செருப்பு முதலியவைகளையும் நேர்த்திக்கடனாகக் கொடுப்பார்கள். அழகர்

கோயிலில் உள்ள பதினெட்டாம்படி கதவுகளுக்குச் சந்தனம், குங்குமம், கற்பூரம் முதலியவை பூசி, மாலை, புஷ்பம்முதலியவற்றால் அலங்கரித்துப் பூஜை செய்வார்கள். பொங்கல், வடை, தேங்காய் முதலிய நெய்வேத்தியங்கள் இவருக்குப் படைக்கப்படும். விபூதி பிரசாதம் எல்லோருக்கும் கொடுக்கப்படும். இதற்கானப் பூசாரிகள் கோயில் பட்டர்கள் அல்லர். குயவர் குலத்தைச் சேர்ந்த பூசாரி ஒருவர் தேங்காய்களை உடைத்து விபூதிப் பிரசாதம் கொடுப்பார். இப்பதினெட்டாம்படிக் கதவு பிரம்மோற்சவ காலத்தில் செல்வர் வருவதற்காக மட்டும் திறக்கப்படும். சில சமயங்களில் ஏதாவது பிரமாணம் செய்ய விரும்புகிறவர்களுக்கு அது திறக்கப்படும். ஆகையால் அழகர் கோயிலுக்குப் பிரதான வாசலாகிய இப்பதினெட்டாம்படி வாசல் சாதாரணமாக மூடப்பட்டே இருக்கும். இதற்கு வடக்கே உள்ள வண்டிவாசல் என்பதுதான் கோயிலுக்குள் போவதற்குள்ள வழக்கமான வழி, பல வழக்குகள், விவகாரங்கள் முதலியவை இப்பதினெட்டாம்படி வாசலில் பிரமாணம்செய்து, தீர்க்கப்படுவது இப்பொழுதும் வழக்கமாக இருக்கிறது. தினந்தோறும் நூபுரகங்கையிலிருந்தே அழகருக்கு கொண்டு வரப்படும் அபிஷேக தீர்த்தம் முதலில் இப்பதினெட்டாம் படி யாணிடம் வைக்கப்பட்டு அத்தீர்த்தம் மிகவும் பரிசுத்தமாக நூபுரகங்கையில் இருந்தே கொண்டுவரப்பட்டது என்று பிரமாணம் செய்யப்பட வேண்டும். பிறகுதான் அது அழகரது அபிஷேகத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இப்பதினெட்டாம்படியைப் பற்றி ஒரு கதை உண்டு. ஒரு சமயத்தில் மலையாளத்தைச் சேர்ந்த அரசன் ஒருவன் இவ்வழகர் மலையில் உள்ள சுந்தரராஜரைத் தன் தேசத்திற்கு எடுத்துக் கொண்டுபோய் வைத்துப் பூஜை செய்ய நினைத்தான். அழகாபுரிக்கோட்டை அதிக காவலுடன் இருந்ததால், அவன் அழகரை எடுதத்துக் கொண்டுப் போக முடியவில்லை. ஆகையால் அவன் ஒரு தந்திரத்தால் அழகரைக் கொண்டு போக வேண்டுமென்று எண்ணினான். ஆகையால் அவன் தன்னிடமிருந்த மந்திரத்திலும் தந்திரத்திலும் கைதேர்ந்த 18 பேர்களை இவ்விடத்திற்கு அனுப்பி எப்படியாவது அழகரைக் கொண்டு வரும்படி சொன்னான். அவர்கள் இங்கே வந்து தம் மந்திரசக்தியால் ஒருவர் கண்ணிலும் படாமல் அழகர் விக்கிரஹத்தைக் கொண்டுபோக முயற்சி செய்தார்கள். ஆனால் இது பலிக்கவில்லை. ஆகையால் அவர்கள் தங்களுடைய மந்திர சக்தியால் அழகருடைய கலைகளை (சக்தியை) இழுத்து வேறொரு விக்கிரஹத்தில் வைத்து, தம்நாட்டில் அதை ஸ்தாபிக்க முயற்சி செய்தார்கள். ஆனால் அழகர்கோயிலில் இருந்த சில மந்திர தந்திர சாஸ்திர நிபுணர்களாகிய பட்டர்கள் இந்த சூழ்ச்சியைக் கண்டுபிடித்து, அந்தப் பதினெட்டுப் பேர்களையும், பிரதான கோபுரவாசலில் 18படிகளின் கீழ் வைத்துப் புதைத்துவிட்டார்கள். பிறகு அந்த சூழ்ச்சிக்காரர்களுக்கு உதவியாக வந்த ஒரு தெய்வம் இனிமேல் தானும் அந்தக் கோபுர வாசலில் இருந்து காவல் காத்து கோயில் சொத்துகளையெல்லாம் பத்திரமாக கவனித்துக் கொள்வதாக ஒப்புக்கொண்டு, அதற்காகத் தனக்குத் தினந்தோறும் அழகரின்

அர்த்தஜாம நிர்மால்ய நைவேத்தியங்களைக் கொடுக்கவேண்டுமென்று பட்டர்களைக் கேட்டுக்கொண்டது. அதன்படி இப்பொழுதும் அத்தெய்வத்திற்கு அங்கே நிர்மால்ய நைவேத்தியம் கொடுக்கப்படுகிறது. இத்தெய்வத்தைத்தான் பதினெட்டாம்படி சுவாமி என்று சொல்லுவது.

அழகர் கோயிலைவிட்டு வெளியே புறப்பாடு கண்டருளும் போதெல்லாம் பதினெட்டாம்படிக்கருப்பண்ணசாமிக்கு முன் சேவை சாதித்து கற்பூர தீபாராதனை செய்யப்படுகிறது. திரும்பி உள்ளே எழுந்தருளும் போதும் இவ்வாறு செய்யப்படுகிறது. இத்தெய்வத்தின் முன் ஒருவரும் பொய் சொல்லவும் துணியமாட்டார்கள். ஆகையால், பெரிய வழக்குகள் விவகாரங்கள் வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் முதலியவற்றில் உண்மை அறிய வியாஜ்ஜியக்காரர்களைக் நீதிமன்றத்தார் கடைசி நேரத்தில் கூட இக்கருப்பணசாமி சந்நிதியில் பிரமாணம் செய்யச் சொல்லி உண்மையைக் கண்டுபிடித்துக் கொள்ளும் வழக்கம் சமீபகாலம் வரை இருந்தது.

6. சிலைகளும், சிற்பங்களும்

நமது புராதன நாகரிகம் படைத்த பாரத பூமியில் அதிநுட்பமான பலவிதக் கலைகள் மிகப் பழங்காலந்தொட்டே சிறந்திருந்தன. உலகத்தின் மற்ற பாகங்கள் நாகரிகம் அடையாத காலத்தில் நம்நாடு நாகரிகத்தில் மிக உன்னத நிலை அடைந்திருந்தது. இதற்குப் போதுமான சான்று, நமது மிகப் பழைய கோயில்களே. அவை இன்றளவும் நின்று நம் தொன்று தொட்டு வந்த நாகரிகத்தை உலகுக்குப் பறைசாற்றுகின்றன. நம் கோயில்கள் பலவிதமான கலைகளுக்கு இருப்பிடமாகவும் கலைக்களஞ்சியமாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய கோயில்களில் நம் அழகர் கோயிலும் சிறப்பான ஒன்று. இக்கோயிலில் சிற்ப சாஸ்திரம், மனையடி சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், நடனம், சங்கீதம், சித்திரம் முதலியன பலவிதமான கலைகளும் போற்றப்பட்டு வந்தன. ஆனால் இக்கலைகளில் இப்பொழுதும் அழியாமல் தம் புகழ் பரப்பிக் கொண்டிருப்பவை சித்திரமும் சிற்பமும் கட்டடக் கலையுமே. மற்றவை காலப்போக்கில் மறைந்துவிட்டன. இவற்றை இப்பொழுது நாம் அநேகமாக எல்லாக் கோயில்களிலும் பார்க்கலாம்.

இக்கோயில் நகரம் அழகாபுரிக் கோட்டை இரணியன் கோட்டை என்ற இரண்டு கோட்டைகளையுடையது. இந்த இரண்டும் 100 ஏக்கர் நிலத்தில் இருக்கின்றன. பிரதான கோயில் இரண்யன் கோட்டையில் இருக்கிறது. அழகாபுரிக் கோட்டையில்தான் நகரம் இருந்தது. இக்கோட்டையை முன்பு ஆண்டவர் அல்லி அரசாணி அல்லது சித்திராங்கதை என்று தவறாகச் சொல்லப்படுகிறது. உலூபி என்னும் நாகராணிதான் இதையாண்டாள். இவளை அர்ச்சுனன் கல்யாணம் செய்து கொண்டான் என்று பாரதத்தில் இருக்கிறது. இந்த மலை நாகர்கள் வாழ்ந்த மலை என்பதற்கு அடையாளமாக இன்று இங்கும் நாகர்பூஜை பிரபலமாக நடக்கிறது. மலையில் எங்கும் நாகர்

சிலைகள் அதிகமாக இருப்பதை இப்பொழுதும் பார்க்கலாம். நாக நாதர் கோயில் ஒன்றும் இங்கே இருக்கிறது. நாகசர்ப்பங்கள் ஆயிரக்கணக்கில் செதுக்கப்பட்டு இக்கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. அழகாபுரிக் கோட்டை சிதைந்திருந்தும் இன்றும் அதன் பெருமையைக் காட்டுகின்றது என்றால், முற்காலத்தில் அது நன்றாக இருந்தபோது எப்படி இருந்திருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. அக்காலக் கட்டடக்கலையின் உறுதிக்கும் பெருமைக்கும் இது ஓர் அபூர்வமான அடையாளம். இந்த கோட்டைக்கு நான்கு பிரதான கோபுரவாசல்கள் இருக்கின்றன. தெற்கு மதிலில் உள்ள வாசல்தான் எல்லாவற்றிலும் முக்கியமானது. இதன் வழியாக உள்ளே போய் இடது ஓரத்தில்பார்த்தால், வடக்குக் கோடியில் ஒரு பெரிய அற்புதமான கட்டடம் தெரியும். அதுதான் திருமலை நாயக்கர் மண்டபம் என்பது. அதில் திருமலை நாயக்கர் அவருடைய ராணி அவருடைய தம்பி முத்தியாலு நாயக்கர் முதலியவர்களுடைய சிலைகள் தூண்களில் மிக அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள திருமலை நாயக்கர் சிலைதான், மற்ற கோயில்களில் உள்ள சிலையைவிட அழகானது. இயற்கை உருவமுடையது, சிற்ப சாஸ்திரத்தில் நுட்பமும் அழகும் முழுவதும் பொருந்தியது.

அழகாபுரிக் கோட்டையிலிருந்து உள்கோட்டைக்குப் போக ராயகோபுரம் என்றும் இரண்யன் கோட்டைவாசல் என்றும் இரண்டு வழிகள் உண்டு. ராயகோபுரம் என்பது ராமராஜ நாயக்கர், திருமலை நாயக்கர் என்னும்இரண்டு அரசர்களால் ஆரம்பிக்கப்பட்டது. தென்னாட்டில் இவர்கள் கட்டத் தொடங்கிய ராயகோபுரங்கள் மொத்தம் 96 என்று தெரிகிறது. ஆனால் இந்தக் கோபுரங்கள் ஒன்றும் கட்டி முடிக்கப்படவில்லை. இங்கு உள்ள ராயகோபுரம் மிகவும் சிதைந்த நிலையில் இருக்கிறது. ஆனால் அதிலும் பல அற்புதமான சிற்பங்கள் காணப்படுகின்றன. இந்த வாசல் இப்பொழுது மூடப்பட்டுவிட்டது. இரண்யன் கோபுரவாசல்தான் இப்பொழுது போக்குவரத்துக்கு உபயோகப்படுகிறது.

இதன் வழியாக உள்ளே சென்றால், யானை வாகன மண்டபத்தை முதலில் பார்க்கலாம். இது முன் ஒரு காலத்தில் மிகப் பிரசித்தி பெற்றிருந்தது. பழைய காலத்தில் இது ஒரு வேளை பலதேவன் அல்லது கண்ணன் சந்நிதியாக இருந்திருக்கலாம். வரிசை வரிசையாக உள்ள தூண்களில் மகாவிஷ்ணுவின் லீலைகள் பல இங்கு மிக அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. பிரம்மோற்சவத்தில் யானை வாகனத்தன்று இங்குப் பெருமாளுக்கு மண்டகப்படி நடக்கிறது. இதைத் தாண்டிப் போனால் முதலில் பதினெட்டாம்படி வருகிறது. பதினெட்டாம்படியைத் தாண்டி வண்டி வாசல் வழியாக உள்ளே போனால், யதிராஜன் முற்றம் என்னும் ஒரு பெரிய முற்றத்திற்கு வருகிறோம். இதன் பக்கத்தில் ராம களஞ்சியம், லக்ஷ்மண களஞ்சியம் என்னும் இரண்டு பெரிய கட்டடங்கள் இருக்கின்றன. இவற்றில் முன் காலத்தில் தானியங்களைக் கொட்டி வைப்பார்கள். இப்பொழுது இவை

சேதமடைந்துவிட்டன. ஆனால் செப்பனிட்டு இவற்றை தண்ணீர்த் தொட்டிகளாக இப்பொழுது உபயோகிக்கிறார்கள். யதிராஜன் முற்றத்தில் தெற்கில் கோடைத் திருநாள் மண்டபம் இருக்கிறது. அதில் சித்திரை உற்சவத்தின் முதல் மூன்று நாள் விழாக்கள் நடைபெறும். மற்ற சமயங்களில் அது சத்திரமாக உபயோகப்படுகிறது.

கோடைத் திருநாள் மண்டபத்தின் மேற்கில் மணவாள மாமுனி சந்நிதி இருக்கிறது. இதன் மேற்கில் உடையவர், திருக்கச்சிநம்பி சந்நிதிகள் இருக்கின்றன உடையவர்கள் சந்நிதி அதன் ஒருபுறம் கிழக்கு முகமாகக் கூரத்தாழ்வான் எழுந்தருளியிருக்கிறார். மணவாள மாமுனி சந்நிதியின் கர்ப்பக்கிரகம் இப்போது சேதமடைந்துவிட்டது. ஆகையால் விக்கிரகங்கள் கோயிலுக்கள் ஆழ்வார்கள் பக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன.

வண்டி வாசலில் நுழைந்தவுடன், கண்ணைக் கவரும்படியாக எதிரில் தெரிவது கல்யாண மண்டபமே. இது ஓர் அற்புதச் சிற்பச் சிறப்புள்ள இடம். இதில் நாயக்கர் காலத்து சிற்பக்கலையின் உன்னத தன்மையைப் பார்க்கலாம் இதில் கிழக்குப்புறப் படி வழியாக ஏறினால், முதலில் அங்கே இம்மண்டபத்தைக் கட்டிய இரண்டு அரசர்களின் சிலைகள் நம் கண்ணைக் கவரும். இவர்கள் கிருஷ்ணப்பரும், விசுவநாதரும் ஆவார். இதில் உள்ள மற்ற சிலைகளில் அழகு, மதுரை மீனாக்ஷிகோயில் உள்ள சிலைகளின் அழகையும் மிஞ்சுவதாக இருக்கிறது. அவற்றுள் முக்கியமாகப் பார்த்து ரசிக்கத் தகுந்தவை நரசிம்மருடைய இரண்டு தோற்றங்கள். ஸ்ரீகிருஷ்ணர், ரதி, மன்மதன், கருட வாகன விஷ்ணு, திரிவிக்கிரமர், பூமிவராகர் முதலியவைகள். இச் சிலைகள் நவரசங்களுக்கும் சிறந்த உதாரணங்களாக இருக்கின்றன. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அவற்றின் அங்கங்கள் துஷ்டர்களால் உடைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மண்டபத்தை பிரிட்டிஷ்காரர்கள் பெயர்த்தெடுத்துக் கொண்டு போய் இங்கிலாந்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று திட்டமிட்டிருந்தார்களாம். ஆனால் அது கைகூடவில்லை.

இம்மண்டபத்திலிருந்து கோயிலுக்குள் தொண்டமான் கோபுரவாசலில் வழியாகப் போகவேண்டும். இந்தக் கோபுரவாசல், நாயக்கர்களுக்கு முந்திய தொண்டைமான் ஒருவனால் கட்டப்பட்டது. இதன் இரண்டு பக்கமும் மிகவும் பெரிய அழகான துவாரபாலகர்கள் செதுக்கப்பட்டிருக்கிறார்கள். பிறகு உள்ளே போனால் தங்கத்தால் செய்த துவஜஸ்தம்பம் தெரியும். இதனடியில் அளவில்லாத பொக்கிஷம் புதைக்கப் பட்டிருக்கிறதாம். இதன் இடது புறமாக திரும்பினால் ஆழ்வார்கள் சந்நிதி மண்டபம் இருக்கிறது. இதில் நுழையும்போது வலதுபுறம் மூன்றுவதாக இருப்பது ஐந்தரை அடி உயரமுள்ள லிங்காயத்தினுடைய சிலை. இவர் அழகருக்குச் செய்த ஒரு பெரிய திருப்பணியின் காரணமாக இங்கு இடம் பெற்றிருக்கிறார் என்று தெரிகிறது.

இக்கோயிலுக்கு முழுதும் பொன்வேய்ந்த சுந்தர பாண்டியன் என்னும் அரசன் பெயரால் அங்கே ஒரு மண்டபம் இருக்கிறது. இவன் இங்கு

அழகியமணவாளன் மண்டபத்தையும் திருமுத்தின் பந்தலையும் கட்டிப் பொன்வேந்தான். சுந்தரபாண்டியன் கட்டிய மேட்டுக் கிருஷ்ணன் கோயில் என்று ஒன்றும் உண்டு. சுந்தரபாண்டியன் மண்டபம் தான் அப்பொழுது முக்கிய உத்ஸவ மண்டபம். இங்கிருந்துதான் அலங்கரிக்கப்பட்டு உற்சவர் புறப்படுவார். துவஜஸ்தம்பத்தைத் தாண்டி நேராக வந்தால் ஆரியன் மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். இது ஒருகாலத்தில் முழுதும் தங்கத் தகட்டால் வேயப்பட்டது. இம் மண்டபத்தில் ஏறியவுடன் மிக அழகாகச் செதுக்கப்பட்ட தூண்களில் உள்ள அரிய சிலைகளைக் காணலாம். யாளிகளின் வாயில் கற்கள் உருளும் படியாகச் செய்யப்பட்ட அற்புதமான சிற்பசாஸ்திர சமத்காரத்தையெல்லாம் இங்கே பார்க்கலாம். இம்மண்டபத்தின் மேற்புறமும் அற்புதமான வேலைப்பாடுடையது. இதில்தான் வட்டெழுத்து, கிரந்தம், தமிழ் முதலிய எழுத்துகளில் பல கல்வெட்டுகள் இருக்கின்றன. இது கி. பி. 6, 7 ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்டதென்று தெரிகிறது.

இந்த மண்டபத்திலிருந்து உள்ளே சென்றவுடன், மகாமண்டபம், கோயில் அலங்காரன் திருமண்டபம், முனையதரையன் திருமண்டபம் என்னும் பெயர்களுடைய ஓர் அழகான மண்டபத்தை அடைகிறோம். இதன் வாசலுக்கு ஆரியன் வாசல் என்று பெயர். முற்காலத்தில் வடநாட்டிலிருந்து வந்த ஆரிய வீரர்கள் காவல் காத்ததால், இதற்கு இப்பெயர் வந்திருக்கலாம். இந்த மண்டபத்திலிருந்து பிறகு நாம் இரண்டாம் பிரகாரத்தில் நுழைகிறோம். இப்பிரகாரத்தில் வடக்குப்புறத்தில் குறிப்பிட்டிருக்கிற ஓர் இடத்திலிருந்து பார்த்தால் மூலவர் மேலுள்ள சோமசந்த விமானத்தின் திவ்ய தரிசனம் கிடைக்கும். ஸ்தானத்திற்குள் நுழையும்போது, இரு புறமும் பெரிய துவாரபாலகர் சிலைகள் இருப்பதைப் பார்க்கலாம். இவையும் மிக அழகானவை. இவைகளைத் தாண்டிச் சென்றால் மூலவர் சந்நிதியில் உள்ள நங்கள் குன்றம் என்னும் பிரணவாகாரமான பிராகாரத்தில் நின்று ஸ்ரீபரமசுவாமியின் திவ்ய தரிசனத்தைக் கண்ணும் மனமும் குளிர, மயிர் கூச் செறிய கண்டு சேவித்தால் மெய் மறந்து நின்றுவிடுவோம். இந்த இடத்தில்தான் தேவர்கள் எல்லோரும் பகவானைச் சுற்றி நின்று சதாசேவித்துக் கொண்டிருந்தார்களாம். இந்தப் பிராகாரத்திலும் சிற்பிகள் பிரமிக்கத் தகுந்த கைத்திறமையைக் காட்டியிருக்கிறார்கள். பிறகு பெருமாளை வலம் வந்து, ஸ்ரீ கல்யாண சுந்தரவல்லித் தாயார் சந்நிதி, ஆண்டாள் சந்நிதி முதலியவற்றையும், பிராகாரங்களில் உள்ள பரிவார தெய்வங்களையும் தரிசித்து, அவற்றின் சிற்ப நுட்பங்களையும் கண்டு மகிழலாம்.

இக்கோயில் மரத்தில் செய்யப்பட்ட செதுக்கு வேலைகளும் மிக உயர்தரமானவை. இவற்றைக் கதவுகளிலும் நிலைகளிலும் பார்க்கலாம். .இவற்றில் சில, ஆயிரம் வருஷங்களுக்கு முந்தியவை. இவற்றைப் போல வேறு எங்கும் பார்ப்பது அரிது. வசந்த மண்டபத்தில் சுவர்களில் தீட்டப்பட்டுள்ள வண்ணச் சித்திரங்களும் மிகவும் பிரமிக்கத்தகுந்தவை. இவை எழுப்பப்பட்டு பல நூற்றாண்டுகள் ஆயினும், அப்படியே அழியாமல் இருக்கின்றன.

7. மற்றும் பார்க்கத் தகுந்தவை

மாதவி மண்டபம்

நூபுரகங்கைக்குச் செல்லும் வழியில் கனுமண்டபம், தண்டலைக் கோயில் அழிவுபாடுகள் ஆகியவற்றைப் பார்க்கலாம். பிறகு அநுமார் தீர்த்தத்திற்கும் அநுமார் கோயிலுக்கும் போய், கருடதீர்த்தம், கருடர் கோயில் ஆகியவற்றையும் கண்டு மாதவி மண்டபத்தில் உள்ள நூபுரகங்கையை அடைகிறோம். இந்த இடத்தில் உள்ள இயற்கைக் காட்சிகள் கண்கொள்ளாத காட்சியாகும். தென் இந்தியாவிலேயே இது ஒரு மிக ரம்மியமான இடம். இந்த மாதவி மண்டபத்தில் மாதவி (மல்லிகைக்) கொடி முன்பு எங்கும் அழகாகப் படர்ந்திருந்தது. பழைய காலத்தில் அதை மக்கள் விரும்பிப் போற்றியிருக்க வேண்டும். இத்தல புராணத்தில்கூட இந்த மண்டபம் மிகவும் அழகாக வருணிக்கப்பட்டு இருக்கிறது. இது மிகவும் பழமையானது என்பதற்கு இதில் உள்ள விளங்காத கல்வெட்டுகளும் கற்சிலைகளும் போதிய சாட்சியாகும். பிற்காலத்தில் பாண்டியர்களும் நாயக்கர்களும் இதை புதுப்பித்ததற்கு அடையாளமாக அவர்களுடைய சிலைகளும் இங்கு உள்ளன.

பஞ்சபாண்டவர் படுக்கை

அழகர் கோயிலுக்கு அரை மைல் கிழக்கில் மிக அபாயகரமான செங்குத்தான வழியில் சென்று பஞ்சபாண்டவர் படுக்கை என்னும் குகையைப் பார்க்கலாம். வழியில் சில இடங்களில் படுத்து ஊர்ந்து கொண்டுதான் அல்லது குனிந்து கொண்டுதான் இக்குகைகளை அடைய வேண்டும். இக்குகை மிகப் பாதுகாவலான ஓர் இடம். இது கழுகுமலை என்னும் குன்றின் உச்சியில் இருக்கிறது. இங்கே அமிர்தம் போன்ற இனிமையான தண்ணீர் இருக்கிறது. இதன் முன்னால் ஒரு பெரிய ஆலமரம் அழகாக நிழலைத் தந்து நிற்கிறது. இங்கேயிருந்து நாம் கீழே காணும் காட்சியும் மிக ரம்யமானது. இக்குகை ஒருகூடம் போலவும் அதனுள்ளே 6 அடி முதல் 9 அடி நீளம் இரண்டு மூன்று அடி அகலமும் உள்ள கற்படுக்கைகள் இருக்கின்றன. இதில் உள்ள 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமிலிபி சாசனம், ஜைனர்களும், பௌத்தர்களும் எழுதி வைத்தது. அச்சணந்தி என்னும் ஜைன முனிவர் அதை எழுதினார் என்று தெரிகிறது. ஒரு முனிவரது உருவச்சிலையும் அங்கு செதுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குகையை ஜைன முனிவர்கள் தாங்கள் வசிப்பதற்காகவும் தவம் செய்வதற்காகவும் ஏற்படுத்திக் கொண்டார்கள். இதற்குப் பஞ்சபாண்டவர் படுக்கை என்று பிற்காலத்தில் எப்படியோ தவறாகப் பெயர் வந்துவிட்டது.

தீர்த்தங்கள்

அழகர் கோயிலிலிருந்து வடக்கு வாசல் வழியாக மலைமேல் 3 மைல்தூரம் சென்றால் நூபுரகங்கை தீர்த்தத்தை அடையலாம். அதன் உற்பத்தியிடம் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதன் தீர்த்தம் யானை துதிக்கை போல் பருமனாக, கோமுகியின் வழியாக, மாதவி மண்டபத்தில் வருவதைத்தான் நாம் பார்க்கிறோம். இத் தீர்த்தத்தில் இரும்புச் சத்தும், தாமிரச்சத்தும் அதிகம் இருப்பதாகத் தெரிகிறது. இது சில நோய்களைத் தீர்க்கும் குணமுடையது. இத்தீர்த்தம் தெற்கு நோக்கி பாயும்போது சிலம்பாறு என்று பெயர் பெற்று, அழகர் அல்லது சுந்தரராஜரின் அடிகளை வருடிக்கொண்டு, கடைசியாக ஏரிகளில் நிறைந்து வயல்களுக்கு பாய்ச்ச உதவுகிறது. இதன் சுவை மிக இனிமையானது. ஆகையால் இது பழைய நூல்களில் தேனாறு என்றும் சொல்லப்படுகிறது. இதன் மற்ற மகத்துவங்களையும் ஸ்நான பலன்களையும் தலபுராண நூலில் காணலாம்.

அநுமார் தீர்த்தம் என்பது கோயிலிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கே ஓர் அநுமார்கோயில் இருக்கிறது. இதற்குச் சற்று மேலே, கருடதீர்த்தம், கருடர் கோயில் இரண்டும் இருக்கின்றன. அதன் பக்கத்தில் பாண்டவ தீர்த்தமும் கோயிலும் உள்ளன. மலையில் வடபக்கச் சரிவில், பார்த்த உடனேயே பாபத்தை போக்கக்கூடிய பெரிய அருவி என்ற தீர்த்தம் இருகிறது. அழகர் கோயிலுக்குச் சிறிது வடக்கே போனால் உத்தர நாரயணவாவி என்னும் தீர்த்தத்தினால்தான் கோயில் பரிவார தேவதைகளுக்கு அபிஷேகமும், சமையலும் செய்ய வேண்டும். அழகருடைய திருமஞ்சனத்திற்கு மட்டும் தினந்தோறும் 2 மைல் அப்பால் உள்ள நூபுரகங்கா தீர்த்தம் கொண்டு வரவேண்டும். சைத்ரோற்சவ காலத்தில் அழகர் மதுரைக்கும் வண்டியூருக்கும் போய்த் தங்கி இருக்கும் போதுகூட, இந்தத் தீர்த்தமே கொண்டு வரப்படுகிறது. வேறு தீர்த்தத்தில் அழகரை நீராட்டினால் அவர் உருவம் கருத்துவிடுகிறது என்பதாலேயே இப்படிச் செய்யப்படுகிறது. இந்த விநோதத்தின் ரகசியம் இன்னும் ஒருவருக்கும் புலப்படவில்லை.

ஸ்தல விருக்ஷம்

இக்கோயிலுக்கு ஸ்தல விருக்ஷம் ஜோதி விருக்ஷமாகும்.

நகைகள்

இக்கோயிலுள்ள நகைகளின் மதிப்பு சுமார் ரூ. 3,60,00,000 ஆகும். அற்புதமான நகைகள். பழமையானவை.

'அரங்கன் சொத்து அழகன் அங்க படிக்குக் காணாது' என்ற மொழியிலிருந்தே இதன் பெருமை நன்கு விளங்கும்.

வாகனங்கள்

நேரில் கண்டு ரசிக்கக்கூடியவை தங்கம், வெள்ளி , தந்தங்களாலானவை. மற்றும் குருகுலம், கண்காட்சி சாலை, மாலைக்கிணறு பார்க்கத் தகுந்தவை.

பிரார்த்தனை

பலதரப்பட்டவை. அலங்காரத்துடனும் பல வேஷங்களுடனும் பீச்சாங்குழல், நெருப்புப் பந்தம், சாட்டை அடிப்பு முதலியவை நம்மை ஆச்சரியத்துள்ளாக்கும். பதினெட்டாம்படியில் நேர்த்திக்கடனுக்காக தொட்டிலிடுதல், சந்தனக்குடம் எடுத்தல் முதலியவைகள் மிகச் சிறப்பாக நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

8. திருவிழாக்கள்

ஸ்ரீ கள்ளழகர் நித்தியோற்சவப் பெருமாள் அவருக்குப் பிரதி தினமும் ஏதாவது ஒரு உற்சவம் நடந்து கொண்டே இருக்கும். நித்யோற்சவம் அன்றி சில விசேஷ நாட்களில் சிறப்பான திருவிழாக்களும் அவருக்கு நடைபெறுகின்றன. இப்படி நித்திய நைமித்திக வைபவங்களுக்கு உரியவராக ஸ்ரீ அழகர் விளங்குகிறார்.

மிகப்பழைய காலம் தொட்டே ஸ்ரீ அழகருக்கு நடந்து வந்த விழாக்கள் இன்னின்னவை என்றும் அவைகளுக்காக கொடுக்கப்பட்ட மானியங்கள். நிபந்தங்கள் அல்லது கட்டளைகள் இன்னின்னவை என்றும், இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளால் நாம் அறியலாம். இக்கட்டளைகளை ஏற்படுத்தியவர்கள் இன்னார் என்றும் அவற்றால் நாம் அறிகிறோம்.

சித்திரா பௌர்ணமித் திருவிழா

ஸ்ரீ கள்ளழகருக்குரிய திருவிழாக்களில் மிகவும் முக்கியமானது சித்ரா பௌர்ணமித் திருநாள்தான். மதுரை ஸ்ரீ மீனாட்சிக்கோயிலில் தொடங்கும் சித்திரைத் திருவிழாவும் இவ்விழாவும் ஒரே சமயத்தில் நடக்கின்றன. திருமலை நாயக்கர் காலத்திற்கு முன்பு இந்த இரண்டு உற்சவங்களும் வெவ்வேறு மாதங்களில் நடந்தன. அப்பொழுது அழகரின் சைத்ரோற்சவம் சித்திரை மாதத்திலும் மீனாட்சிக்கோயில் உற்சவம் மாசி மாதத்திலும் நடந்தன. இதனால்தான் மாசி மாதத்தில் நடக்கும் இத்திருவிழாவில் மீனாட்சி சுந்தரேசுவரர்களுடைய ரதம் செல்லும் வீதிகளுக்கும் மாசி வீதிகள் என்று பெயர் ஏற்பட்டது. திருமலைநாயக்கர் காலத்திற்கு முன்பு ஸ்ரீ அழகர் சித்திரை மாதத்தில் அலங்காநல்லூர், தேனூர் முதலிய ஊர்கள் வழியாக வந்து வைகை ஆற்றில் இறங்கி, வண்டியூரில் தங்கியிருந்து, மீண்டும் அழகர் மலையையடைவது வழக்கம். திருமலை நாயக்கர், இந்த இரண்டு விழாக்களையும் ஒன்றாகச் சேர்த்தால் அது மிகவும் சிறப்பாக இருக்கும் என்று கருதி அப்படியே செய்தார். அவருடைய ஏற்பாட்டின்படியே இப்பொழுதும் நடந்து வருகிறது.



தங்க விமானம்



சேஷ வாகனம்

இப்பொழுது கள்ளழகர் வைகையாற்றில் இறங்கி வண்டியூர் சென்று, தன்மலைக்குத் திரும்பிவருவதை பற்றி ஒரு கதை வழங்குகிறது. இக்கதைக்கு சாஸ்திர, புராண ஆதாரம் ஒன்றும் இல்லை. ஆகையால் பொதுவாக சைவ, வைஷ்ணவ மதங்களை ஐக்கியப்படுத்தும் ஒரு முயற்சியாகவே இதைக் கொள்ளவேண்டும். தன் தங்கை ஸ்ரீ மீனாட்சிக்கும் ஸ்ரீ சுந்தரேசுவரருக்கும் கல்யாணம் நடக்கப்போகும் செய்தியைக் கேள்விப்பட்டு ஸ்ரீ ஆழகர் கள்ளழகர் திருக்கோலத்துடன் அந்த வைபவத்தைப் பார்க்க 24 கி.மீ. தூரத்திலுள்ள தன் இருப்பிடத்தை விட்டுச் சகல கோலாகலங்களுடன் மதுரையை நோக்கி வருகிறார் என்பது இக்கதை. பல்லக்கில் கள்ளர் திருக்கோலத்துடன் வழியில் பல மண்டபங்களில் தங்கி, இந்தச் சேவையைப் பார்ப்பதற்கும் அழகரை எதிர்கொள்வதற்கும் மதுரை மக்கள் திரண்டு வரும் காட்சிகள் ஸ்ரீ கள்ளழகர் எதிர்சேவை என்று சொல்லப்படும். இரவில் அம்பலக்காரர் மண்டலத்தில் பிரம்மாண்டமான வாணவேடிக்கைகள், கூத்துகள், கொட்டுமேளங்கள் முதலியவை நடக்கும். மறுநாள் விடியற்காலை தல்லாகுளம் பெருமாள் கோயிலிலிருந்து (சித்ரா பௌர்ணமியன்று) அழகர் குதிரை வாகனத்தில் புறப்பட்டு வைகையை நோக்கிச் செல்வார். புறப்படும் முன்பு ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து சூடிக்கொடுத்த நாச்சியராகிய ஸ்ரீ ஆண்டாளின் மாலையைச் சாற்றிக் கொள்கிறார். இது தவறாமல் வருடந்தோறும் நடந்து வருவது விசேஷம். ஸ்ரீ அழகர் ஆற்றுக்குச் செல்லும் பொழுது முதலில் வெட்டிவேர் சப்பரத்திலும், பிறகு மைசூர் மண்டபத்திலிருந்து ஆயிரம் பொன் சப்பரத்திலும் எழுந்து அருளும் காட்சியே கண்கொள்ளாக் காட்சியாகும். ஆற்றில் எழுந்தருளியதும் மதுரை ஸ்ரீ வீரராகவப் பெருமாள் அவரை எதிர்கொண்டு அழைக்கிறார். இந்த வைபவம் அழகர் ஆற்றில் இறங்குதல் என்று சொல்லப்படும். இதைக் காண லட்சக்கணக்கான மக்கள் திரண்டு வருவதும் கண்கொள்ளாக்காட்சியாகும். மதுரையில் இவ்விழாவே மிகப்பெரிய திருவிழா. வெயில், மழை என்று பாராமல் ஜனங்கள் பகலும் இரவும் ஒரு சிறிய இடத்தையும் விடாமல் நிறைத்துக் கொண்டு ஆற்றிலும் அதன் கரைகளிலும் மண்டபங்களிலும் கூடியிருப்பார்கள். பின்பு வைகையாற்றின் வழியாகவே நேராக வண்டியூருக்கும் போகிறார். அங்கு அன்றிரவு தங்கி இளைப்பாறிச் சைத்யோபசாரம் செய்து கொண்டு மறுநாள் காலை சேஷவாகனத்தில் எழுந்தருளி தேனூர் மண்டபத்தை அடைகிறார். அங்கு தங்கக் கருட வாகனத்தில் காட்சி நல்கி மண்டுக மகரிஷிக்கு மோக்ஷமளிக்கிறார். பிறகு அன்றிரவு ராமராயர் மண்டபத்திற்கு எழுந்தருளித் தசாவதார சேவை சாதிக்கிறார். மறுநாள் காலை அழகர் மோகனாவதார சேவையருளி ஆனந்தராயர் பல்லக்கில் ராஜாங்க சேவையுடன் புறப்பட்டு மைசூர் மண்டபத்தில் கள்ளழகர் திருக்கோலத்துடன் புஷ்பப் பல்லக்கு சேவை நடக்கும். மறுநாள் காலையில் ஸ்ரீ அழகர் அப்பன் திருப்பதிக்குச் சென்று திருமலையை அடைவார். மறுநாள் அவருக்கு அங்கு சாத்துமுறை நடக்கும்.

இந்த அழகர் திருவிழா மொத்தம் ஒன்பது நாள் நடக்கும். அழகர் மதுரைக்குப் புறப்படும் முன்பே திருமலையில் அவருக்குத் திருவிழாக்கள் தொடங்கிவிடும். அந்தத் திருவிழாவின் 4 ஆம் நாள் மதுரைக்குப் புறப்பட்டு ஒன்பதாம் நாள் மீண்டும் தம்மலைக்குத் திரும்பிவிடுவார். அழகர் வைகையாற்றில் தங்கியிருக்கும் படியான மூன்று நாட்களிலும் இரவும் பகலும் அங்கு சேரும் ஜனக்கூட்டம் கணக்கிட முடியாதது. அங்கே அழகர் அருளுகின்ற பலவிதமான சேவைகளைக் கண்டுகளிக்கவே மக்கள் கூட்டம் திரண்டிருக்கும். அப்போது இரவில் வாண வேடிக்கைகளும் விளையாட்டுகளும் ஆரவாரங்களும் அளவற்று நடக்கும். இவற்றையெல்லாம் காண, பல மைல் தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து மக்கள் மாட்டு வண்டிகளில் வந்து, மூன்று நான்கு நாட்கள் குடும்பத்துடன் தங்கியிருந்து போவார்கள்.

அழகருக்கு நடக்கும் மற்ற திருவிழாக்களில் முக்கியமனவை. வைகாசி வசந்த உற்சவ திருநாள். (இது வசந்த மண்டபத்தில் 10 நாள் நடக்கும்) ஆடி பிரம்மோற்சவம் (10 நாள்) ஐப்பசி தலையருவி உற்சவம் அல்லது தொட்டி உற்சவம் (3 நாள்) கார்த்திகை கைசிகம், மார்கழித் திருநாள், திரு அத்தியயன உற்சவம், இது பகற்பத்து இராப்பத்து என்று இரண்டு பிரிவுகளாக மொத்தம் 20 நாட்கள் நடை பெறுகிறது. இந்த நாட்களில் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் முழுவதும் அத்யாகர்களால் சேவிக்கப்படுகிறது. பகற்பத்தில் இங்கு பெரியாழ்வார் அழகரின் திருவடி சேர்வதாக நடைபெறுவது தனிச் சிறப்பு வாய்ந்தது. மற்ற திவ்விய தேசங்களில் திரு மங்கையாழ்வார் திருவடிச் சேருவதாக விழா நடைபெறும் இங்கு பெரியாழ்வார் இறுதிக் காலத்தில் வாழ்ந்து அழகர் திருவடி சேர்ந்ததால் இவ்வாறு விழா அமைக்கப்பட்டிருகிறது. மாசி தெப்பம், பங்குனி திருக்கல்யாணம் முதலியன. சித்திரை திருவிழாவிற்கு அடுத்தபடி பெரிய திருவிழா ஆடிப் பிரம்மோற்சவமே. இந்த பிரம்மோற்சவம் பத்தநாள் நடக்கும். இதில் ஒன்பதாம்நாள் பௌர்ணமியன்று திருத்தேர் நடக்கும். இந்தப் பிரம்மோற்சவத்திற்குக் கிருஷ்ணதேவராயர் இரண்டு கிராமங்களை மானியமாகக் கொடுத்தார்.

முன்னர்க் குறிப்பிட்டதில் அத்யயன உற்சவத்தின் இராப்பத்து 8 ஆம் நாள் தங்கக் குதிரை வாகனத்தில் திருவேடர்பரி சேவை நடைபெறும். ஸ்ரீ ஆண்டாள் இங்கு கள்ளழகரைக் கல்யாணம் செய்துகொண்டதாக ஐதீகம் உண்டு. ஆகையால் இந்த விழா இங்கு மிகச் சிறப்பாக நடைபெறும். இத்திருக்கல்யாணம் பங்குனி உத்திரத்தில் நடைபெறும்.

இராக்காயி அம்மனுக்கு அமாவாசையன்று கொண்டாப்படும் திருவிழவைப் பற்றி முன்பே பார்த்தோம். இந்த அம்மன் அழகர்மலையிலுள்ள ஸ்தலங்களுக்கும், தீர்த்தங்களுக்கும் அதி தேவதை. அழகருக்கும் பதினெட்டாம்படியானுக்கு அடுத்தபடியாக, இராக்காயி அம்மனே இம்மலையிலுள்ள தெய்வங்களுள் முக்கியமானவை. அதை ச் சேவிக்க ஆயிரக்கணக்கான ஜனங்கள் அமாவாசை தோறும் கூடுவார்கள்.

பதினெட்டாம்படி கருப்பணசுவாமிக்கும் சிறப்பான பூஜைகள் நடப்பதை முன்பு கண்டோம். இத்தெய்வத்திற்கு ஆடி அமாவாசையன்றும் பௌர்ணமியன்றும் விசேஷ பூஜைகள் செய்வார்கள். இதற்கு வருஷத்தில் இரண்டு தடவை இப்படி கோலாகலமாகப் பூஜைகள் நடக்கும்.

திருமாலிருஞ்சோலை ஸ்ரீ கள்ளழகர் உற்சவங்கள்

சித்திரை மாதம்

1. கொட்டகை உற்சவம்
2. கோடை சைத்திர உற்சவம் (9 நாள் உற்சவம்)

வைகாசி மாதம்

வஸந்த உற்சவம் (10 நாள் உற்சவம்)

ஆனி மாதம்

முப்பழ உற்சவம் (ஒரு நாள்)

ஆடி மாதம்

1. கருட சேவை (ஆடி அமாவாசை)
2. திருவாடிப்பூரம்
3. பிரம்மோற்சவம் (10 நாள் உற்சவம்)

ஆவணி மாதம்

1. திருப்பவித்திர உற்சவம் (5 நாள் உற்சவம்)
2. உறியடி உற்சவம்

புரட்டாசி மாதம்

1. விநாயகர் சதுர்த்தி
2. கருடசேவை
3. நவராத்திரி உற்சவம் (9 நாள் உற்சவம்)
4. விஜயதசமி - அம்பு போடுதல் (1 நாள்)

ஐப்பசி மாதம்

1. தீபாவளி உற்சவம்
2. தொட்டி உற்சவம் (3 நாள் உற்சவம்)

மார்கழி மாதம்

1. திருவத்யயனம் பகல்பத்து உற்சவம் (10 நாள் உற்சவம்)
2. ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி இராப்பத்து உற்சவம் (10 நாள் உற்சவம்)

தை மாதம்

1. கனு உற்சவம்
2. தைலப் பிரதிஷ்டை (3 நாள் உற்சவம்)
3. சப்ர முகூர்த்தம்

மாசி மாதம்

1. தெப்பம் உற்சவம் (1 நாள் உற்சவம்)
2. கஜேந்திர மோக்ஷம் (1 நாள் உற்சவம்)

பங்குனி மாதம்

திருக்கல்யாண உற்சவம் (5 நாள் உற்சவம்)

ஸ்ரீ

ஸ்ரீ சுந்தரராஜபரப்ரஹ்மனே நம:

பொதுத்தனியன்கள்

அழகிய மணவாளனருளிச் செய்தது

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.

கூரத்தாழ்வானருளிச் செய்தது

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்
யோநித்யமச்யுத பதாம்புஜயுக்மருக்ம.
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம்ப்ரபத்யே.

ஆளவந்தாரருளிச் செய்தது

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்
ஆத்யஸ்யந : குலபதேர்வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்நா.

பட்டரருளிச் செய்தது

பூதம்ஸரஸ்யமஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்.
பக்தாங்கிரிரேணு பரகாலயதீந்த்ரமிச்ராந்.
ஸ்ரீமத்பராங்குச முநிம் ப்ரணதோஸ்மி நித்யம்

பெரியாழ்வார் திருமொழித் தனியன்கள்
நாதமுனிகளருளிச் செய்தது

குரமுகமநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந்
நரபதிபரிக்லுப்தம் சுல்கமாதாதுகாம:
ச்வசுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்யஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி

பாண்டிய பட்டரருளிச் செய்தது நேரிசை வெண்பா

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றொருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம் - முன்னாள்
கிழியறுத்தானென்றுரைத்தோம் கீழ்மையினிற்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே ! வந்து
பாண்டியன் கொண்டாடப்பட்டர்பிரான் வந்தானென்று
ஈண்டிய சங்க மெடுத்தாத - வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

9. ஆழ்வார்கள் மங்களாசாசனப் பாசுரங்கள்

பெரியாழ்வார் அருளிச்செய்த திருமொழி

(1 ஆம் பத்து, 5 ஆம் திருமொழி, 8 ஆம் பாசுரம்)

உன்னையும் ஒக்கலையிற் கொண்டுதமில் மருவி
உன்னொடு தங்கள் கருத்தாயினசெய்துவரும்
கன்னியரும் மகிழக்கண்டவர் கண்குளிரக்
கற்றவர்தெற்றிவரப் பெற்ற வெனக் கருளி
மன்னு குறுங்குடியாய்! வெள்ளறையாய் மதிள்சூழ்
சோலைமலைக்கரசே! கண்ணபுரத்தமுதே!
என்னவலம் களைவாய்! ஆடுகசெங்கீரை
ஏழுலகுமுடையாய்! ஆடுக ஆடுகவே.

(3ஆம் பத்து 4 ஆம் திருமொழி 5ஆம் பாசுரம்)

2. சுற்றிநின்று ஆயர் தழைகளிடச்
சுருள்பங்கி நேத்திரத்தால் அணிந்து
பற்றி நின்று ஆயர்கடைத்தலையே
பாடவும் ஆடக்கண்டேன், அன்றிப்பின்
மற்றொருவர்க்கு என்னைப் பேசலொட்டேன்
மாலிருஞ்சோலை எம்மாயற் கல்லால்
கொற்றவனுக்கு இவளாமென்றெண்ணிக்
கொடுமின்கள் கொடீராகில் கோழம்பமே.

(திருமாலிருஞ் சோலைமலைச் சிறப்பு)

(4 ஆம் பத்து, 2 ஆம் திருமொழி)

(அடாணா– ராகம்) கலிநிலைத்துறை (ஜம்பை – தாளம்)

3. அலம்பா வெருட்டாக்கொன்று திரியும் அரக்கரை
குலம்பாழ்படுத்துக் குலவிளக்காய் நின்றகோன்மலை
சிலம்பார்க்கவந்து தெய்வமகளிர்களாடும் சீர்
சிலம்பாறுபாயும்தென் திருமாலிருஞ்சோலையே

4. வல்லாளன்தோளும் வாளரக்கன்முடியும் தங்கை
பொல்லாதமூக்கும் போக்குவித்தான் பொருந்தும்மலை
எல்லாவிடத்திலும் எங்கும் பரந்து பல்லாண்டொலி
செல்லாநிற்கும்சீர்த் தென்திருமாலிருஞ்சோலையே

5. தக்கார்மிக்கார்களைச் சஞ்சலம்செய்யும் சலவரைத்
தெக்கா நெறியே போக்குவிக்கும் செல்வன் பொன்மலை
எக்காலமும்சென்று சேவித்திருக்கும் அடியரை
அக்கானெறியைமாற்றும் தண்மாலிருஞ்சோலையே.

6. ஆனாயர்கூடி அமைத்த விழவை அமரர்தம்
கோனார்க் கொழியக் கோவர்தனத்துச் செய்தான்மலை
வானாட்டில்நின்று மாமலர்க் கற்பகத்தொத்திழி
தேனாறுபாயும் தென்திருமாலிருஞ்சோலையே.

7. ஒருவாரணம் பணிகொண்டவன் பொய்கையில் கஞ்சன்தன்
ஒருவாரணம் உயிருண்டவன் சென்றுறையும்மலை
கருவாரணம் தன்பிடி துறந்தோடக் கடல்வண்ணன்
திருவாணை கூறத்திரியும் தண்மாலிருஞ்சோலையே.

8. ஏவிற்றுச் செய்வான் ஏன்றெதிர்ந்து வந்தமல்லரைச்
சாவத்தகர்த்த சாந்தணிதோள் சதுரன்மலை
ஆவத்தனமென்று அமரர்களும் நன்முனிவரும்
சேவித்திருக்கும் தென்திருமாலிருஞ்சோலையே.

9. மன்னர்மறுக மைத்துனன்மார்க்குஒரு தேரின் மேல்
முன்னங்குநின்றுமோழை யெழுவித்தவன்மலை
கொன்னவில் கூர்வேற்கோன் நெடுமாறன் தென்கூடற்கோன்
தென்னன்கொண்டாடும் தென்திருமாலிருஞ்சோலையே.

10. குறுகாத மன்னரைக் கூடுகலக்கி வெங்கானிடைச்
சிறுகால் நெறியே போக்குவிக்கும் செல்வன் பொன்மலை
அறுகால் வரிவண்டுகள் ஆயிரநாமம் சொல்லி
சிறுகாலைப்பாடும் தென்திருமாலிருஞ்சோலையே.

11. சிந்தப்புடைத்துச் செங்குருதி கொண்டு பூதங்கள்
அந்திப்பலிகொடுத்து ஆவத்தனம்செய் அப்பன்மலை
இந்திரகோபங்கள் எம்பெருமான் கனிவாயொப்பான்
சிந்தும் புறவில் தென்திருமாலிருஞ்சோலையே.

12. எட்டுத் திசையும் எண்ணிறந்த பெருந்தேவிமார்
விட்டு விளங்க வீற்றிருந்த விமலன்மலை
பட்டிப்பிடிகள் பகடுறிஞ்சிச் சென்று மாலைவாய்த்
தெட்டித்திளைக்கும் தென்திருமாலிருஞ்சோலையே.

13. மருதப்பொழிலணி மாலிருஞ்சோலைமலை தன்னை
கருதியுறைகின்ற கார்க்கடல் வண்ணனம்மான் தன்னை
விரதம் கொண்டேத்தும் வில்லிபுத்தூர் விட்டு சித்தன்சொல்
கருதியுரைப்பவர் கண்ணன் கழலிணை காண்பர்களே.

(திருமாலிருஞ்சோலைமலையின் சிறப்பு)

(4 ஆம் பத்து, 3 ஆம் திருமொழி)
(ஸஹாநா–ராகம்) கலிநிலைத்துறை (ரூபக–தாளம்)

14. உருப்பிணி நங்கைதன்னை மீட்பான் தொடர்ந்தோடிச்சென்ற
உருப்பனையோட்டிக் கொண்டிட்டு உறைத்திட்ட உறைப்பன்மலை
பொருப்பிடைக்கொன்றை நின்றுமுறியாழியும் காசும்கொண்டு
விருப்பொடு பொன்வழங்கும் வியன்மாலிருஞ்சோலையதே

15. கஞ்சனும் காளியனும் களிறும் மருதும்எருதும்
வஞ்சனையில் மடிய வளர்ந்த மணிவண்ணன்மலை
நஞ்சுமிழ் நாகமெழுந்தணவி நளிர்மாமதியை
செஞ்சுடர் நாவளைக்கும் திருமாலிருஞ்சோலையதே

16. மன்னுநரகன் தன்னைச் சூழ்போகி வளைத்தெறிந்து
கன்னிமகளிர் தம்மைக் கவர்ந்த கடல்வண்ணன்மலை
புன்னைசெருந்தியொடு புனவேங்கையும் கோங்கும்நின்று
பொன்னரிமாலைகள் சூழ் பொழில் மாலிருஞ்சோலையதே.

17. மாவலி தன்னுடைய மகன்வாணன் மகளிருந்த
காவலைக்கட்டழித்த தனிக்காளை கருதும்மலை
கோவலர்கோவிந்தனைக் குறமாதர்கள் பண்குறிஞ்சிப்
பாவொலிபாடி நடம்பயில் மாலிருஞ்சோலையதே

18. பலபலநாழம் சொல்லிப்பழித்த சிசுபாலன் தன்னை
அலவலைமை தவிர்த்த அழகன் அலங்காரன்மலை
குலமலைகோலமலை குளிர்மாமலை கொற்றமலை
நிலமலை நீண்டமலை திருமாலிருஞ்சோலையதே.

19. பாண்டவர் தம்முடைய பாஞ்சாலி மறுக்கமெல்லாம்
ஆண்டு அங்கு நூற்றுவர்தம்பெண்டிர் மேல்வைத்த அப்பன் மலை
பாண்தகு வண்டினங்கள் பண்கள்பாடி மதுப்பருக
தோண்டலுடையமலை தொல்லைமாலிருஞ்சோலையதே.

20. கனங்குழையாள் பொருட்டாக்கணை பாரித்து அரக்கர் தங்கள்
இனம் கழுவேற்றுவித்த எழில்தோள் எம்மிராமன்மலை
கனம்கொழி தெள்ளருவிவந்து சூழ்ந்து அகல்ஞாலமெல்லாம்
இனம்குழுவாடும் மலைஎழில்மாலிருஞ்சோலையதே.

21. எரிசிதறும்சரத்தால் இலங்கையினை தன்னுடைய
வரிசிலைவாயில் பெய்துவாய்க்கோட்டம் தவிர்த்துகந்த
அரையன் அமரும்மலை அமரரொடு கோனும் சென்று
திரிசுடர்சூழும்மலை திருமாலிருஞ்சோலையதே.

22. கோட்டுமண்கொண்டிடந்து குடங்கையில்மண் கொண்டளந்து
மீட்டுமதுண்டுமிழ்ந்து விளையாடுவிமலன்மலை
ஈட்டியபல்பொருள்கள் எம்பிரானுக்கு அடியுறையென்று
ஓட்டரும்தண் சிலம்பாறுடை மாலிருஞ்சோலையதே.

23. ஆயிரம்தோள் பரப்பி முடியாயிரம் மின்னிலக
ஆயிரம்பைந்தலைய அனந்தசயனன் ஆளும்மலை
ஆயிரமாறுகளும் சுனைகள் பலவாயிரமும்
ஆயிரம்பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே.

24. மாலிருஞ்சோலையென்னும் மலையையுடைய மலையை
நாலிருமூர்த்திதன்னை நால்வேதக் கடலமுதை
மேலிருங்கற்பகத்தை வேதாந்த விழுப்பொருளில்
மேலிருந்தவிளக்கை விட்டு சித்தன் விரித்தனவே.

"இனம் கழுவேற்றுவித்த" என்றும் பாடம்.
"விரித்தனனே என்று சிலர் கூறுவர்."

(திருமாலிருஞ்சோலை எம்பெருமானைப் போக வொட்டேனென்று தடுத்தல்)

(5 ஆம் பத்து, 3 ஆம் திருமொழி)

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

(ஸஹானா – ராகம்) (அட – தாளம்)

25. துக்கச்சுழலையைச் சூழ்ந்துகிடந்த வலையை அறப்பறித்துப்
புக்கினில் புக்குன்னைக் கண்டுகொண்டேனினிப் போக
விடுவதுண்டே?
மக்களறுவரைக் கல்லிடைமோத இழந்தவள் தன் வயிற்றில்
சிக்கெனவந்து பிறந்து நின்றாய்! திருமாலிருஞ்சோலை யெந்தாய் !

26. வளைத்துவைத்தேனினிப் போகலொட்டேனுன்தனிந்திர
ஞாலங்களால்
ஒளித்திடில் நின் திருவாணை கண்டாய் நீ ஒருவர்க்கும்
மெய்யனல்லை
அளித்தெங்கும் நாடும் நகரமும் தம்முடைத் தீவினைதீர்க்கலுற்றுத்
தெளித்துவலஞ்செய்யும் தீர்த்தமுடைத்
திருமாலிருஞ்சோலையெந்தாய்!

27. உனக்குப் பணிசெய்திருக்கும் தவமுடையேன்,
இனிப்போய் ஒருவன்
தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின்சாயை
யழிவு கண்டாய்
புனத்தினை கிள்ளிப்புது அவிகாட்டி உன் பொன்னடி
வாழ்கவென்று
இனக்குறவர் புதியதுண்ணும் எழில்மாலிருஞ்சோலை யெந்தாய்!

28. காதம்பலவும் திரிந்துழன்றேற்கு அங்கோர் நிழலில்லை
நீருமில்லை உன்
பாதநிழல்லால் மற்றொருயிர்ப்பிடம் நான் எங்கும் காண்கின்றிலேன்
தூதுசென்றாய்! குருபாண்டவர்க் காயங்கோர் பொய்ச்
சுற்றம் பேசிச்சென்று
பேதஞ்செய்து எங்கும் பிணம்படுத்தாய்!
திருமாலிருஞ்சோலை யெந்தாய்!

29. காலுமெழா கண்ணநீரும் நில்லா உடல்சோர்ந்து நடுங்கிக்குரல்
மேலுமெழாமயிர்க் கூச்சுமறா எனதோள்களும் வீழ்வொழியா
மாலுகளாநிற்கும் என்மனனே! உன்னைவாழத்தலைப்
பெய்திட்டேன்
சேலுகளாநிற்கும் நீள்சுனைசூழ் திருமாலிருஞ்சோலை யெந்தாய்!

30. எருத்துக் கொடியுடையானும் பிரமனும் இந்திரனும் மற்றும்
ஒருத்தரும் இப்பிறவியென்னும் நோய்க்கு மருந்தறிவாருமில்லை
மருத்தது வனாய் நின்றமாமணி வண்ணா! மறுபிறவி தவிரத்
திருத்தி உன்கோயிற் கடைப்புகப்பெய்
திருமாலிருஞ்சோலை யெந்தாய்!

31. அக்கரையென்னு மனத்தக்கடலுளழுந்தி உன்பேரருளால்
இக்கரையேறியிளைத் திருந்தேனை அஞ்சேலென்றுகை கவியாய்
சக்கரமும் தடக்கைகளும் கண்களும் பீதகவாடையொடும்
செக்கர் நிறத்துச் சிவப்புடையாய்!
திருமாலிருஞ்சோலை யெந்தாய்!

32. எத்தனை காலமும் எத்தனையூழியும் இன்றொடு நாளை யென்றே
இத்தனை காலமும் போய்க்கிறிப்பட்டேன் இனி
உன்னைப் போகலொட்டேன்
மைத்துனன்மார்களை வாழ்வித்துமாற்றலர்
நூற்றுவரைக் கெடுத்தாய்!
சித்தம் நின்பாலதறிதியன்றே திருமாலிருஞ்சோலை யெந்தாய்!

33. அன்று வயிற்றில் கிடந்திருந்தே அடிமை செய்யலுற்றிருப்பன்
இன்றுவந்து இங்கு உன்னைக் கண்டுகொண்டேன்
இனிப் போகவிடுவதுண்டே!
சென்றங்குவாணனை ஆயிரந்தோளும் திருச்சக்கரமதனால்
தென்றித்திசை திசை வீழச்செற்றாய்! திருமாலிருஞ்சோலை யெந்தாய்!

34. சென்றுலகம் குடைந்தாடும் சுனைத்திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரான், அடிமேல் அடிமைத்திறம் நேர்பட
விண்ணப்பஞ்செய்
பொன்திகழ் மாடம் பொலிந்து தோன்றும்
புதுவைக்கோன்விட்டு சித்தன்
ஒன்றினோடொன்பதும் பாடவல்லார் உலகமளந்தான் தமரே.

நாய்ச்சியார் அருளிச் செய்த திருமொழி

(9 ஆம் திருமொழி)

திருமாலிருஞ்சோலை அழகரை வழிபடுதல்

கலிநிலைத்துறை

(கல்யாணி – ராகம்) (ரூபக தாளம்)

35. சிந்துரச் செம்பொடிப்போல் திருமாலிருஞ்சோலை யெங்கும்
இந்திரகோபங்களே எழுந்தும்பரந்திட்டனவால்
மந்தரம் நாட்டி அன்று மதுரக்கொழுஞ்சாறு கொண்ட
சுந்தரத்தோளுடையான் சுழலையில் நின்று உய்துங் கொலோ!

36. போர்க்களிறுபொரும் மாலிருஞ்சோலையம் பூம்புறவில்
தார்க்கொடி முல்லைகளும் தவளநகை காட்டுகின்ற
கார்க்கொள்படாக்கள் நின்று கழறிச்சிரிக்கத்தரியேன்
ஆர்க்கு இடுகோ! தோழீ! அவன்தார் செய்த பூசலையே!

37. கருவிளையொண்மலர்காள்! காயாமலர்காள்! திருமால்
உருவொளி காட்டுகின்றீர் எனக்கு உய்வழக்கொன்று உரையீர்
திருவிளையாடு திண்தோள் திருமாலிருஞ்சோலை நம்பி
வரிவளையில் புகுந்துவந்தி பற்றும் வழக்குளதே.

38. பைம்பொழில் வாழ்குயில்காள்! மயில்காள்! ஒண்கரு விளைகாள்!
வம்பக்களங்கனிகாள்! வண்ணப்பூவை நறுமலர்காள்!
ஐம்பெரும்பாதகர்காள்; அணிமாலிருஞ்சோலை நின்ற
எம்பெருமானுடைய நிறம் உங்களுக்கு என்செய்வதே!

39. துங்கமலர்ப் பொழில்சூழ் திருமாலிருஞ்சோலை நின்ற
செங்கண் கருமுகிலின் திருவுருப்போல் மலர்மேல்
தொங்கிய வண்டினங்காள்! தொகுபூஞ்சுனைகாள்! சுனையில்
தங்குசெந்தாமரைகாள்! எனக்கு ஓர் சரண்சாற்றுமினே.

40. நாறுநறும்பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு நான்
நூறுதடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன்
நூறு தடாநிறைந்த அக்காரவடி சில் சொன்னேன்
ஏறுதிருவுடையான் இன்றுவந்து இவைகொள்ளுங்கொலோ!

41. இன்றுவந்து இத்தனையும் அமுது செய்திடப்பெறில் நான்
ஒன்று நூறாயிரமாக் கொடுத்துப் பின்னும் ஆளும் செய்வன்
தென்றல் மணங்கமழும் திருமாலிருஞ்சோலை தன்னுள்
நின்றபிரான் அடியேன் மனத்தேவந்து நேர்படிலே.

42. காலையெழுந்திருந்து கரிய குருவிக்கணங்கள்
மாலின்வரவு சொல்லி மருள்பாடுதல் மெய்மை கொலோ
சோலைமலைப் பெருமான் துவராபதி யெம்பெருமான்
ஆலினிலைப் பெருமான் அவன் வார்த்தையுரைக்கின்றதே.

43. கோங்கலரும்பொழில் மாலிருஞ்சோலையில் கொன்றைகள் மேல்
தூங்குபொன் மாலைகளோடு உடனாய் நின்று தூங்குகின்றேன்
பூங்கொள் திருமுகத்து மடுத்தூதியசங்கொலியும்
சார்ங்கவில் நாணொலியும் தலைப்பெய்வது எஞ்ஞான்று கொலோ!

44. சந்தொடு காரகிலும் சுமந்து தடங்கள் பொருது
வந்திழியும் சிலம்பாறுடை மாலிருஞ்சோலை நின்ற
சுந்தரனை, சுரும்பார்குழல் கோதை தொகுத்துரைத்த
செந்தமிழ் பத்தும்வல்லார் திருமாலடி சேர்வர்களே.

(4 ஆம் திருமொழி, முதல் பாசுரம்)

45. தெள்ளியார் பலர் கை தொழும் தேவனார்
வள்ளல் மாலிருஞ்சோலை மணாளனார்
பள்ளிகொள்ளுமிடத்து அடிகொட்டிட
கொள்ளுமாகில் நீ கூடிடு கூடலே.

திருமங்கை ஆழ்வார் அருளி செய்த பெரிய திருமொழி

(முதற்பத்து, 8 ஆம் திருமொழி, 5 வது பாசுரம்)

46. வண்கையான் அவுணர்க்கு நாயகன் வேள்வியில் சென்று மாணியாய்
மண்கையால் இரந்தான் மராமரமேழும் எய்தவலத்தினான்
எண்கையான் இமயத்துள்ளான் இருஞ்சோலைமேவிய எம்பிரான்
திண்கைம்மா துயர் தீர்த்தவன் திருவேங்கடம் அடை நெஞ்சமே

ஸ்ரீ

(2 ஆம் பத்து, 7 ஆம் திருமொழி , 7 ஆவது பாசுரம்)

47. உளங்கனிந்திருக்கும் உன்னையே பிதற்றும்
உனக்கன்றி எனக்கு அன்பொன்றிலளால்
வளங்கனி பொழில்சூழ் மாலிருஞ்சோலை
மாயனே! என்று வாய்வெருவும்
களங்கனி முறவல் காரிகைபெரிது
கவலையோடு அவலம் சேர்ந்திருந்த
இளங்கனி யிவளுக்கு என் நினைந்திருந்தாய்!
இடவெந்தை எந்தை பிரானே!

(4 ஆம் பத்து, 9 ஆம் திருமொழி, 2 ஆவது பாசுரம்)

48. சிந்தை தன்னுள் நீங்காதிருந்த திருவே மருவினிய
மைந்தா அந்தணாலிமாலே சோலை மழகளிறே
நந்தா விளக்கின் சுடரே நறையூர் நின்ற நம்பீ என்
எந்தாய் இந்தளூராய் அடியேற்கு இறையும் இரங்காயே

(7 ஆம் பத்து, 3 ஆம் திருமொழி, 6 ஆவது பாசுரம்)

49. எட்டனைப் பொழுதாகிலும் என்றும்
என்மனத்தகலா திருக்கும்புகழ்
தட்டலர்த்த பொன்னேயலர் கோங்கின்
தாழ்பொழில் திருமாலிருஞ்சோலையங்
கட்டியை, கரும்பீன்ற இன்சாற்றைக்
காதலால் மறைநான்கும் முன்னோதிய
பட்டனை, பரவைத்துயிலேற்றை என்
பண்பனையன்றிப் பாடல் செய்யேனே

(7 ஆம் பத்து, 9 ஆம் திருமொழி, 7 ஆவது பாசுரம்)

50. சேயோங்கு தண் திருமாலிருஞ்சோலைமலை உறையும்
மாயா! எனக்குரையாய் இதுமறைநான் கினுளாயோ
தீயோம்புகை மறையோர் சிறுபுலியூர்ச் சலசயனத்
தாயோ உனதடியார் மனத்தாயோ! அறியேனே!

(9 ஆம்பத்து, 2 ஆம் திருமொழி, 3ஆவது பாசுரம்)

51. வேயிருஞ்சோலை விலங்கல் சூழ்ந்த மெய்ய
மணாளர் இவ்வைய மெல்லாம்
தாயின நாயகராவர் தோழீ தாமரைக்கண்களிருந்தவாறு
சேயிரும் குன்றம் திகழ்ந்த தொப்பச் செவ்வியவாகி
மலர்ந்த சோதி
ஆயிரம் தோளொடு இலங்கு பூணும்
அச்சோஒருவரழகியவா

(9 ஆம் பத்து, 2 ஆம் திருமொழி, 8 ஆவது பாசுரம்)

52. மஞ்சுயர் மாமதி தீண்ட நீண்ட
மாலிருஞ்சோலை மணாளர்வந்து என்
நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்றுநீங்கார்
நீர்மலையார் கொல்! நினைக்கமாட்டேன்
மஞ்சுயர்பொன் மலைமேலெழுந்த
மாமுகில் போன்றுளர் வந்துகாணீர்
அஞ்சிறைப்புள்ளுமொன்று ஏறிவந்தார்
அச்சோ ஒருவரழகியவா!

திருமாலிருஞ்சோலை (1)

(9 ஆம் பத்து, 8 ஆம் திருமொழி)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

53. முந்துற உரைக்கேன் விரைக்குழல் மடவார்
கலவியை விடுதடுமாறல்
அந்தரமேழும் அலைகடலேழும் ஆய
எம்மடிகள் தம்கோயில்
சந்தொடுமணியும் அணிமயில்தழையும்
தழுவிவந்து அருவிகள் நிரந்து
வந்திழி சாரல் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

54. இண்டையும் புனலும் கொண்டிடையின்றி
எழுமினோ தொழுதுமென்று இமையோர்
அண்டரும் பரவ அரவணைத்துயின்ற
சுடர்முடிக்கடவுள் தம்கோயில்
விண்டலர் தூளிவேய்வளர் புறவில்
விரைமலர்க் குறிஞ்சியின் நறுந்தேன்
வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே.

55. பிணிவளராக்கை நீங்க நின்றேத்தப்
பெருநில மருளின் முன்னருளி
அணிவளர் குறளாய் அகலிட முழுதும்
அளந்த எம் அடிகள் தம்கோயில்
கணிவளர்வேங்கை நெடுநில மதனில்
குறவர்தம் கவணிடைத்துரந்த
மணிவளர் சாரல் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மடநெஞ்சே!

56. சூர்மையிலாய பேய்முலைசுவைத்துச்
சுடுசரமடு சிலைத்துரந்து
நீர்மையிலாத தாடகைமாள
நினைந்தவர் மனம்கொண்ட கோயில்
கார்மலி வேங்கை கோங்கலர் புறவில்
கடிமலர்க் குறிஞ்சியின் நறுந்தேன்
வார்புனல் சூழ்தண்மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மட நெஞ்சே!

57. வணங்கலி லரக்கன் செருக்களத்தவிய
மணிமுடி ஒருபதும்புரள
அணங்கெழுந்தவன்தன் கவந்தம் நின்றாட
அமர்செய்த அடிகள்தம் கோயில்
பிணங்கலில் நெடுவேய் நுதிமுகம் கிழிப்ப
பிரசம் வந்திழிதரப் பெருந்தேன்
மணங்கமழ்சாரல் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மட நெஞ்சே!

58. விடங்கலந்தமர்ந்த அரவணைத்துயின்று
விளங்கனிக்கு இளங்கன்றுவிசிறி
குடங்கலந்தாடிக் குரவை முன்கோத்த
கூத்தஎம் அடிகள்தம் கோயில்
தடங்கடல்முகந்து விசும்பிடைப் பிளிறத்
தடவரைக்களிறென்று முனிந்து
மடங்கல் நின்றதிரும் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மட நெஞ்சே!

59. தேனுகனாவிபோயுக அங்குஓர்
செழுந்திரள் பனங்கனியுதிரத்
தானுகந்தெறிந்த தடங்கடல்வண்ணர்
எண்ணிமுன் இடங்கொண்ட கோயில்
வானகச்சோலை மரதகச் சாயல்
மாமணிக்கல்லதர் நிறைந்து
மானுகர்சாரல் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மட நெஞ்சே!

60. புதமிகுவிசும்பில் புணரிசென்றணவப்
பொருகடல் அரவணைத்துயின்று
பதமிகுபரியின் மிகுசினம்தவிர்த்த
பனிமுகில் வண்ணர் தம்கோயில்
கதமிகுசினத்த கடதடக்களிற்றின்
கவுள்வழிக்களி வண்டுபருக
மதமிகுசாரல் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மட நெஞ்சே!

61. புந்தியில்சமணர் புத்தரென்றிவர்கள்
ஒத்தனபேசவும் உகந்திட்டு
எந்தைபெம்மானார் இமையவர் தலைவர்
எண்ணிமுன் இடங்கொண்டகோயில்
சந்தனப்பொழிலின் தாழ்சினை நீழல்
தாழ்வரைமகளிர்கள் நாளும்
மந்திரத்திறைஞ்சும் மாலிருஞ்சோலை
வணங்குதும் வா மட நெஞ்சே!

திருக்கோயில் வெளிப்புற தோற்றம்

அழகர்மலை மேலிருந்து கோயிலின் தோற்றம்

62. வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை
மாமணிவண்ணரை வணங்கும்
தொண்டரைப்பரவும் சுடரொளி நெடுவேல்
சூழ்வயலாலி நன்னாடன்
கண்டல் நல்வேலி மங்கையர்தலைவன்
கலியன்வாயொலி செய்தபனுவல்
கொண்டுஇவைபாடும் தவமுடையார்கள்
ஆள்வர்இக்குரை கடலுலகே.

திருமாலிருஞ்சோலை (2)

(9 ஆம் பத்து, 9 ஆம் திருமொழி)

(பிரிவாற்றாது தலைவனை நாடிச்சென்ற
தலைவியின் நிலையைக் குறித்துத்
தாய் இரங்கிக் கூறிய பாசுரம்)
(ராகம் – கமாஸ்) கலிநிலைத்துறை (தாளம் – ரூபகம்)

63. மூவரில் முன்முதல்வன் முழங்கார் கடலுள்கிடந்து
பூவலருந்திதன்னுள் புவனம் படைத்துண்டுமிழந்த
தேவர்கள் நாயகனைத் திருமாலிருஞ்சோலைநின்ற
கோவலர்கோவிந்தனைக் கொடியேரிடைகூடுங்கொலோ!

64. புனைவளர் பூம்பொழிலார் பொன்னிசூழரங்க நகருள்
முனைவனைமூவுலகும் படைத்தமுதல் மூர்த்திதன்னை
சினைவளர்பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்றான்
கனைகழல்காணுங்கொலோ! கயற்கண்ணி எம்காரிகையே!

65. உண்டுஉலகேழினையும் ஒருபாலகன் ஆலிலைமேல்
கண்துயில்கொண்டுகந்த கருமாணிக்கமாமலையை
திண்திறல் மாகரிசேர் திருமாலிருஞ்சோலைநின்ற
அண்டர்தம் கோவினை இன்று அணுகுங்கொல்!
என்னாயிழையே!

66. சிங்கமதாய் அவுணன்திறலாகம் முன்கீண்டுகந்த
பங்கயமாமலர்க்கண் பரனைஎம் பரஞ்சுடரை
திங்கள்நன்மாமுகில்சேர் திருமாலிருஞ்சோலைநின்ற
நங்கள்பிரானை இன்றுநணுகுங்கொல்! என்நன்னுதலே!

67. தானவன்வேள்வி தன்னில்தனியே குறளாய்நிமிர்ந்து
வானமும்மண்ணகமும் அளந்ததிரிவிக்கிரமன்
தேனமர்பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்ற
வானவர்கோனை இன்றுவணங்கித்
தொழவல்லள்கொலோ!

68. நேசமிலாதவர்க்கும் நினையாதவர்க்கும் அரியான்
வாசமலர்ப்பொழில்சூழ் வடமாமதுரைப்பிறந்தான்
தேசமெல்லாம்வணங்கும் திருமாலிருஞ்சோலைநின்ற
கேசவநம்பிதன்னைக் கெண்டையொண்கண்ணி
காணுங்கொலோ?

69. புள்ளினைவாய்பிளந்து பொருமாகரி கொம்பொசித்து
கள்ளச்ச கடுதைத்த கருமாணிக்க மாமலையை
தெள்ளருவிகொழிக்கும் திருமாலிருஞ்சோலைநின்ற
வள்ளலைவாணுதலாள் வணங்கித்தொழ வல்லள்கொலோ

70. பார்த்தனுக்கு அன்றருளிப் பாரதத்தொருதேர் முன்நின்று
காத்தவன் தன்னை விண்ணோர்கருமாணிக்க மாமலையை
தீர்த்தனைப்பூம்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்ற
மூர்த்தியைக் கைதொழவும் முடியுங்கொல்! என் மொய்குழற்கே

71. வலம்புரியாழியனைவரையார் திரள்தோளன்தன்னை
புலம்புரிநூலவனைப்பொழில் வேங்கடவேதியனை
சிலம்பியலாறுடைய திருமாலிருஞ்சோலைநின்ற
நலந்திகழ்நாரணனை நணுகுங்கொல்! என்நன்னுதலே.

72. தேடற்கரியவனைத் திருமாலிருஞ்சோலை நின்ற
ஆடற்பறவையனை அணியாயிழைகாணுமென்று
மாடக்கொடிமதிள்சூழ் மங்கையார்கலிகன்றிசொன்ன
பாடல்பனுவல்பத்தும் பயில்வார்க்குஇல்லை பாவங்களே

(10 ஆம் பத்து, 1 ஆம் திருமொழி, 8 ஆவது பாசுரம்)

73. பத்தராவியைப்பால்மதியை அணித்
தொத்தைமாலிருஞ்சோலைத்தொழுதுபோய்
முத்தினைமணியை மணிமாணிக்க
வித்தினைச்சென்று விண்ணகர்க்காண்டுமே.

(11 ஆம் பத்து, 2 ஆம் திருமொழி, 8 ஆவது பாசுரம்)

74. மஞ்சுறு மாலிருஞ்சோலை நின்றமணாளனார்
நெஞ்சம் நிறைகொண்டு போயினார் நினைகின்றிலர்
வெஞ்சுடர்போய் விடியாமல் எவ்விடம்புக்கதோ!
நஞ்சு உடலம் துயின்றால் நமக்கு இனி நல்லதே.

(11 ஆம் பத்து, 7 ஆம் திருமொழி, 9 ஆவது பாசுரம்)

75. தேனொடு வண்டாலும் திருமாலிருஞ்சோலை
தானிடமாக் கொண்டான் தடமலர்க் கண்ணிக்காய்
ஆன்விடையேழன் றடர்த்தாற்க்கு ஆளானாரல்லாதார்
மானிடவரல்லரென்று என்மனத்தே வைத்தேனே.

(திருக்குறுந்தாண்டகம் 3 ஆவது பாசுரம்)

76. பாயிரும் பரவை தன்னுள் பருவரை திரித்துவானோர்க்
காயிருந்து அமுதம்கொண்ட அப்பனை எம்பிரானை
வேயிருஞ்சோலை சூழ்ந்து விரிகதிரிரியநின்ற
மாயிருஞ்சோலை மேய மைந்தனை வணங்கினேனே.

(இயற்பா சிறிய திருமடல் 74 ஆவது கண்ணி)

77. சீராரும் மாலிருஞ்சோலை திருமோகூர்
பாரோர் புகழும்வதரி வடமதுரை.

(இயற்பா பெரிய திருமடல் 125 ஆவது கண்ணி)

78. மன்னனை மாலிருஞ்சோலை மணாளனை
கொன்னவிலும் ஆழிப்படையானை.

பூதத்தாழ்வார் அருளிச் செய்த இரண்டாந் திருவந்தாதி

(இரண்டாந்திருவந்தாதி. 46 ஆவது பாசுரம்)

79. பயின்றது அரங்கம் திருக்கோட்டி பன்னாள்
பயின்றதுவும் வேங்கடமே பன்னாள் - பயின்றது
அணிதிகழும்சோலை அணிநீர் மலையே
மணிதிகழும் வண்தடக்கைமால்.

(48 ஆவது பாசுரம்)

80. உணர்ந்தாய் மறைநான்கும் ஓதினாய் நீதி
மணந்தாய் மலர்மகள் தோள்மாலே - மணந்தாய்போய்
வேயிருஞ்சாரல் வியலிருஞாலம் சூழ்
மாயிருஞ்சோலைமலை.

(54 ஆவது பாசுரம்)

81. வெற்பென்றிருஞ்சோலை வேங்கட மென்றிவ்விரண்டும்
நிற்பென்று நீ மதிக்கும் நீர்மைபோல் - நிற்பென்று
உளங்கோயில் உள்ளம் வைத்துள்ளினேன் வெள்ளத்
திளங்கோயில் கைவிடேலென்று.

ஸ்ரீ

பேயாழ்வார் அருளிச் செய்த மூன்றாந் திருவந்தாதி

(61 ஆவது பாசுரம்)

82. பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல் - வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங்கடிகை
இளங்குமரன் தன்விண்ணகர்.

ஸ்ரீ

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி
கீழ்நிஷ்கர்ஷித்த புருஷார்த்தத்தைப் பெறும் பொருட்டுத் திருமாலிருஞ்சோலை மலையை ஆச்ரயிக்கும்படி பரோபதேசஞ் செய்தல்

(பண் – நாட்டம்) தாளம் – ஏழொத்து (கேதாரகௌள – ராகம்)

ஆதி – தாளம்
கலிவிருத்தம்

(2 ஆம் பத்து, 10 ஆம் திருவாய்மொழி)

83. கிளரொளியிளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவியகோயில்
வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ்சோலை
தளர்விலராகில் சார்வது சதிரே.

84. சதிரிள மடவார் தாழ்ச்சியை மதியாது
'அதிர்குரல் சங்கத்து அழகர்தம் கோயில்
மதிதவழ்குடுமி மாலிருஞ்சோலை
பதியது ஏத்தியெழுவது பயனே.

85. பயனல்ல செய்து பயனில்லை நெஞ்சே!
புயல் மழைவண்ணர் புரிந்துறை கோயில்
மயல்மிகு பொழில்சூழ் மாலிருஞ்சோலை
அயன் மலையடைவது அது கருமமே.

86. கருமவன்பாசம் கழித்துழன்றுய்யவே
பெருமலையெடுத்தான் பீடுறைகோயில்
வருமழைதவழும் மாலிருஞ்சோலை
திருமலையதுவே அடைவதுதிறமே;

87. திறமுடை வலத்தால் தீவினைபெருக்காது
அறமுயலாழிப் படையவன்கோயில்
மறுவில்வண் சுனைசூழ்மாலிருஞ்சோலை
புறமலைசாரப்போவது கிறியே.

88. கிறியென நினைமின் கீழ்மைசெய்யாதே
உறியமர்வெண்ணெய் உண்டவன்கோயில்
மறியொடு பிணைசேர்மாலிருஞ்சோலை
நெறிபட அதுவே நினைவதுநலமே.

89. நலமென நினைமின் நரகழுந்தாதே
நிலமுனமிடந்தான் நீடுறைகோயில்
மலமறு மதிசேர் மாலிருஞ்சோலை
வலமுறை எய்திமருவுதல் வலமே.

90. வலஞ்செய்து வைகல் வலம்கழியாதே
வலஞ்செய்யும் ஆயமாயவன் கோயில்
வலஞ்செய்யும் வானோர் மாலிருஞ்சோலை
வலஞ்செய்து நாளும் மருவுதல்வழக்கே.

91. வழக்கென நினைமின் வல்வினை மூழ்காது
அழக்கொடியட்டான் அமர்பெருங்கோயில்
மழக்களிற்றினம் சேர் மாலிருஞ்சோலை
தொழக்கருதுவதே துணிவதுசூதே.

92. சூதென்றுகளவும் சூதும் செய்யாதே
வேதமுன் விரித்தான் விரும்பிய கோயில்
மாதுறு மயில்சேர் மாலிருஞ்சோலை
போதவிழ்மலையே புகுவது பொருளே

93. பொருளென்று இவ்வுலகம் படைத்தவன் புகழ்மேல்
மருளில் வண்குருகூர் வண்சடகோபன்
தெருள்கொள்ளச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்து
அருளுடையவன்தாள் அணைவிக்கும் முடித்தே
(இப்பதினோரு பாசுரங்களின் ஸாரம்சமான மணவாள
மாமுனிகள் அருளிச்செய்த திருவாய்மொழி நூற்றந்தாதி)

கிளரொளிசேர் கீழுரைத்தபேறுகிடைக்க
வளரொளிமால் சோலைமலைக்கே - தளர்வறவே
நெஞ்சைவைத்துச் சேருமெனும் நீடுபுகழ்மாறன்தாள்
முன்செலுத்துவோம் எம்முடி

**(திருமாலிருஞ்சோலை அழகரது திவ்ய
சௌந்தர்யத்தை அனுபவித்தல்)**

கைங்கர்யஸ்வரூபம், பகவத்சேஷத்வ பர்யந்தமான
பகவத் கைங்கர்யமென்னுதல்

தரவு கொச்சகக்கலிப்பா

(பண் – இந்தளம்) (தாளம் – தடையொத்து)

குண்டக்கிரிகை ராகம் – ரூபகதாளம்
(3 ஆம் பத்து, 1 ஆம் திருவாய்மொழி)

94. முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ!
அடிச்சோதி நீநின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ!
படிச்சோதியாடையொடும் பல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ! திருமாலே! கட்டுரையே.

95. கட்டுரைக்கில் தாமரை நின் கண்பாதம் கையொவ்வா
சுட்டுரைத்த நன்பொன் உன்திருமேனியொளி யொவ்வாது
ஒட்டுரைத்து இவ்வுலகு உன்னைப் புகழ்வெல்லாம்
பெரும்பாலும்
பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதீ!

96. பரஞ்சோதிநீ பரமாய் நின்னிகழ்ந்துபின், மற்றோர்
பரஞ்சோதி யின்மையின் படியோவி நிகழ்கின்ற
பரஞ்சோதி நின்னுள்ளே படருலகம் படைத்த எம்
பரஞ்சோதி! கோவிந்தா! பண்புரைக்க மாட்டேனே.

97. மாட்டாதேயாகிலும் இம்மலர்தலைமா ஞாலம்நின்
மாட்டாய மலர் புரையும் திருவுருவம் மனம்வைக்க
மாட்டாத பலசமய மதிகொடுத்தாய் மலர்த்துழாய்
மாட்டே நீ மனம் வைத்தால் மாஞாலம் வருந்தாதே!

98. வருந்தாத அருந்தவத்த மலர்கதிரின் சுடருடம்பாய்
வருந்தாத ஞானமாய் வரம்பின்றி முழுதியன்றாய்!
வருங்காலம் நிகழ்காலம் கழிகாலமாய் உலகை
ஒருங்காக அளிப்பாய்! சீர்எங்கு உலக்க ஓதுவனே!

99. ஓதுவாரோத்தெல்லாம் எவ்வுலகத்து எவ்வெவையும்
சாதுவாய் நின் புகழின் தகையல்லால் பிறிதில்லை
போதுவாழ் புனந்துழாய் முடியினாய் பூவின்மேல்
மாதுவாழ் மார்பினாய்! என்சொல்லியான் வாழ்த்துவனே!

100. வாழ்த்துவார் பல்ராக நின்னுள்ளே நான்முகனை
மூழ்த்த நீருலகெல்லாம் படையென்று முதல்படைத்தாய்!
கேழ்த்த சீர் அரன் முதலாக் கிளர்தெய்வமாய்க்கிளர்ந்து
சூழ்த்தமரர் துதித்தால் உன்தொல் புகழ் மாசூணாதே!

101. மாசூணாச் சுடருடம்பாய் மலராது குவியாது!
மாசூணாஞானமாய் முழுதுமாய் முழுதியன்றாய்!
மாசூணா வான்கோலத்து அமரர்கோன் வழிப்பட்டால்
மாசூணாஉனபாத மலர்ச்சோதிமழுங்காதே!

102. மழுங்காத வைந்நுதிய சக்கர நல்வலத்தையாய்
தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே
மழுங்காத ஞானமே படையாக மலருலகில்
தொழும்பாயார்க்கு அளித்தால் உன்சுடர்ச்சோதி மறையாதே!

103. மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே!
முறையால் இவ்வுலகெல்லாம் படைத்திடந்துண்டுமிழ்ந்
தளந்தாய்
பிறையேறு சடையானும் நான்முகனும் இந்திரனும்
இறையாதல் அறிந்தேத்த வீற்றிருத்தல் இதுவியப்பே

104. வியப்பாய வியப்பில்லா மெய்ஞ்ஞான வேதியனை
சயப்புகழார் பலர்வாழும் தடங்குருகூர்ச் சடகோபன்
துயக்கின்றித் தொழுதுரைத்த ஆயிரத்துள் இப்பத்தும்
உயக்கொண்டு பிறப்பறுக்கும் ஒலிமுந்நீர்ஞாலத்தே.

(இப்பதினோறு பாசுரங்களின் ஸாராம்சமான திருவாய்மொழிநூற்றந்தாதி)

முடியார் திருமலையில் மூண்டுநின்ற மாறன்
அடிவாரந் தன்னில் அழகர் வடிவழகைப்
பற்றி முடியும் அடியும் படிகலனும்
முற்றும் அனுபவித்தான் முன்.

(ஆழ்வார் அழகரைப் பூர்ணாநுபவம் பண்ணமுடியாமல் வருந்த எம்பெருமான் இவரது கலக்கத்தைத் தீர்த்தல்)

கலிவிருந்தம்

(பண் – சீகாமரம் , தாளம் – ஈரொத்து, முகாரி ராகம் – அடதாளம்)

(3 ஆம் பத்து, 2 ஆம் திருவாய்மொழி)

105. முந்நீர் ஞாலம் படைத்த எம்முகில் வண்ணனே!
அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழிஉழல்வேன்
வெந்நாள் நோய் வீய வினைகளை வேரறப்பாய்ந்து
எந்நாள் யான் உன்னை இனிவந்து கூடுவனே!

106. வன்மாவையமளந்த எம் வாமனா! நின்
பன்மாமாயப் பல் பிறவியில் படுகின்றயான்
தொன்மாவல் வினைத் தொடர்களை முதலரிந்து
நின்மாதாள் சேர்ந்து நிற்பது எஞ்ஞான்று கொலோ!

107. கொல்லாமாக்கோல் கொலைசெய்து பாரதப்போர்
எல்லாச் சேனையும் இருநிலத்து அவித்த எந்தாய்!
பொல்லா வாக்கையின் புணர்வினை யறுக்கலறாச்
சொல்லாய் யான் உன்னைச் சார்வதோர் சூழ்ச்சியே!

108. சூழ்ச்சிஞானச் சுடரொளியாகி என்றும்
ஏழ்ச்சிக் கேடின்றி எங்கணும் நிறைந்த எந்தாய்!
தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து நின்தாளிணைக்கீழ்
வாழ்ச்சியான் சேரும்வகை அருளாய் வந்தே.

109. வந்தாய்போலே வந்தும் என் மனத்தினை நீ
சிந்தாமல் செய்யாய் இதுவே இதுவாகில்
கொந்தார் காயாவின் கொழுமலர்த் திருநிறத்த
எந்தாய்! யான்உன்னை எங்குவந்தணுகிற்பனே!

110. கிற்பன்கில்லே னென்றிலன் முனநாளால்
அற்பசா்ரங்களவை சுவைத்த கன்றொழிந்தேன்
பற்பல்லாயிரம் உயிர்செய்த பரமா! நின்
நற்பொற்சோதித்தாள் நணுகுவது என்ஞான்றே!

111. எஞ்ஞான்று நாம் இருந்திருந்து இரங்கிநெஞ்சே!
மெய்ஞ்ஞானமின்றி வினையியல் பிறப்பழுந்தி
எஞ்ஞான்று மெங்கும் ஒழிவறநிறைந்து நின்ற
மெய்ஞ்ஞானச் சோதிக்கண்ணனை மேவுதுமே.

112. மேவுதுன்பவினைகளை விடுத்துமிலேன்
ஓவுதலின்றி உன்கழல் வணங்கிற்றிலேன்
பாவுதொல் சீர்க்கண்ணா! என்பரஞ்சுடரே
கூவுகின்றேன் காண்பான் எங்கெய்தக் கூவுவனே!

113. கூவிக்கூவிக் கொடுவினைத் தூற்றுள் நின்று
பாவியேன் பலகாலம் வழிதிகைத்து அலமருகின்றேன்
மேவியன்று ஆநிரை காத்தவன் உலகமெல்லாம்
தாவிய அம்மானை எங்கு இனித்தலைப் பெய்வனே!

114. தலைப்பெய்காலம் நமன்தமர் பாசம்விட்டால்
அலைப்பூணுண்ணும் அவ்வல்லெல்லாம் அகல
கலைப்பல் ஞானத்து என்கண்ணனைக் கண்டுகொண்டு
நிலைப்பெற்று என்நெஞ்சம் பெற்றது நீடுயிரே!

115. உயிர்களெல்லா வுலகமு முடையவனை
குயில்கொள் சோலைத் தென்குரு கூர்ச்சடகோபன்
செயிரில் சொல்லிசைமாலை ஆயிரத்துள் இப்பத்தும்
உயிரின் மேலாக்கை ஊனிடையொழிவிக்குமே

(இப்பதினோரு பாசுரங்களின் ஸாராம்ஸமான
திருவாய் மொழி நூற்றந்தாதி)

முன்னமழகரெழில் மூழ்கும் குருகையர்கோன்
இன்னவள வென்ன எனக்கரிதாய்த் - தென்னே
கரணக்குறையின் கலக்கத்தைக் கண்ணன்
ஒருமைப் படுத்தான் ஒழித்து.

தம்முடம்பில் எம்பெருமான் மிகுதியாக வைத்துள்ள வாஞ்சையை ஆழ்வார்கால் கட்டி விடுவித்துக்கொண்டு அவனது குணத்தைப் பாராட்டிப் பேசியருளுதல்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

பண் – தக்கேசி, தாளம் – ஏழொத்து, தன்யாசி – ராகம், ஆதிதாளம்

(10 ஆம் பத்து, 7 ஆம் திருவாய்மொழி)

116. செஞ்சொற்கவிகாள்! உயிர்காத்தாட்செய்ம்மின்
திருமாலிருஞ்சோலை
வஞ்சக் கள்வன்மாமாயன் மாயக்கவியாய் வந்து என்
நெஞ்சும் உயிரும் உள்கலந்து நின்றார் அறியாவண்ணம் என்
நெஞ்சுமுயிருமவை யுண்டுதானேயாகி நிறைந்தானே

117. தானேயாகி நிறைந்து எல்லாவுலகும் உயிரும்தானேயாய்
தானேயானென்பானாகித் தன்னைத்தானே துதித்து எனக்குத்
தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ்சோலைக்
கோனேயாகி நின்றொழிந்தான் என்னைமுற்றும் உயிருண்டே

118. என்னை முற்றுமுயிருண்டு என்மாயவாக்கை யிதனுள்புக்கு
என்னைமுற்றும் தானேயாய் நின்றமாய அம்மான்சேர்
தென்னன் திருமாலிருஞ்சோலைத் திசை கைகூப்பிச்
சேர்ந்தயான்
இன்னும் போவேனே கொலோ! என்கொல் அம்மான்
திருவருளே!

119. என்கொல் அம்மான் திருவருள்கள்! உலகும் உயிரும் தானேயாய்
நன்கென்னுடலம் கைவிடான் ஞாலத்தூடே நடந்துழக்கி
தென்கொள் திசைக்குத் திலதமாய் நின்ற
திருமாலிருஞ்சோலை
நங்கள் குன்றம் கைவிடான் நண்ணா அசுரர் நலியவே

120. நண்ணா அசுரர் நலிவெய்த நல்ல அமரர் பொலிவெய்த
எண்ணாதனகளெண்ணும் நன்முனிவர் இன்பம் தலைசிறப்ப
பண்ணார் பாடலின் கவிகள் யானாய்த்தன்னைத்தான்பாடி
தென்னாவென்னும் என்னம்மான் திருமாலிருஞ்சோலையானே!

121. திருமாலிருஞ்சோலை யானேயாகிச் செழுமுவுலகும் தன்
ஒருமா வயிற்றினுள்ளே வைத்து ஊழியூழிதலையளிக்கும்
திருமால் என்னையாளுமால் சிவனும் பிரமனும் காணாது
அருமாலெய்தி அடிபரவ் அருளையீந்த அம்மானே.

122. அருளையீ என்னம்மானே! என்னும் முக்கணம்மானும்
தெருள்கொள் பிரமனம்மானும் தேவர் கோனும் தேவரும்
இருள்கள்கடியும் முனிவரும் எத்தும் அம்மான் திருமலை
மருள்கள் கடியும் மணிமலை திருமாலிருஞ்சோலைமலையே!

123. திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலே என்தலையே
திருமால் வைகுந்தமே தண்திருவேங்கடமே எனதுடலே
அருமாமாயத்து எனதுயிரே மனமே வாக்கே கருமமே
ஒருமாநொடியும் பிரியான்என் ஊழிமுதல்வன் ஒருவனே

124. ஊழிமுதல்வன் ஒருவனேயென்னும் ஒருவன் உலகெல்லாம்
ஊழிதோறும் தன்னுள்ளே படைத்துக் காத்துக் கெடுத்துழலும்
ஆழிவண்ணன் என்னம்மான் அந்தண் திருமாலிருஞ்சோலை
வாழிமனமே! கைவிடேல் உடலும் உயிரும்மங்கவொட்டே.

125. மங்கவொட்டு உன்மாமாயை திருமாலிருஞ்சோலைமேய
நங்கள்கோனே! யானே நீயாகி என்னையளித்தானே!
பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம்
இங்கு இவ்வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்களே.

126. மானாங்கார மனங்கெட ஐவர்வன்கையர் மங்க
தானாங்கார மாய்ப்புக்குத்தானே தானேயானானை
தேனாங்காரப்பொழில் குருகூர்ச்சடகோபன் சொல்லாயிரத்துள்
மானாங்காரத்திவைபத்தும் திருமாலிருஞ்சோலைமலைக்கே
(பதினோரு பாசுரங்களின் ஸாராம்ஸமான திருவாய்மொழி நூற்றந்தாதி)

செஞ்சொற்பரன் தனது சீராரும் மேனிதனில்
வஞ்சித்துச் செய்கின்ற வாஞ்சைதனின் - விஞ்சுதலைக்
கண்டவனைக்கால்கட்டிக்கைவிடுவித்துக்கொண்ட
திண்திறல் மாறன் நம்திரு.

தம்மிடத்து எம்பெருமான் விசேஷமாக விருப்பஞ் செய்வது கண்ட ஆழ்வார், முன்பு தம்மை அகல்வித்து இப்போது இப்படி யிருந்ததற்குக் காரணம் கூறமாட்டாது நிற்கும் அவனது திறத்தை விஸ்மிதமாய்ப் பேசுதல்

கலிவிருத்தம்

பண் – இந்தளம், தாளம் – ஏழொத்து மோஹநராகம் ஆதிதாளம்

(10 ஆம் பத்து 8 ஆம் திருவாய்மொழி)
(1 ஆவது பாசுரம்)

127. திருமாலிருஞ்சோலை மலையென்றேன் என்னத்
திருமால்வந்து என்னெஞ்சு நிறையப் புகுந்தான்
குருமாமணியுந்து புனல் பொன்னித் தென்பால்
திருமால் சென்று சேர்விடம் தென்திருப்பேரே

128. திருப்பேர் நகரான் திருமாலிருஞ்சோலைப்
பொருப்பேயுறைகின்ற பிரான் இன்றுவந்து
இருப்பேனென்று என்னெஞ்சு நிறையப் புகுந்தான்
விருப்பேபெற்று அமுதமுண்டு களித்தேனே

இராமானுச நூற்றந்தாதி

கட்டளைக்கலித்துறை

(மோஹந – ராகம்) (ரூபக – தாளம்)

(106 ஆவது பாசுரம்)

இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலை யென்னும்
பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர் அவை தம்மொடும் வந்து
இருப்பிடம் மாயன் இராமானுசன்மனத்து இன்று அவன் வந்து
இருப்பிடம் என்தனிதயத்துள்ளே தனக்கின்புறவே.

பாசுரங்கள் முற்றுப்பெற்றன.

ஆழ்வார்கள் அருளிச் செய்த பாசுரங்களும் அவர்கள் காலமும்

வ. நிர்.	ஆழ்வார்கள்	காலம்	நக்ஷத்திரம்	திதி	அருளி செய்த மொத்த பாசுரம்	திருமாலிருஞ் சோலை மலையைப் பற்றி பாசுரம்
1	2	3	4	5	6	7
				திதி		
1.	பொய்கையாழ்வார் துவாபுரயுகம்	861902SB.C.4202	திருவோணம்	சு.அஷ்டமி	100	–
2.	பூதத்தாழ்வார் துவாபுரயுகம்	861902SB.C.4202	அவிட்டம்	சு.நவமி	100	3
3.	பேயாழ்வார் துவாபுரயுகம்	861902SB.C.4202	சதயம்	சு. தசமி	100	1
4.	திருமழிசையாழ்வார் துவாபுரயுகம்	862982 SB.C.3122	மகம்	கி. பிரதமை	216	–
5.	மதுரகவியாழ்வார் துவாபுரயுகம்	863879 SB.C.2225	சித்திரை	பௌர்ணமி	11	–
6.	நம்மாழ்வார் கலியுகம்	43 ஆம் நாள் B.C 3102	விசாகம்	பௌர்ணமி	1296	46
7.	குலசேகராழ்வார் கலியுகம்	28 ஆம் நாள் B.C 3074	புனர்பூசம்	சு.துவாதசி	105	–
8.	பெரியாழ்வார் கலியுகம்	47 ஆம் நாள் B.C 3055	சுவாதி	சு. ஏகாதசி	473	34
9.	ஆண்டாள் கலியுகம்	97 ஆம் நாள் B.C 3005	பூரம்	சு.சதுர்த்தி	173	11
10.	தொண்டரடிப் பொடியாழ்வார் கலியுகம்	289 ஆம் நாள் B.C 2813	கேட்டை	கி. சதுர்த்தி	55	–
11.	திருப்பாணாழ்வார் கலியுகம்	342 ஆம் நாள் B.C 2760	ரோகிணி	கி. துதியை	10	–
12.	திருமங்கையாழ்வார் கலியுகம்	397 ஆம் நாள் B.C 2705	கார்த்திகை	பௌர்ணமி	1361	33

அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்

அழகர்கோயில் மேலூர் வட்டம் (மதுரை மாவட்டம்)

அழகர்கோயில் நூபுரகங்கை

மலைச்சாலை திறப்புவிழா 18-7-76

ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது.

"நூபுரகங்கை" என்ற சிலம்பாற்றின் சிறப்பு

அலம்பா வெருட்டாக்
    கொன்று திரியும் அரக்கரை
குலம்பாழ்படுத்துக் குலவிளக்காய்
    நின்ற கோன் மலை
சிலம்பார்க்க வந்து தெய்வ
    மகளிர்கள் ஆடும் சீர்ச்
சிலம்பாறு பாயும்
    தென் திருமாலிருஞ்சோலையே.

—பெரியாழ்வார்

"நூபுரகங்கைக்கு" மலைச்சாலை வழியாக சென்று திரும்பும் பயணிகட்கு மினிபஸ் வசதி செய்யப்பட்டு, செல்வதற்கு ரூ. 5/-ம், திரும்புவதற்கு ரூ. 5/-ம் டிக்கட் கட்டணம் தேவஸ்தானத்தாரால் வசூலிக்கப்படுகிறது.

திருப்பணிகள்

பாண்டியநாட்டு வைணவ ஸ்தலங்களில் பல்வகையாலும் முக்கியத்துவம் பெற்றது அழகர்கோயில், இந்த ஸ்தலம் அழகர்மலை, சோலைமலை, திருமாலிருஞ்சோலை, மாலிருங்குன்றம் என பல பெயர்களால் அழைக்கப்படும். இக்கோயில் மிகவும் தொன்மை வாய்ந்தது.

இந்த ஸ்தலத்தைப்பற்றி ஸ்ரீபெரியாழ்வார், ஸ்ரீ ஆண்டாள், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் ஆகியோர்களாலும் பாடப்பெற்றுள்ளது.

திருப்பணிகள்:-

	குடமுழுக்கு நடைபெற்ற நாள்.
1. அ/மி கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில்,	16.7.95
2. அ/மி பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோயில்	26.6.96
3. அ/மி வீரராகவப்பெருமாள்கோயில், வண்டியூர், மதுரை - 20.	11.2.96
4. மேலூர் அ/மி அனுமார்கோயில்	15.9.96.
5. அ/மி இராக்காயியம்மன் திருக்கோயில் குடமுழக்கு திருப்பணிகள் நடைபெற்றுவருகிறது.	

திருமணங்கள்:-

இவ்வாலய நிதியிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 25 இலவச திருமணங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

உபகோயில்கள்:-

1. அருள்மிகு பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோயில், தல்லாகுளம், மதுரை.
2. அருள்மிகு வீரராகவப்பெருமாள்கோயில், வண்டியூர்,
3. அருள்மிகு அனுமார்கோயில், மேலூர்,
4. அருள்மிகு அனுமார்கோயில், வண்டியூர்,
5. அருள்மிகு18ம் படி கருப்பண சுவாமிகோயில் சோழவந்தான்.
6. அருள்மிகு இராக்காயி அம்மன்கோயில், அழகர்மலை.

கல்வி நிறுவனங்கள்:-

இத்திருக்கோயில் சார்பில் உள்ள கல்வி நிறுவனங்கள் விபரம்:-
29.9.1966 - ஆரம்பப்பள்ளி.
25.7.1974 - நடுநிலைப்பள்ளி.
25.7.1990 - உயர்நிலைப்பள்ளி துவங்கப்பட்டது.
சிறுமியர் கருணை இல்லம் உள்ளது.

அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்

கட்டண விபரம்

	ரூ.பை
1. அர்ச்சனை டிக்கட்	2.00
2. முடி காணிக்கை	10.00
3. நுழைவு காணிக்கை	1.00
4. சகஸ்ரநாமம்	25.00
5. வண்டிகேட் பஸ், லாரி நுழைவு டிக்கட்	5.00
6. வண்டி கேட் பிளசர்	3.00
7. வண்டிகேட் ஸ்கூட்டர்	3.00
8. உபய கால்நடை	5.00
9. அதிரசம் தேங்குழல்	10.00
10. மாவிளக்கு	1.00
11. காதுகுத்து	5.00
12. திருமணப் பதிவு ரசீது	100.00
13. படிவாசல் தேங்காய்	1..00
14. படிவாசல் சந்தனம்	50.00
15. படிவாசல் பரிவட்டம்	10.00
16. படிவாசல் உபயம்	10.00
17. சன்னதி வெங்கலம் & பித்தளை	10.00
18. சன்னதி பரிவட்டம்	10.00
19. கேமரா டிக்கட்	50.00
20. மாற்று மாடு காணிக்கை	100.00
21. மலைச்சாலை வேன்	25.00
22. மலைச்சாலை பஸ்	50.00
23. மலைச்சாலைபிளசர்	15.00
24. மலைச்சாலை ஸ்கூட்டர் பைக்	10.00
25. தீர்த்தக்குடம்	10.00
26. திருமஞ்சனம்	25.00
27. உபயதளிகை (1/4 படிக்கு)	10.00
28. ஆயுள் ஹோமம்	25.00
29. மினிபஸ் நூபுரகங்கை செல்வதற்து	5.00
30. மினி பஸ் நூபுரகங்கையிலிருந்து திரும்புவதற்கு	5.00
31. படிகாணிக்கை	18.00
32. காலணி பாதுகாப்பு	0.25
33. சிறப்பு நுழைவு காணிக்கை.	5.00

அருள்மிகு ராக்காயி அம்மன் கோயில் (இணைப்பு)
அருள்மிரு திருக்கோயில் அழகர் கோயில்

கட்டண விபரம்

	ரூ.பை.
1. தேங்காய் உடைப்பு	2.00
2. கற்பூர ஆரத்தி மற்றும் மாலை சாத்துதல்	0.50
3. பன்னீர்	1.00
4. பிள்ளைத் தொட்டில்	2.00
5. உபய சாமான்கள்	2.00
6. காலணி பாதுகாப்பு	0.25

மேலூர் அருள்மிகு அனுமார் திருக்கோயில் (இணைப்பு
அருள்மிரு திருக்கோயில் அழகர் கோயில்

1. அர்ச்சனை	1.00

தல்லாகுளம்அருள்மிகு பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோயில்

1. அர்ச்சனை	2.00
2. மாலை சாத்துதல்	1.00
3. வடமாலை	50.00
4. காலணி	0.25
5. உபய தளிகை	40.00
6. திருமணம்	100.00
7. மாப்பிள்ளை அழைப்பு	200.00
8. சகஸ்ரநாமம்	5.00

83

அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்
அழகர் கோயில்
(மதுரை மாவட்டம்)

கோயில் அமைப்பு	-	மதுரை மாநகருக்கு வடக்கே சுமார் 21 கி.மீ. தூரத்தில் மலை அடிவாரத்திலுள்ள கோட்டைக்குள் அமைந்துள்ளது. இராசகோபுரம் 112 அடி உயரம்.
கோயில் திறந் திருக்கும் நேரம்	-	காலை 6.00 மணி முதல் பகல் 12.30 மணி மாலை 3.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை. நூபுரகங்கை மலை மீது 4 கிலோ மீட்டர் தொலைவிலும், 1405 அடி (கடல் மட்டத்திலிருந்து) உயரத்திலும் உள்ளது.
தென் திருப்பதி	-	இக்கோயில் "தென் திருப்பதி" என்று அழைக்கப்படுகிறது.

1) பெரியாழ்வார் ,
2) ஆண்டாள்,
3) திருமங்கையாழ்வார்,
4) பூதத்தாழ்வார்,
5) பேயாழ்வார்,
6) மற்றும் நம்மாழ்வார் ஆகிய ஆறு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட 108 திவ்ய தேசங்களுள் ஒன்றாகும். பாடிய பாசுரங்கள் 128.

அழகர் மலையிலுள்ள திருக் கோயில்களின் விபரம்	இருப்பிடம்
1. அருள்மிகு ராக்காயியம்மன் திருக்கோயில், மாதவி மண்டபம்.	மாதவி மண்டபத்திலுள்ள நூபுர கங்கையில் உள்ளது.
2. அருள்மிகு வெள்ளிமலை யாண்டி திருக்கோயில்	அழகர்மலையின் உச்சியில் உள்ளது.
3. அருள்மிகு கருடாழ்வார் சன்னதி	அழகர்மலையில் கருட தீர்த்தத்தின் கரையிலுள்ளது.
4. அருள்மிகு ஆஞ்சநேயர் சன்னதி	அழகர் மலையில் ஸ்ரீ ஹனுமார் தீர்த்தத்தின் கரையிலுள்ளது.
5. அருள்மிகு சக்கரத்தாழ்வார் சன்னதி	அழகர்மலையில், கோயிலின் மேற்கே, மலைக்கு நடுப் பகுதியிலுள்ளது.

குறிப்பு : – மேற்காணும் ஆலயங்கள் 1 முதல் 5 வரைக்கானவை.
கடல் மட்டத்திலிருந்து சுமார் 1,405 அடி உயரத்திலுள்ளது.

பூசை முறைகள் : வைகானச ஆகமம் தென்கலை சம்பிரதாயம் - தினம் 6 கால பூசை உண்டு.

விழாக்கள் :
1) சித்திரைப் பெருந்திருவிழா
2) ஆடி பிரம்மோத்சவம்
3) பங்குனி திருக்கல்யாணம்

வரவினங்கள் :	1391ஆம் பசலி - ரூ. 16,89,974.
	1392ஆம் பசலி - ரூ. 19,92,337.
	1393ஆம் பசலி - ரூ. 19,59,480.
	1394ஆம் பசலி - ரூ. 25,35,522.
	1395ஆம் பசலி - ரூ. 26,53,753.
	1396ஆம் பசலி - ரூ. 31,26,360.
	1397ஆம் பசலி - ரூ. 29,79,376.
	1398ஆம் பசலி - ரூ. 38,54,561.
	1399ஆம் பசலி - ரூ. 45,42,529.
	1400ஆம் பசலி - ரூ. 49,14,527.
வருமாணம்	1401ஆம் பசலி - ரூ. 62,52,043.
	1402ஆம் பசலி - ரூ. 63,09,475.
	1403ஆம் பசலி - ரூ. 69,88,242.
	1404ஆம் பசலி - ரூ. 84,75,859.
	1405ஆம் பசலி - ரூ. 1,01,59,121.
	1406ஆம் பசலி - ரூ. 1,08,22,711.
	1407ஆம் பசலி - ரூ.1,30,72,024.
	1408 ஆம் பசலி - ரூ1,79,53,990.

சமூக நலத்திட்டங்கள் :

1) கருணை இல்லத்தில் சேர்க்க அனுமதிக்கப்பட்ட குழந்தைகள் 100 ஆகும். ஒரு குழந்தைக்கு மாதம் 1க்கு உணவு மற்றும் உடை செலவினங்களுக்காக சராசரி ரூபாய் 500 திருக்கோயில் நிதியில் இருந்து செலவிடப்படுகிறது.

2) சமய நூல் நிலையம்

கல்விக்கூடங்கள்

1) அருள்மிகு சுந்தரராஜா ஆரம்பப்பள்ளி - 29-9-1966
2) அருள்மிகு சுந்தரராஜா உயர்நிலைப்பள்ளி - 25-7-1990

ஓய்வு விடுதிகள் மொத்தம் : 5

முதல் நிலை
வாடகை - ரு . 100-00
அறைகள் - 5.

சிறிய திருமண மண்டபம்
மின்கட்டணம் உட்பட ரூ. 350.

யாத்ரீகர்களின் வசதிக்காக எந்த நேரமும் சமையல் செய்து சாப்பிடவும், தங்குவதற்கும் இலவசமாக பெரிய தகரக் கொட்டகைகள் உள்ளன.

முன்னாள் தர்மகர்த்தாக்களின் பெயர்களும் அவர்கள் பதவி வகித்த காலங்கள் விபரம்

வ. எண்.	அறங்காவலர்களின் பெயர்	காலம் முதல்	வரை
1.	திரு. ஹார்டிஸ் (ஆங்கிலேயர்)		
2.	திரு. பார்சீஸ்		
3.	திரு. பீட்டர்		
4.	திரு. பார்க்கர்		
5.	திரு. க்ளோர்க்		
6.	திரு. ஹாலோவாஸ்		
7.	திரு. லாவிங்ஸ்	1821	1842
8.	திரு. வெள்ளியக்குன்றம் சமீன்தார்		
9.	திரு. மேல அரண்மனை நாச்சியார்		
10.	திரு. குட்டி ஜோஸ்யர்		
11.	திரு. கணபதி அய்யர்		
12.	திரு. திருவேங்கடம் அய்யங்கார்		
13.	திரு. சீனிவாசலு நாயுடு		
14.	திரு. மைசூர் ரங்கைய்யங்கார்	1842	1863
15.	திரு. சுப்பா நாயுடு		
16.	திரு. சுந்தரராசா அய்யங்கார்		
17.	திரு. நீலகண்ட அய்யங்கார்		
18.	திரு. சுப்பையர்		
19.	திரு. கிருஷ்ணய்யர்	1863	
20.	திரு. ஆதப்ப செட்டியார்	1898	1905
21.	திரு. சுப்பா நாயுடு	1905	1911
22.	திரு. அனந்த கிருஷ்ண நாயுடு	1911	1915
23.	திரு. செல்லம் அய்யர்	1918	1919
24.	திரு. கிருஷ்ணசாமி அய்யங்கார்	1919	1926
25.	திரு. கே. கோவிந்தராஜ்	15-4-26	19-12-28
26.	திரு. எம். எஸ். வரதராசுலு நாயுடு	19-12-28	13-10-33
27.	திரு. கே. என். இராதாகிருஷ்ணன்	14-10-33	
28.	திரு. டி.எஸ். ராமசாமி அய்யங்கார்	11-11-33	5-2-37
29.	திரு. என். ராமையா நாயுடு	11-11-33	5-2-37
30.	திரு. வி. சின்ன கிருஷ்ண நாயுடு	11-11-33	5-2-37
31.	திரு. என். ராமையா நாயுடு	6-2-37	

32. திரு. வி. சின்ன கிருஷ்ண நாயுடு 6-2-37
33. திரு. பி. எம். முத்திருளப்பக் கோன்
6-2-37 1944 ஆம்
ஆண்டு வரை பதவியிலிருந்தார்.
34. திரு. ராவ் சாகேப்
எம். துரைசாமி பிள்ளை 8-3-44
35. திரு. ஏ. சிதம்பர முதலியார் 8-3-44
36. திரு. சண்முகம் பிள்ளை 8-3-44
37. திரு. பி. நல்லமணி அம்பலம் 8-3-44
38. திரு. சுந்தரராசன் அம்பலம் 8-3-44
39. திரு. பெரியகருப்பன் செட்டியார் 8-3-44
40. திரு. பி. எஸ். ஏ. கிருஷ்ணய்யர் 8-3-44
41. திரு. எம். எஸ். வரதராசுலு நாயுடு 8-3-44
42. திரு. எம். முத்திருளப்பக் கோன் 8-3-44

ஆலோசனைக் குழு அங்கத்தினர்களாக 3 ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டனர். இவர்கள் 1952 ஆம் ஆண்டு மே இறுதி வரை பதவியிலிருந்ததாக தெரிய வருகிறது.

43. திரு. எம். துரைசாமி பிள்ளை 15-6-52 14-6-57
44. திரு. என். ராமசாமி அய்யங்கார் 15-6-52 14-6-57
45. திரு. பி. எஸ். ஏ. கிருஷ்ணய்யர் 15-6-52 14-6-57
46. திரு. எம். பி. ராமசாமி அம்பலம் 15-6-52 14-6-57
47. திரு. பி. கக்கண் 15-6-52

(மாநில அமைச்சர் பதவி கிட்டியதைத் தொடர்ந்து 1953 இல் பதவியிலிருந்து விலகியதாகத் தெரிகிறது)

48. திரு. வி. எஸ். சிவபிரகாசம் 27-10-53 26-10-58
49. திரு. வெங்கடசாமி நாயுடு 4-10-54 3-10-59
50. திரு. என். ராமசாமி அய்யங்கார் 4-10-54 3-10-59
51. திரு. பி. வி. விநாயகமூர்த்தி நாடார் 4-10-54 3-10-59
52. திரு. எம். பி. ராமசாமி அம்பலம் 4-10-54 3-10-59
53. திரு. பி. நல்லமணி அம்பலம் 15-6-57 14-6-62
54. திரு. பி. அருணாசலம் பி. இ. 11-4-59 10-4-64
55. திரு. வி. முத்து 11-4-59 10-4-64
56. திருமதி பி. கே. ஆர். லெட்சுமிகாந்தம்
அம்மாள் எம். எல். ஏ 12-10-59 11-10-64
57. திரு. என். முத்துசாமி செட்டியார் 19-6-62 18-6-67
58. திரு. பி. நல்லமணி அம்பலம்
பி.ஏ.பி.எல்., 19-6-62 18-6-67
59. திரு. கே. பெரியான் 20-11-63 19-12-68
60. திரு. பி. அருணாசலம், பி.இ. 11-4-64 25-10-67

61.	திருமதி. பி. கே. ஆர். லெட்சுமி காந்தம் அம்மாள்	19-6-65	18-2-70
62.	திரு. எம். கே. செல்லச்சாமி	27-9-67	26-9-72
63.	திரு. வி. பி. எல். பெருமாள் நாயுடு	27-9-67	26-9-72
64.	திரு. எம். சுப்பிரமணியம்	26-3-68	25-3-73
65.	திரு. ஏ. வெள்ளைச்சாமி	12-3-69	11-3-72
66.	திரு. எல். என். எஸ். ராஜாராம்	3-10-70	2-10-73
67.	திரு. எம். பி. அப்புலு	28-8-73	31-5-76
68.	திரு. ஏ. கருப்பணன்	28-8-73	31-5-76
69.	திரு. எம். சின்னசாமி கோனார்	28-8-73	31-5-76
70.	திரு. எம். கே. செல்லச்சாமி அம்பலகாரர்	28-8-73	31-5-76
71.	திரு. தோ. மா. க. அம்பலம்	26-7-74	31-5-76
72.	திரு. எஸ். நாகுரெட்டி தக்கார்	7-6-76	31-7-78
73.	திரு. ஆ. மலையாண்டி, தக்கார்	1-8-78	25-10-78
74.	திரு. வெ. முருகன், தக்கார்	26-10-78	30-10-80
75.	திரு. எம். வெள்ளைச்சாமி	31-1-80	29-1-83
76.	திரு. இ. பெ. அ. பெரிய புலியன் என்ற பொன்னையா	31-1-80	29-1-83
77.	திரு. அ. சித்திரன் அம்பலம்	31-1-80	29-1-83
78.	திரு. கே. எம். செல்வம் என்ற மலையாண்டிகோன்	31-1-80	29-1-83
79.	திரு. எஸ். இராசு	31-1-80	29-1-83
80.	திரு. சி. எஸ். தீனதயாளு, தக்கார்	30-1-80	29-1-83
81.	திரு. பி. பாண்டி, பி.எஸ்.சி., தக்கார்	12-9-83	9-8-98
82.	திரு. டி. இராமச்சந்திரன் பி.ஏ.பி.எல்.,	11-3-88	24-7-88
83.	திரு. எஸ். பாலசுப்பிரமணியன் பி.ஏ.பி.எல்	25-7-88	9-8-98
84.	திரு. கனகய்யா பி.எஸ்.சி.பி.எல்., தக்கார்	10-8-88	3-10-90
85.	திரு. செல்வம் (31-12-91 அன்று பொறுப்பு ஒப்படைக்கிறார்)	24-10-90	31-12-91
86.	திரு. ந. சௌந்தரபாண்டியன், பி.எஸ்.சி.பி.எல்., (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்)	24-10-90	13-12-91
87.	திரு. அ. பாண்டி	24-10-90	13-12-91
88.	திரு. அ. செல்வராசன்	24-10-90	13-12-91
89.	திரு. இராம. சுப்பையா	24-10-90	13-12-91

90.	திரு. போ. இராமராஜு, பி.எஸ்.சி.,பி.எல்., தக்கார்	1-1-92	24-6-92
91.	டாக்டர் திருமதி. சௌமினிரமேஷ் தலைவர் அறங்காவலர் குழு.	25-6-92	24-5-96
92.	திரு. பி. பாண்டி பி.எஸ்.சி.,		
93.	திரு. ஒ. அக்கினி		
94.	திரு. சி. பாலகிருஷ்ணன்		
95.	திரு. சி. கருத்தணன்		
96.	திரு. க. இராஜநாயகம் பி.ஏ.பி.எல்.,	25-6-96	31-7-96
97.	திரு. இ. தேனய்யா எம். ஏ.பி.எல்.,	1-8-97	5-11-96
98.	திரு. ஆ. குமாரசாமி பி.ஏ.,	6-11-96	27-2-97
99.	திரு. பி. பாஸ்கரன் பி.எஸ்.சி.பி.எல்.,	28-2-97	29-3-97
100.	திரு. சு. கோதண்டபாணி பி.ஏ.,	20-3-97	26-10-97
101.	திரு. எஸ். ஆர். வி. சேர்வை பெரியவீரணன்	27-10-97	
102.	திரு. அ. ஆறுமுகம்		
103.	திரு. பி. கங்காதரன்		
104.	திரு. ஆர். பாண்டியன் என்ற தனபாண்டியன்		
105.	திரு. பா. சுபாஷ்சந்திரபோஸ்		

அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர் கோயிலில் பணிபுரிந்த நிர்வாக அதிகாரிகளின் பட்டியல்களின் விபரம்

வ. எண்.	நிர்வாக அதிகாரியின் பெயர்	பதவி வகித்த காலம்	
1.	திரு. கே. என். ராதாகிருஷ்ணன்	14-10-33	18-6-45
2.	திரு. அ. சர்க்கரை (கூடுதல் பெறுப்பு)	19-6-45	28-7-45
3.	திரு. மாதவன் பிள்ளை	29-6-45	28-7-45
4.	திரு. அ. சர்க்கரை (கூடுதல் பெறுப்பு)	29-7-45	27-6-46
5.	திரு. கிருஷ்ணசாமி பிள்ளை	28-8-45	26-9-46
6.	திரு. ஜி. கே. பகவதி கவுண்டர்	27-9-46	4-2-50
7.	திரு. டி. சீனிவாசன் (கூடுதல் பொறுப்பு)	5-2-50	26-2-50
8.	திரு. ஆர். கிருஷ்ணசாமிபிள்ளை	27-2-50	9-3-52
9.	திரு. ஆர். ராமையா நாயுடு	10-3-52	28-1-53
10.	திரு. ராமலிங்க நாயுடு	29-1-53	7-9-54
11.	திரு. கே. கே. மேனன் (கூடுதல் பொறுப்பு)	8-9-54	7-10-54
12.	திரு. டி.எச். விவேகானந்தன் பிள்ளை	8-10-54	3-12-54
13.	திரு. பி. சுப்பையா பிள்ளை	4-12-54	9-5-56
14.	திரு. எம். தியாகராச முதலியார்	10-5-56	2-6-57
15.	திரு. ஆர். கிருஷ்ணசாமி பிள்ளை	3-6-57	31-7-57
16.	திரு. எம். வீரபாகு	1-8-57	15-6-58
17.	திரு. கே. சுப்பையா பிள்ளை	16-6-58	30-6-58
18.	திரு. ஆர். கிருஷ்ணசாமி பிள்ளை	1-7-58	23-1-59
19.	திரு. சி. எஸ். தீனதயாளு	24-59	7-4-60
20.	திரு. ஆர். பி. என். கிருஷ்ணசாமி பிள்ளை	8-4-60	1-6-60
21.	திரு. பி. என். கோபால்சாமி	1-6-60	9-6-65
22.	திரு. பி. ராமசாமி	10-6-65	4-4-66
23.	திரு. பி. அருணாசலம் பி.இ.	4-4-66	9-5-66
24.	திரு. எஸ். ராமசாமி	10-6-66	15-4-67
25.	திரு. கே. கே. மேனன்	16-4-67	23-6-67
26.	திரு. அ. சண்முகசுந்தரம்	24-6-67	23-8-67
27.	திரு. என். சிவராமன்	24-8-67	5-2-68
28.	திரு. அ. சண்முகசுந்தரம்	6-2-62	5-3-68
29.	திரு. பி. கே. வைத்தியநாதன்	25-3-68	2-11-68

30.	திரு. கேப்டன் சுவாமிநாதன்	3-11-68	3-6-69
31.	திரு. இ. பிச்சையா	1-7-69	10-10-71
	துணை ஆணையர்/நிர்வாக அதிகாரிகள்		
32.	திரு. ஆர். திருவேங்கடசாமி	11-1-71	14-9-71
33.	திரு. டி. எம். முத்துவேல் (கூடுதல் பொறுப்பு)	15-9-71	7-10-71
34.	திரு. பி. வேணுகோபால்	8-10-71	24-6-73
35.	திரு. டி. ராமச்சந்திரன்	25-6-73	19-6-75
36.	திரு. எஸ். நாகுரெட்டி	19-6-75	31-7-78
37.	திரு. ஆர். மலையாண்டி பி.ஏ.பில்.,	1-8-78	25-10-78
38.	திரு. வெ. முருகன்	26-10-78	7-6-80
39.	திரு. பி. புலியூருடையான்	8-6-80	7-4-81
40.	திரு. வி. வாசகப்பெருமாள் பி.காம்.பி.எல்.,	7-4-81	9-11-81
41.	திரு. வெ. முருகன்	10-11-81	12-4-82
42.	திரு. அச்சுக்குட்டன்	13-4-82	31-5-83
43.	திரு. எஸ். கனகய்யா பி.எஸ்.சி.பி.எல்.,	1-6-83	13-7-83
44.	திரு. ஆர். அரங்கசுவாமி பி.எஸ்.சி.பி.எல்.,	14-7-83	31-7-85
45.	திரு. எஸ். மகராசன் பி.ஏ.,பி.டி.,	1-6-85	2-4-87
46.	திரு. என். சிவனாண்டி பி.ஏ.,	3-4-87	27-6-89
47.	திரு. என். தியாகராசன் பி.காம்.,	28-5-89	—
	துணை ஆணையர்/நிர்வாக அதிகாரிகள்		
48.	திரு. அ. ஜெயராமன் பி.ஏ.,	29-1-93	31-3-93
49.	திரு. போ. இராமராஜு பி.எஸ்.சி.,பி.எல்.,	1-4-93	21-11-93
50.	திரு. இ. பொன்னப்பபிள்ளை, பி.காம்., பி.எல்.,	22-11-93	30-4-94
51.	திரு. ஏ. பட்டாபி சுப்பிரமணியன், பி.ஏ., (கூடுதல் பொறுப்பு)	1-5-94	2-8-94
52.	திரு. ஆர். குமாரசுவாமி பி.ஏ.,	3-8-94	5-9-95
53.	திரு. இ. தேனையா எம்.ஏ., பி.எல்.,	6-9-95	22-6-96
54.	திரு. க. இராஜநாயகம், பி.ஏ., பி.எல்., (கூடுதல் பொறுப்பு)	23-6-96	31-8-99
55.	திரு. இ. தேனையா எம்.ஏ., பி.எல்.,	1-9-96	5-11-96
56.	திரு. ஆர். குமாரசுவாமி பி.ஏ.,	6-11-96	27-2-97
57.	திரு. பி. பாஸ்கரன் பி.எஸ்.சி., பி.எல்.,	28-2-97	19-3-97
58.	திரு. சு. கோதண்டாபணி பி.ஏ.,	20-3-97	31-12-98
59.	திரு. த. மகாதேவன் பி.ஏ., பி.எல்., முதல் பணியாற்றி வருகிறார்.	1-1-99	

SRI

Plan - Forts of Algapuri and Hiranyan with Thirumalirunjolaimalai Temple

(Alagar Kovil)



Scale 1″ = 6 Chs.

(For details see next page)

EXPLANATION OF THE PLAN

1. Garbagraham and Somachchanda Vimanam-Within Nangal Kunramprakaram.
2. Sri Kshetra Palas Sannidhi - 'Munayadarayyan Thirumantapam'
3. Sri Valamburi Vinayaka's Sannidhi (do)
4. Aryan Vassal.
5. Aryan Mantapam with Sri pakshiraja's Sannidhi Once Gold Plated.
6. Raghava Raja's Pandiyetha Mantapam.
7. Golden Dwajasthambam.
8. Sri Alwar's Sannidhi.
9. Sri Kalyana Sundaravalli Thayar's Sannidhi
10. Sri Sudarsana's Sannidhi.
11. Sayyadesa "palliyarai" with Ivory Vimanam and the Golden "Bala Gopalan Thiruppalli Kattil."
12. Sri Yoganarasimha.
13. Sri Godha's Sannidhi.
14. Thiru Mallaikkiner.
15. Sri Saraswathi's Sannidhi.
16. Yagasala.
17. Sri Desavathara Sannithi.
18. Kovil Pon Meinda Perumal Thirumantapam.
19. Thandaman Gopuram with the Famous Wooden Carved Doors.
20. Sri Rama's Sannidhi.
21. Sri Krishna's Sannithi.
22. Sri Kalyana Mantapam with its Rich Sculptural Works.
23. Sri Govardhana Fountain
24. Kodai Thirunal Mantapam (Choultry)
25. Sri Manavala Mamuni Sannidhi-Ruins
26. Sri Udayavar Sannidhi
27. Thirumalirunjolai Jeer Mantapam
28. Kudhirai Vahana Mantapam
29. Sri Rama Kalanjiam with Gaja Lakshmi Shrine.
30. Sri Lakshmana Kalanjiam
31. Yathirajan Thirumantapam
32. Vandivasal
33. Sri Padinettampadi Gopuram and Shrine
34. Yanaivahana Mantapam
35.
36. Mound where on stand Mudi shed and Sacrifical Alters beneath which is reputed to exist a Siva Temple
37. Hiranyan (Iravan) Fort Gate
38. Thiruthther Nilayam
39.
40. Thirumalai Nayak's Mantapam, housing the Statue of. Thirumalai Nayak and Mutthalu Nayak with their consorts.
41. Sri Srinivasan's Sannidhi Ruins
42. Thiruthther veedhi
43. Mayya Veedhi Central Main Road
44. Agni pushkarani
45. Raya Gopuram
46. Vijaya Dasami Mantapam
47. Alangara Vinayagar
48. Sri Narayana Pushkarani Perumal Urani
49. East Fort Gate
50. South Fort Gate
51. West Fort Gate
52. North Fort Gate
53. Aramtahthu Kulam—"Arama Vapi"
54. Periyalvar Nandavanam
55. Periyalvar Mantapam
56. Sadirilamadavar Sannidhi
57. Thiruchilambaru-Sri Nupura Ganga
58. Alagiya Manavalan Kinar
59. Vasantha Mantapam with its famous Mural Paintings
60. Minor Shrines.
61. Vasantha Agraharam
62. Upper Ghat Road to Nupura Ganga, Periya Aruveedu
63. Lower Ghat Road leading to Hanumar Theertham, Garuda Theertham, Nupura Ganga etc.,
64. Lord Alagar's Hills
65. Staff quarters
66. Pilgrims Rest house

N. B.— Space prohibits noticing in detail the Alagar's Hills, with their very many Theerthams, Shrines Mantapam? etc., as well as the noticing of the many and numerous minor shrines and various other items and objects of interest such as the Gurukala, the Library, the Museum etc., etc ,

கல்யாண மண்டபத்துடன் கோயில் தோற்றம்



குருகுலம் ஆப்செட் பிரிண்டர்ஸ் (மகளிர் தொண்டு நிறுவனம்), வேதாரண்யம்—614 810